Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 10/00

දිනමුරසු වාරමලර්

மார்ச். 12-18, 1995

# வாரமலர்
# தினமுரசு

THINA... LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 93



## நெருக்கடி பூநகரியில்!

## பேச்சுக்கு

## தமிழக சிறை உடைப்பு

## புலிகள் தப்பியது ஏன்?

எக்ஸ்ரே ரிப்போர்ட்



ரசிகன் தரும் உண்மைக் கதை

கிரைம் டயறி

■ வாலாட்டிய தயாரிப்பாளருக்கு நடிகை உதை!

ருசிகர ஜில் ஜில் தகவல்கள்

# முரசம்

## அவசரம் கூடாது

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்,
பேச்சுவார்த்தைகள் மூலமாக
அரசியல் தீர்வை
எதிர்பார்த்த மக்கள்
ஏமாற்றமடையும் சூழல்
ஏற்பட்டுவருகிறது.

அரசியல் பிரச்சனைகள் குறித்து
பேசுவதையும்- அன்றாடப்
பிரச்சனைகள் தொடர்பாகப்
பேசுவதையும்
சம காலத்தில் முன்னெடுக்க
அரசும்-புலிகளும
தவறியிருந்தனர்.

உடனடிப்பிரச்சனை குறித்த
சில விவகாரங்கள்-
இரு தரப்புக்கும் இடையிலான
நம்பிக்கை-புரிந்துணர்வு
என்பவற்றின் அடிப்படையில்
தீர்வு காணப்பட வேண்டியவையாகும்.

அந்த நம்பிக்கை-புரிந்துணர்வு
மூன்று கட்டப் பேச்சுக்களில்
முற்றிலுமாக ஏற்பட்டுவிடாது.

ஆனால், மூன்று கட்டங்களும்
உடனடிப் பிரச்சனைகளைச் சுற்றியே
சுழன்று கொண்டுமிருந்தன.

தமிழ் பேசும் மக்களது
எதிர்பார்ப்புக்களும், அபிலாசைகளும்
அரசியல் பிரச்சனைகள்-
அரசியல் ஜனநாயக கோரிக்கைகள்.
நேர்மையான அரசியல் தீர்வே
அவற்றுக்கான தீர்வாக முடியும்.

பூநகரிப்பாதையில் அரசு
இராணுவத்தை முற்றாக அகற்றவில்லை
என்பதை வைத்து மட்டுமே
சந்திரிக்கா அரசு மீது
முழுதாக சந்தேகம் கொள்வது
சரியானதல்ல.

பூநகரி-ஆனையிறவு
இராணுவ முகாம்கள் இருந்தபோதும்
கிளாலி கடல் ஏரித் தடையை
நீக்கினால் போதும் என்று
முன்னர் புலிகள் கோரினார்கள்.

ஆனால்- இப்போது
பூநகரியில் ஒரு முடிவுகாணாமல்
அரசியல் பேச்சுவார்த்தைக் கதவு
திறக்கப்படமாட்டாது என்று
புலிகள் ஒரே பிடியில் நிற்பது
கொள்கையில் உள்ள பிடிவாதத்தைக்
காட்டலாமே தவிர
பேச்சு மேசையில்
விட்டுப் பிடிக்கும் அணுகுமுறையை
வெளிப்படுத்துவதாக அமையாது.

அதே சமயம்,
புலிகளோடு பேசிய ஒரு விடயத்தை
மூன்று கட்டப் பேச்சுக்களில்
ஆராயப்பட்ட ஒரு விவகாரத்தை
அரசு தன்னிச்சையாக முடிவெடுத்து
அமுல்படுத்த நினைத்தது சரியல்ல.

புலிகளின் முடிவில்லாமல்
யாழ் குடாநாட்டு மக்கள்
போக்குவரத்தில் ஈடுபடுவது இயலாது.
பாதையை திறப்பது அரசின்
கையிலே இருந்தாலும்
பயணிகள் வருவதும், போவதும்
புலிகளது அனுமதியைப் பொறுத்ததே.

இதனை நன்கு தெரிந்தும்
அரசு அவசரப்பட்டு
பாதைத் திறப்பு முடிவை
புலிகளது கோரிக்கைக்கு மாறாக
அறிவித்தமை விவேகமாகாது.

இல்லையெனில், புலிகளோடு
பேசுவதற்கு முன்னரே
பூநகரி மற்றும் ஆனையிறவுப் பாதைகளை
அரசு தானாகவே திறந்திருக்கலாம்.

அபிப்பிராயத்தை கேட்டுவிட்டு
அதற்கு புலிகள் பதிலும் சொல்லி
கோரிக்கையும் முன்வைத்த நிலையில்
ஒரு தரப்பு முடிவாக
அறிவிப்பு வெளியாவது
மறுதரப்பை எரிச்சல்படுத்தும்.

நீயா? நானா?
என்ற வறட்டுக் கௌரவம்
பேச்சுக்கு குறுக்கே தோன்றும்.
பாதை திறப்பு அறிவிப்பில்
அரசு அவசரப்பட்டு விட்டது
என்றே கருதமுடிகிறது.

தற்போதைய நிலையில்
அரசும்-புலிகளும் முரண்டுபிடித்து
மோதல் உருவாகுவதை
மக்கள் விரும்பவில்லை.

இரு தரப்பும்
ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டுவதில்
விரோதம் வளருமே தவிர
விவேகமான முயற்சிகள் வளராது.

அரசு தமிழ் பேசும் மக்களுக்கு
எத்தகைய தீர்வை வழங்க
தயாராக இருக்கிறது என்பதை
அறிய தமிழ் பேசும் மக்கள்
விரும்புகிறார்கள். அதனை
புலிகளும் அவசரப்பட்டு
கெடுத்துவிடக்கூடாது என்பதே
அனைவரது விருப்பமுமாகும்.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை-
என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## இயேசுவின் சமாதானம்

"உங்களைப் பகைக்கிறவர்களுக்கு அன்பு செய்யுங்கள். உங்களை வெறுப்பவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை சபிக்கிறவர்களுக்கு ஆசி கூறுங்கள். உங்களைத் தூற்றுபவர்களுக்காகச் செபியுங்கள், ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு, உன் மேலாடையைப் பறிப்பவனுக்கு உள்ளாடையையும் மறுக்காதே" (லூக்6:27-29)

மேலே கூறப்பட்ட இந்த சொற்களை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கு அன்பு செய்வதில் என்ன இருக்கிறது. மாறாக பகைவர்களையும் பாசத்தோடு அணைக்கும் பண்புதான் மேலானது. எனவேதான் இயேசுநாதர் தன்னை சிலுவையில் அறைந்த பகைவர்களுக்காகவும் தேவனிடம் வேண்டிக்கொண்டார். "என் தேவனே இவர்கள் அறியாமற் செய்கிறார்கள்; இவர்களை மன்னியும்" என்றார்.

ஆம். "ஒருவருக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; கூடுமானால் உங்களால் ஆனமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாய் இருங்கள்." (உரோ 12:17-18) என்று கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

"சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்" (மத் 5:9) ஆக, சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் என்றும் அவர்கள் தேவனுடைய புத்திரர் என்றும் இயேசு பெருமான் கூறியுள்ளார்.

எனவே, நாம், பகைமையைப் போக்கி சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு எம்மாலான எல்லா வழிவகைகளையும் கடைப்பிடிப்போமாக. கர்த்தர் அந்த நல்லருளை நம்மேல் பொழிவாராக.

ஏ.பி.வி.கோமஸ்.

## கஸ்தூரி போன்ற மனிதர்!

ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது: குர்ஆனைக் கற்று, பிறகு அதனை ஓதி வாருங்கள். குர்ஆனைக்கற்று, அதனைஓதி அதனைத் தஹஜ்ஜுத் தொழுகையிலும் ஓதி வருகிற மனிதருக்கு உதாரணமாகிறது, கஸ்தூரி நிரப்பப்பட்ட பையைப் போன்றதாகும். அது வீடு முழுவதும் வாசனை வீசுகிறது. குர்ஆனைக் கற்று,அது அவருடைய நெஞ்சிலிருக்கும் வரையிலும் (அமல் செய்யாமல்) தூங்கி விடுகிற மனிதனுக்கு உதாரணமாகிறது. வாய் கட்டப் பட்ட கஸ்தூரிப் பையைப் போன்றதாகும் என ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

எந்த மனிதர் குர்ஆனைக் கற்று அதைப் பாதுகாத்து இரவு நேரத் தொழுகையில் அதனை ஓதி வருகிறாரோ அவர், திறந்து வைக்கப்பட்ட ஒரு கஸ்தூரிப் பையைப் போன்றவராவார். அதன் மணம் வீடு முழுவதும் கமழ்கிறது. இவ்வாறே, அந்த ஹாபிஸுடைய ஓதலின் காரணத்தால் அவ்வீடு முழுவதும் ஒளியினாலும் பரக்கத்தினாலும் நிரப்பம் பெற்றதாகி விடுகிறது.

அந்த ஹாபிஸ் தூங்கி விடுவாரானால், அல்லது அலட்சியத்தினால் ஓதாமல் இருந்து விடுவாரானால், அப்பொழுதும் அவருடைய இதயத்திலிருக்கும் பரிசுத்த வேதம் கஸ்தூரியாகவே இருக்கிறது. எனினும், அவருடைய அலட்சியத்தினால் மற்றவர் அதிலிருந்து பரக்கத்துக்களைப் பெற முடியாதவாறு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆனல், அவருடைய இதயம் எப்பொழுதும் அக்கஸ்தூரியைத் தன்னுள் வைத்துக் கொண்டே இருக்கிறது.

வெல்லம்பிடிய- கவிப்பிரியா நிஷா.

## கவிதைப்போட்டி இல-90

### பரிசுக்குரிய கவிதை

### சரித்திரம்

வைத்தியமில்லா
காதல்
நோயால்,
சரித்திரமாக்கப்பட்டது
இந்த
காதல் சின்னம்

செல்வி.சுப்ரமணியம் வாணீஸ்வரி-
அப்பர்கலஹா.

### கண்ணீர் துளி

"காலத்தின் மேனியில்
காதல் விழிகளின்
மற்றுமோர்
கண்ணீர்த்துளி.."

கற்பிட்டி முனாஸ்.

### தவிப்பு

"தாஜ்மகால் பிம்பம்
தண்ணீரில் உள்ளது
தவிக்கும் என் உள்ளம்
கண்ணீரில் உள்ளது"

ஏ.பி.வி.கோமஸ்
மாத்தளை.

### காதல்

உலகமே...
உயிரற்ற சின்னத்தை நீ
உன் முதுகில் சுமக்கிறாய்
உயிருள்ள காதலை ஏன்
உன் வயிற்றில் ஒழிக்கிறாய்?

எ.எச்.எம்.மௌஜுத்-ஹிஜ்ராபுரம்.

### அழகு

பூமிக்கு
உன் நிழல் அழகு,
காதலுக்கு
உன் நிஜம் அழகு!

சித்தி ஜெமீலா இக்பால்
காத்தான்குடி-6.

### கண்ணீர்

அடக்கப் பட்டிருப்பது
அடித்தளத்தின் கீழே
தண்ணீர் மட்டுமல்ல
கண்ணீரும்கூட
காதல்
மன்னவனின்.

முஷைராக் ஹுஸ்னாஹ்.
அக்கரைப்பற்று.

### காதல் சின்னம்

சாஜஹான்
காதல் சின்னமாக
தாஜ்மஹாலைக் கட்டினான்;
ஆஜானபாகுவான
அத்தானோ
என் காதலுக்காக
எவளையோ கட்டினான்!

செ.குணரத்தினம்-மட்டக்களப்பு.



## கவிதைப் போட்டி இல-93



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 18.03.95

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 93
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

### அன்றும் இன்றும்

கட்டிய மனைவிக்காக கணவர்
தாஜ்மகாலைக் கட்டினான் சாஜகான் அன்று
கிட்டிய மனைவியர்களையே எட்டி உதைத்துப்
பட்டினியும் போடுகிறார் கணவர்கள் இன்று.

வ.முரளீதரன்-களுவாஞ்சிக்குடி.

### தெய்வீகக் காதலின் நினைவகம்

"மன்னவன் சாஜகான் காவியம்
மாசிலாக் காதலின் ஓவியம்
மங்கை மும்தாஜின் நினைவகம்
மகத்தான தாஜ்மகால் உருவகம்"

திருமதி சபீனா சித்தீக்- மூதூர்.

### 'பார்'

என் கற்பனை
கோட்டையை
உடைத்தவளே
ஒரு நிமிடம்
தாஜ்மஹாலை
பார்

பி.பாலச்சந்திரன்
மாத்தளை.

### பளிங்கு அதிசயம்

மும்தாஜே!
முகர்ந்தேன் உன்
வாசமதை,
பகர்ந்தேன் என்
நேசமதை.
பிறைசுற்றும் பளிங்கு
அழியுமட்டும்
பறைசாற்றும் நமையிந்த
பளிங்கு அதிசயம்.

என்.கங்காதரன்
நீர்கொழும்பு.

### இன்றும் காதல்

தவமிருந்தாலும் தாஜ்மஹாலை
காதலிக்கு காட்டமாட்டேன்!
ஏன் தெரியுமா?
என்னையும் கட்டச்சொல்லி
நச்சரித்தால் நான் தொலைந்தேன்!

ஆ.மு.மோகனராஜ்-ஆல்கர்னோயா.

### எதிர்பார்ப்பு

காணக் கண்கோடி வேண்டும்
அந்த தாஜ்மகாலும் தோற்றுவிடும்
கண்ணே!
அகமெனும் சாம்ராஜ்யத்தில்
நான் அமைத்திருக்கும்
உன் நினைவுச் சின்னம்
மனவிழி திறந்து நீ அதை
ஏற்கும் நாள் என்று வரும்?

ந.ரதீஸ்வரன்- தம்பிலுவில்-07.

### காதல் அர்ப்பணம்

கண்ணுக்குள்ளே பெண்ணை நினைத்து
கலை வடித்த காதல் சின்னம்
நெஞ்சுக்குள்ளே அவளை வைத்து
கட்டிய காதல் சாம்ராஜ்யம்
காதலிக்கு அவன் சமர்ப்பணம்
வாழும் காதலுக்கு இது அர்ப்பணம்.

தெ.லோஜனா-கொழும்பு-5.

### கவி இல்லம்

இது கல்லறையல்ல
புதிய கவிஞர்களை
வளர்க்கும் கவி இல்லம்!

எம்.சிவகுமார்-காலி.

### காதல் சோகம்

வெள்ளையாய் ஒரு சோகம்
வையகம் இருக்கும் மட்டும்
காதலின் நினைவு சின்னம்
காலமெல்லாம் கண்ணீர் துளிகளுடன்

எம்.அரவிந்தன்-நீர்கொழும்பு.

### ஞாலத்துக் காதல் சின்னம்!!

காதலர் செத்தபின்பும்
காதலது சாகாமல்
காலம் கதை பயில
காதலில் பண்பட்ட
சாஜகான் கட்டியதோ!
சீனத்துச் சுவரை மிஞ்சும்
ஞாலத்துக் காதல் சின்னம்!!

க.சுசீலா-மட்டக்களப்பு.

### சின்னம்

புவியில் தோன்றிய
புனிதக் காதலின்
உண்மைச் சின்னம்
உயர்ந்து நிற்கிறது.

எஸ்.கோடீஸ்வரன்-பொகவந்தலாவ.

### காதல் காணிக்கை

அர்த்தமுள்ள காதலொன்றின்
அடையாளச் சின்னமொன்று,
பொருத்தமுள்ள மனமிரண்டும்
புரிந்த தூய்மைக் காதலுக்காய்
சரித்திரத்தில் இடம் பிடித்ததோ.
காதல் சந்ததிக்கே
புனித காணிக்கையானதோ!

வை.சித்திக்கிருஷ்ணா-பாண்டிருப்பு-1.

## வாசகர் சாலை

அன்பின் புதிய நிலாவே!

உன்னை காணாவிட்டால் ஏனிந்த ஏக்கம், உன்னை வாசிக்காவிட்டால் ஏனிந்த மயக்கம்..! நிலாவே நீ அறியாயோ நாம் முத்தமிடும் முரசினிலே முழுநாளாகப் பார்த்ததெல்லாம், நித்தமிதம் இன்பமென.

அ.மு.நிலாம்தீன், நிஸ்ரீன் கின்னியா-03.

□□

**முரசின் அரசியல் ஆருடங்கள் பொய்ப்பதில்லை என்பதை நாட்டு நடப்புக்கள் மெய்ப்பிக்கும்போது முரசின் நேசர்களான என்போன்றோருக்கு நிச்சயம் பெருமை. தொடரட்டும் முரசின் பணி.**

வா.தர்மராஜா-கொழும்பு-5

உன்னை காதலிக்கின்றோம். நீ சுமந்து வரும் 'தாய்' என்ற நாவல் எம் இதயங்களில் மெல்ல மெல்ல இடம் பிடிக்கிறது.

பிரசாந்த் பிரியர்கள்-
செல்வி-மோகனா அர்ஜுனன்,
செல்வன்கள்-எம்.அருட்செல்வம்,
வி.புண்ணியமூர்த்தி,
எல்.ஜெயக்குமார்-இரத்தினபுரி.

□□

அன்பின் தினமுரசே,

உலக அதிசயங்களை சுமந்து வருவதிலும் என்னைப் போன்ற மாணவர்களுக்கு பற்பல பொது அறிவு விடயங்களை அறியத்தருவதிலும் நீ என்றுமே முதலிடம் தான். நீடூழி வாழ்க. முரசே!

செ.சிவபெருமான்-பலாங்கொடை.

□□

வாராவாரம் இனிய பல செய்திகளை வெளியிட்டு வரும் முரசுக்கு என் இனிய பாராட்டுக்கள் பல. விசேடமாக எக்ஸ்ரே ரிப்போர்ட், ரசிகனின் இலக்கிய நயமும் கூடவே முரசுக்கு இனிமை சேர்க்கத் தவறுவதில்லை.

பெ.ரஜேந்திரன்-பொரலங்கட.

□□

வாரம் தோறும் வலம் வரும் அன்பு முரசே!

உனது பக்கங்களில் சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் என்னைக் கவர்ந்து விட்டன. உனது பணியை வாழ்த்த எனக்கு வார்த்தைகள் இல்லை. உனது பணி தொடர எனது நல்லாசிகள்.

ஆர்.பற்மலதா-செங்கலடி.

□□

என்னோடு ஒவ்வொரு வாரமும் முட்டி மோதும் தினமுரசே- நீ உன் உடலில் சுமந்து வரும் "எக்ஸ்ரே ரிப்போர்ட்", "மகா சூலம்", மக்சீம் கார்க்கியின் "தாய்", "மகாபாரதம்", "அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை" போன்ற ஆக்கங்களோ சூப்பரிங் சூப்பர்.

அறூசியா அபூபக்கர்
கல்முனை.

□□

அரும்பாக மலர்ந்து
எம்மை சுறுசுறுப்பாய்
படிக்க வைக்கும்
உன் இதழ்கள்
என்றென்றும் எமக்கு
தேன் சுவைதான் தருகின்றன!

எம்.சிவகுமார், சீலன்-காலி.

□□

தித்திக்கும் தினமுரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களிலும் சூடு, சுவை, சுவாரசியம் என்பன கலந்திருக்கின்றன. வாரம் ஒரு முறை மலர்ந்தாலும் அரசியல் கட்டுரைகளை சுவைபட தொகுத்துத் தருவதில் உனக்கு நிகர் நீயே.

ஏ.ஏ.எம்.இக்ரம்-கல்ஹின்ன.

□□

தீன் சுவை தினமுரசே!

திக்கெட்டும் நீ பரவி. திகைக்க வைக்கிறாய் என்னை. நீ அள்ளி வழங்கும் அமுத சுரப்பியா? தாய் தொடர் கதையை தந்த உமக்கு நன்றி கூறாமல் இருக்க முடியுமா? அரசியல் செய்திகளை சுடச்சுட தருவதில் நிகர் நீயேதான். உன் சேவை ஓங்கி வளமுடன் வளம் பெற என் வாழ்த்துக்கள்.

ஏ.வஹாப்டீன்-உப்பு.

□□

"நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே" என்ற ரீதியில் உண்மைகளை ஆணித்தரமாக ஆதரிக்கும் அதேநேரம், குற்றங்களையும் அடாவடித் தனங்களையும் நெற்றியடிபோல் அம்பலமாக்கும் தினமுரசிற்கு என் போன்ற வாசகர்களின் ஆதரவு என்றும் உண்டு.


ரொஷான்-கனேவல்பொல.

□□

**அடக்கு முறைக்கு உள்ளாகி உரம்பெறும் மனிதர்களை 'தாய்' கண்முன்பாக கொண்டு வருகிறாள்.**

ஆர்.நர்மதா-நுவரெலியா.

என் இதயம் கவர்ந்த முரசே! நீ கொண்டு வரும் அத்தனை அம்சங்களிலும் அரு





மையிலும் அருமை. மகாபாரதம், லேடீஸ் ஸ்பெஷல், தேன் கிண்ணம், இலக்கிய நயம், சினிவிசிட், தகவல் பெட்டி., சொர்க்கங்கள் சிறக்கட்டும் இன்னும் பல அம்சங்கள் தொடரட்டும் உனது பணி வாழ்த்துக்கள்.

மல்லிகா, சுரேந்தர், புனிதா,
ரஜனி, சாலினி, திவ்யா-பசறை.

□□

பாப்பா முரசு என்பன என் இதயம் கவர்ந்தன. நீ இன்னும் சிறப்பு பெற என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நிஸானா
ஜி.ப்ரி-பேருவளை.

□□

மலரில் நீதரும் பக்கங்கள்
சிந்தையைக் கவரும் ஆக்கங்கள்
திருப்பத்திருப்ப எண்ணங்கள்
படித்து சுவைப் பதில்

□□

உன் அனைத்து அம்சங்களும் சூப்பர். இலக்கிய நயம், சிறுகதைகள், கவிதைகள், அரசியல் அலசல் மருத்துவ விந்தை, அபூர்வ செய்திகள், டியர் சிந்தியாவின் பதில்கள் சினிவிசிட், ஸ்போட்ஸ் அனைத்தும் எனை வெகுவாக கவர்ந்து விட்டன. உனக்கு நிகர் நீயேதான்.

ஆ.ராஜேந்திரன்-கந்தப்பனை.

□□

# சர்வதேச அரங்கில் அரசுக்கு எதிரான பிரசாரம்!

# உதவி வழங்கும் நாடுகளது கருத்தை மாற்ற முயற்சி!!

## புலிகளது இலண்டன் கிளை மீண்டும் சுறு சுறுப்பு

**சர்வதேச அரங்கில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையே பிரசார யுத்தம் ஆரம்பித்துள்ளது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது கருத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி, அரசு பெறும் உதவியை குறைப்பதற்கு புலிகள் தீர்மானித்துள்ளனர். யாழ்ப்பாணம் சென்ற- இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது பிரதிநிதிகளிடம் புலிகள் அரசை குற்றம் சாட்டியுள்ளனர்.**

(அரசியல் நிருபர்)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது கூட்டம் ஃபிரான்சின் தலைநகரான பாரிசில் ஏப்ரல் மாதம் 27ம் 28ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் அமைதி நிலவுவதாகவும், இனப்பிரச்சனை தீர்வதற்கானஅறிகுறிகள் இருப்பதாகவும் கருதப்பட்டால் இலங்கைக்கான உதவி பெருமளவில் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் இலங்கை அரசுக்கு பெருமளவிலான உதவி கிடைப்பதை தடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

### முயற்சி ஏன்?

வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு என்று கடந்த காலங்களில் பெறப்பட்ட உதவிகள் படைகளைப் பலப்படுத்தவே பயன்படுத்தப்பட்டன. மீண்டும் அவ்வாறு நடக்கலாம் என்பதே புலிகள் கூறும் காரணமாகும்.

இதனையடுத்து வெளிநாடுகளில் உள்ள புலிகளது கிளைகள் அரசுக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொள்ள முடுக்கிவிடப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படும் அறிக்கைகள் உடனடியாக கொழும்புக்கு அனுப்பப்பட்டு இங்கிருந்து புலிகளது இலண்டன் கிளைக்கு அனுப்பப்படுகின்றன.

அவற்றை உடனடியாக வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்கு இலண்டன் கிளை விநியோகிக்கிறது.

வடக்கில் அபிவிருத்தி வேலைகளை ஆரம்பித்துள்ளதாக அரசாங்கம் கூறிவருவதை புலிகள் தவறான பிரசாரம் என்று தெரிவித்து வருகிறார்கள்.

### சந்திப்பில் விளக்கம்

இதேவேளை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது பிரதிநிதிகள் 7.3.95 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் சென்று புலிகளோடு பேச்சு நடத்தினர். அரச சார்பற்ற தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளையும் அவர்கள் சந்தித்தனர்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்ற புலிகள் அவர்களுக்கு யாழ் குடாநாட்டை சுற்றிக் காண்பித்தனர். போரினால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட வழி செய்ததோடு, அகதி முகாம்களுக்கும் அழைத்துச் சென்றனர்.

அகதிகள் பிரச்சனை பற்றியும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் புலிகள் பிரஸ்தாபித்தனர்.

வெளிநாடுகளின் உதவிகளைப் பெறவே அரசாங்கம் உண்மைக்கு மாறான பிரசாரங்களைச் செய்கிறது என்று புலிகள் குற்றம் சாட்டியுள்னர்.

புலிகளது நோக்கத்தை அரசாங்கம் தெரிந்து கொண்டுள்ளது. அதனால்தான் புலிகளது பிரசாரங்களுக்கு பதிலளிக்கும் வகையில் பிரபாகரனுக்கு எழுதிய கடிதங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

பேச்சுவார்த்தையில் அரசாங்கம் கொண்டிருக்கும் அக்கறையை அந்த கடிதங்கள் வெளிப்படுத்தும் என்று அரசாங்கம் நினைக்கிறது.

புலிகளது தலைவர் பிரபாகரனுக்கு அரச தரப்பால் அனுப்பப்பட்ட மேலும் பல கடிதங்களை அரசாங்கம் தொடர்ந்து வெளியிடும் என்று தெரியவருகிறது.

### பிரசாரப் போர்

சர்வதேச அரங்கில் அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான பிரசாரப் போர் ஒன்று ஆரம்பித்துவிட்டது. இது பேச்சு வார்த்தை முயற்சிகளில் நெருக்கடியை ஏற்படுத்தும் என்று அரசியல் அவதானிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் புலிகளது கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளில் ஜனாதிபதி சந்திரிக்காமீதும் அரசுமீதும் நம்பிக்கையீனம் தெரிவிக்கும் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் சமீபத்தில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தமை படைகளை தயார் படுத்துவதற்காகவே என்று யாழ்ப்பாணத்தில் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்துள்ளது.

### புதிய கப்பல்கள்

1.03.95 அன்று 'புலிகளின் குரல்' வானொலி தனது செய்தியில் "சிறீலங்கா கடற்படை தன்னை பெருமளவில் பலப்படுத்தி வருகின்றது. புதிதாக ஆட்கள் சேர்க்கப்படுகிறார்கள். நவீன ஆயுதங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. 2 பீரங்கிப் படகுகள், 2 தரையிறக்க கப்பல்கள் புதிதாக வாங்கப்பட்டுள்ளன." என்று தெரிவித்துள்ளது.

## முன்னாள் ஆணையாளர் சிவஞானம் புலிகளின் பங்கரில்!

## ஊழல்-மோசடி நடவடிக்கைகள்மீது விசாரணை!

(வர்மா)

**யா**ழ் மாநகர சபையின் முன்னாள் அணையாளர் திரு.சிவஞானம் புலிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புலிகளது பங்கர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிவஞானத்தை அவரது மனைவி மட்டுமே பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

புலிகளது முன்னாள் பிரதித் தலைவர் மாத்தையாவோடு இணைந்து பிரபாகரனுக்கு எதிராகச் சதி செய்தமை, ஆணையாளராக இருந்த போது நிர்வாகத்தில் மோசடிகள் செய்தமை போன்ற பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் அவர்மீது சுமத்தப்பட்டுள்ளன.

திரு.சிவஞானம் முன்னர் புலிகளது தீவிர ஆதரவாளராக இருந்தவர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்படவிருந்த இடைக்கால நிர்வாகத்திற்கு மூன்று பேரை சிபாரிசு செய்யுமாறு அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனா புலிகளிடம் கோரினார்.

புலிகளால் சிபாரிசு செய்யப்பட்ட மூன்று பேரில் சிவஞானமும் ஒருவர்.

சிவஞானம் ஜே.ஆருக்கும் வேண்டப்பட்டவராக இருந்தமையால் அவரையே இடைக்கால நிர்வாக தலைவராக அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர் நியமித்தார்.

அதனால் பிரபாகரனுக்கு சந்தேகம் ஏற்பட்டது. சிவஞானத்திற்கு பதிலாக திரு.பத்மநாதனை தலைவராக நியமிக்குமாறு பிரபாகரன் கோரினார்.

அதனால் ஏற்பட்ட இழுபறியால் இடைக்கால நிர்வாகம் ஏற்படாமல் போனது.

மாத்தையாவுக்கு நெருக்கமாக இருந்தவர் என்பதால் மாத்தையாவின் விருப்பப்படியே அன்று சிவஞானத்தின் பெயர் புலிகளால் சிபாரிசு செய்யப்பட்டதாகத் தற்போது கூறப்படுகிறது.

தன்னைப் பார்வையிட்ட மனைவியிடம் புலிகள் தன்னைக் கொல்லப் போகிறார்கள் என்று சிவஞானம் கூறியுள்ளார். தனக்கு 'அல்சர்' நோய் இருப்பதாக புலிகளிடம் கூறி கருணை காட்டுமாறு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் சிவஞானம் தெரிவித்தார் என்று அறியப்படுகிறது.

### புதிய குற்றச்சாட்டு

இதேவேளை யாழ் மாவட்ட புலிகளின் முன்னாள் தளபதி கிட்டுவின் மீது 1987ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி கைக்குண்டு வீசப்பட்டமை தொடர்பாகவும் புலிகளது புலனாய்வுப் பிரிவு விசாரித்து வருகிறது. கிட்டுவின் கால் ஒன்று இல்லாமல் போக காரணமான அத்தாக்குதல் மாத்தையாவின் ஏற்பாட்டின்படியே நடைபெற்றதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாத்தையாவின் நெருக்கமானவர்களான ஜெயம், சுசீலன், சலீம் ஆகியோரிடம் பொட்டம்மான் தலைமையில் தீவிர விசாரணை நடக்கிறது.

## "புலிகளின் பலத்தால் விரைவில் விடுதலை!"

## "அரசிடம் ஏமாறமாட்டோம்-பலமாயுள்ளோம்"

**தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் மூன்று நாள் இலக்கிய கருத்தரங்கு ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.**

**அதில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் சர்வதேச அரங்கில் அரசு பொய்யான பிரசாரங்களைச் செய்கிறது என்று குற்றம் சாட்டினார்.**

**மேலும் அவர் அங்கு உரையாற்றும் போது:**

"தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய வளர்ச்சி, போராளிகளுடைய, மக்களுடைய அளப்பரிய தியாகம், வீரவரலாறுகள் என்பவற்றை தமிழீழ மக்களும், சர்வதேசமும் அறியும்படி ஆவணப்படுத்த கலை, இலக்கியகர்த்தாக்களாலேயே முடியும். இந்தப்பணியில் கலைஞர்கள் , அறிஞர்கள் எல்லோரும் சேர்ந்து ஈடுபடுவீர்கள் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது.

அனைத்து கலைஞர்கள், அறிஞர்கள் அனைவரையும் இன்று இங்கு ஒரே மேடையில் பார்ப்பது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. நிச்சயமாக தமிழீழ தேசிய தலைவர் இதனை அறிகின்றபோது மிகவும் மகிழ்ச்சியடைவார். எமது போராட்டத்திற்கு இது ஒரு மிகப்பெரும் வலுவைக் கொடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

சகல தமிழ் அறிஞர்களையும், பெரியோர்களையும் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், தமிழினத்தினுடைய ஒட்டுமொத்தமான வாழ்விற்கானது இந்ததேசிய விடுதலைப்போராட்டம். எமது தேசியத்தினை இன்று நிலைபெறச் செய்யும் தமிழர் தேசிய தலைவரின் பாதையில், அந்த தேசியத்தினை நிலைபெறச் செய்ய நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.

எந்தவொரு இனமக்களும், தங்கள் தேசியத்தில் மிக உறுதியாகவுள்ளனர். அறிஞர்கள், கலைஞர்கள் உட்பட அனைவரும் ஒன்று சேர்ந்து ஏற்படுத்துகின்ற பலம்தான் நிச்சயமாக மிக விரைவில் எமக்கு விடுதலையைத் தேடித்தரும்.

சந்திரிக்கா அரசு பதவியேற்றபோது ஒரு சமாதான சூழ்நிலை, ஒரு தீர்வு ஏற்படுமென்று எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். நாமும் நம்பினோம். ஆனால் இன்று நாளாந்தம் நடக்கும் நிகழ்வுகள், சம்பவங்கள் ஒவ்வொன்றையும் உற்று நோக்குகின்றவர்களுக்கு, தமிழர்கள் இனி எத்தனையாவது தடவையாக ஏமாற்றப்படப் போகிறார்கள் என்ற சந்தேகம் எல்லோர் மனதிலும் ஏற்படுகின்றது. ஆனால் நாங்கள் ஏமாற்றப்படமாட்டோம். பேச்சு வார்த்தை மேசைக்கு போகின்றபோதும் விடுதலைப் புலிகள் பலமான நிலையில்தான் இருந்தனர். பலம்தான் தமிழ் மக்களை வாழ வைக்கப்போகின்றது. அந்தப்பலத்தினூடேதான் பேச்சுவார்த்தை மேடையும் இருக்கிறது. ஆகவே நாம் ஏமாற்றப்படமாட்டோம்.

சிறீலங்கா அரசு, சர்வதேச அரங்கில் பொய்பிரசாரங்களை கட்டவிழ்த்துவிட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு உரிமை வழங்குகின்றோம். நிறைய வேலைத்திட்டங்களை செய்கின்றோம் என்றெல்லாம் பிரச்சாரம் செய்கின்றது. மக்களுக்கு உண்மைநிலை தெரியும். தமிழ் மக்கள் விழிப்பாகவும், உறுதியாவும் இருக்க வேண்டும். பலத்தோடு இருந்துகொண்டு பேச்சுவார்த்தைக்கு வருபவர்களுடன் பேசுவோம். எனவே இதற்கு கலைஞர், அறிஞர் எல்லோரும் வி.பு.களோடு ஒன்று திரண்டு பக்கபலமாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்." என்றார் தமிழ்ச்செல்வன்.

இலக்கிய கருத்தரங்கு 3 நாளும் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்றது.

நா.யோகேந்திரநாதன், புதுவை இரத்தினதுரை, விடுதலை வெளியீட்டு பிரிவு பொறுப்பாளர் உ.ரவி, பேராசிரியர். சிவத்தம்பி ஆகியோரும் உரையாற்றினர்.

## பாராளுமன்றத்தில் நீலன் திணறல்!

## அவசரகாலசட்ட வாக்கெடுப்பில் சுவாரசியம்!

**பா**ராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டப் பிரேரணை நிறைவேற்றப்படும் போது தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூகமளிக்காமல் தவிர்த்து விடுவதே வழக்கமாகும்.

அரசாங்கத்திடம் தாம் எதிர்க்கவில்லை என்று கூறிக்கொள்ளலாம். வெளியில் தாம் அதனை ஆதரிக்கவில்லை என்று கூறிக் கொள்ளலாம் என்பது நோக்கமாக இருக்கக் கூடும் என்று கருதப்பட்டது.

அவசரகால சட்டத்தை எதிர்த்துப் பேசினாலும் கூட எதிராக வாக்களித்து அரசின் அதிருப்தியை தேடிக்கொள்ள கூட்டணி விரும்பவில்லை.

பாதுகாப்பு செலவுக்கு அதிக நிதி ஒதுக்கியதை கூட்டணியினர் கண்டித்துப் பேசினார்கள். பின் நடைபெற்ற வாக்கெடுப்பில் எதிர்க்கட்சியோடு சேராமல் கூட்டணி பா.உக்கள் நழுவிச் சென்று விட்டனர்.

வாக்கெடுப்பில் கலந்துகொள்ள மாட்டோம் என்று தமது நிலைப்பாட்டை பகிரங்கமாக தெரிவிக்கவும் கூட்டணியினர் முன்வரவில்லை.

ஆனால், 6.3.95 அன்று அவசரகால சட்டப் பிரேரணை மீதான விவாத நேரத்தில் திரு.நீலன் திருச்செல்வம் பா.உ சபைக்குள் வந்துவிட்டார். விவாதம் முடிந்து வாக்கெடுப்பு நடக்கத் தொடங்கியபோது எழுந்து வெளியே செல்ல முற்பட்டார். ஆயினும் ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அவரையே திரும்பி நோக்கிக் கொண்டிருந்தனர். எனவே மீண்டும் ஆசனத்தில் அமர்ந்துவிட்டார் திரு.நீலன்.

வாக்கெடுப்பு நடந்தபோது அவரது அருகில் இருந்த பா.உக்கள் ஆதரவாக எழுந்து நின்றார்கள். அந்த நேரம் திரு நீலன் தனது தலையைத் திருப்பி பின்புற கதவை பார்த்துக் கொண்டு சங்கடத்தில் அசைந்ததை அவதானிக்க முடிந்தது. அரச தரப்பு உறுப்பினர்கள் பார்த்து விட்ப் போகிறார்களே என்று அவர் சங்கடப் பட்டிருக்கலாம்.

எதுவும் சொல்லாமல் அவர் மௌனமாக இருந்தமையால் அவர் ஏதோ தீவிரமாக சிந்தனையில்தான் ஆதரவாக எழ மறந்து பின்புறம் திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று ஆளும் தரப்பு ஒரு வேளை நினைத்திருக்கலாம்.

சிறிலங்கா மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு.கலப்பதி பா.உ மட்டுமே அவசரகாலசட்ட நீடிப்பை எதிர்த்து வாக்களித்தார்.

அதனால் பிரேரணைக்கு ஒரு வாக்கு எதிராக விழுந்தது. திரு.கலப்பத்தி எதிர்த்து இருக்காவிட்டால் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக மாறியிருக்கும்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரிடம் கூட்டணியின் நிலைப்பாடு பற்றி கருத்துக் கேட்டபோது, "அவசரகால சட்ட வாக்கெடுப்பில் மீனுக்கு தலை பாம்புக்கு வால் என்பதுதான் கூட்டணியின் நிலைப்பாடு" என்று கூறினார்கள்.

## மேலும் ஒரு புலி பலி!

சென்னை மத்திய சிறையில் இருந்து கடந்த 27ம் திகதி தப்பிச்சென்ற 9 புலிகளில் இருவர் உடனடியாகக் கைது செய்யப்பட்டனர். ஒருவர் சயனைட் உட்கொண்டு மரணமானார்.

தப்பிச்சென்றவர்களில் மேலும் ஒருவர் பிணமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது பெயர் சண்முகவேலு.

பொலிசாரிடம் சிக்கிக்கொள்ளக்கூடும் என்று கருதி இவர் 'சயனைட்' உட்கொண்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

## கூட்டணி மறுப்பு

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் அமைப்பு பிரதிநிதிகளை தமது கட்சியைச் சேர்ந்த எவருமே சந்திக்கவில்லை. அவ்வாறு வெளியான செய்திகளில் உண்மையில்லை என்று கூட்டணியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட பா.உ திரு. ஜோசப் பரராஜசிங்கமும் சந்திப்பு எதுவும் நடக்கவில்லை என்று மறுத்துள்ளார்.

## கிழக்கில் நிதி சேகரிக்கவில்லை

## விடுதலைப் புலிகள் உறுதியான மறுப்பு!

கிழக்கு மாகாணத்தில் தமது இயக்கத்தினர் நிதி திரட்டல் எவற்றிலும் ஈடுபடவில்லை என்று புலிகள் மறுத்துள்ளனர்.

இது தொடர்பாக புலிகளது மட்டக்களப்பு-சம்மாந்துறை மாவட்ட அரசியல் பிரிவு பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஏனைய தமிழ் அமைப்புக்களை அந்நியரின் அடிவருடிகள் என்றும் புலிகள் ஆரம்பத்தில் கூறியுள்ளனர்.

அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்து வந்த போராட்டப் பாதையில் இம்மண்ணின் மக்களாகிய நீங்கள் செய்த பங்களிப்புக்கள் அளப்பரியன. விடுதலைக்கு இன்றியமையாதன. நீங்கள் செய்த அரசியல், சீர், பொருன்மிய பங்களிப்புக்கள் எம்போரியலிலே கணிசமான பயன்பாட்டைத் தந்துள்ளன என்பதை பெருமையோடு நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

ஆனால் சிங்கள அடக்கு முறையாளர்களின் திட்டமிட்ட பொருன்மிய வேரறுப்பினால் எம்மக்கள் பாரிய பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளமையால் எம்மக்களிடம் இருந்து பொருன்மிய பங்களிப்புகள் எதையும் இப்போதைக்கு நாம் பெறவிரும்பவில்லை. கடந்த தை மாதம் 20ஆம் திகதியுடன் சகலவிதமான எமது நிதி சேகரிப்புக்களையும் நிறுத்தி வைத்துள்ளோம் என்பதை கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். அதன் பின்பு செயல்படும் எந்த நிதி திரட்டலும் சட்டபூர்வமற்றது. அந்நியரின் அடிவருடிகளும், எமது இயக்கத்தின் சாயலில் வந்து நிதி திரட்டி எமது இயக்கத்தின் நற்பெயரை மாசுபடுத்துவதை அனுமதிக்க வேண்டாம். என பொதுமக்களாகிய உங்களுக்கு வேண்டுகோள் விடுகின்றோம்.

# துபாயில் கடவுச் சீட்டு மோசடி
# இலங்கையருக்கு ஆறுமாத சிறை!

(துபாயிலிருந்து ஏ.எல்.எம்.நயீம்)

பஹ்ரைன் நாட்டிலுள்ள குற்றவியல் உயர் நீதிமன்றம் அண்மையில் இலங்கை நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு, பாஸ்போர்ட் ஒன்றை சட்ட விரோதமாக உபயோகித்து நாட்டுக்குள் பிரவேசிக்க முயன்ற குற்றத்திற்காக ஆறு மாத சிறைத் தண்டனையும் தண்டனை முடிந்த பின்னர் நாடுகடத்தவும் தீர்ப்பளித்தது.

இது பற்றி அறியவருகையில், ஒருவருடைய பாஸ்போர்ட்டில் மற்றவருடைய புகைப்படத்தை ஒட்டி தனது பெயரையும் மாற்றி கூறி நாட்டிற்குள் பிரவேசிக்க முயற்சித்துள்ளார்: அவ்வேளை விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என்று தெரியவருகிறது..

இவருடைய பெயரையோ, விபரத்தையோ பஹ்ரைன் பாதுகாப்பு அதிகாரிகள் வெளியிடவில்லை.

# கொழும்பு– திருமலை ரயில் சேவை
## கவனிக்க வேண்டிய சில குறைகள்

கொழும்பு- திருகோணமலை இரவு 11 மணி புகையிரத சேவையால் பலருக்கு மிகுந்த பயனைத் தருகிறது. கொழும்பு விடுதியில் தங்கி நேரத்தையும், பணத்தையும் வீணாக்காமல் பயணத்திலே கழிவது வசதியாகும். அச்சேவை அதிகாலை 4மணிக்கு கல்லோயாவில் திருகோணமலை பயணிகளை இறக்கிவிட்டு திருகோணமலைக்கு காலை 8 மணிக்கு தொடர்பு சேவையை தொடங்குகின்றதால், காலைக் கடன்களை பயணிகள் கல்லோயாவிலே முடிக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் அவ்விடத்து நிலைய மலசல கூடங்கள் நன்முறையில் சுகாதாரம் பேணப்படாமலும், அவற்றுள் மின்சார வசதியின்றியும், பாவனைக்கு நீர் கொண்டு செல்ல ஒழுங்கான வாளிகள் தானும் இல்லாத நிலையில் நூற்றுக்கணக்கான பயணிகள் அவதியுறுவதை காணக்கூடியதாக உள்ளது.

திருகோணமலைக்கான தொடர்பு சேவை ஒழுங்கற்றும், பெட்டிகள் போதாமலும் உள்ளது. பல வேளைகளில் கொழும்பில் இருந்து காலை 5 மணிக்கு புறப்படும் வண்டியிலே, அதிகாலையில் விடப்பட்ட பயணிகள் கல்லோயாவிலிருந்து (மதியம் 11.30 மணிக்கு) இணைய வேண்டியுள்ளது.

குறிப்பாக இரவு கொழும்பு- திருகோணமலை சேவை 17 மணித்தியாலங்கள் பிடிக்கின்றது.

இவைகளை சீர்படுத்த இம்மாவட்ட உயர் அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

க. தேவகடாட்சம்-மல்லிகைத்தீவு.

# பொறுப்பில் புதியவர்கள்

ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய- சீத்தா எலிய சீதையம்மன் ஆலய பரிபாலன சபையின் 1995ம் ஆண்டுக்கான நிர்வாக உத்தியோகஸ்தர்கள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. அவர்களின் விபரம் பின்வருமாறு:

**தலைவர்:** திரு.வி.ராதாகிருஸ்ணன் ஜே.பி

**உபதலைவர்கள்:** திரு. கே.தனபாலசிங்கம், திரு.எம்.சிவபாலன்.

**செயலாளர்:** திரு.ஏ.சந்திரன்.

**உபசெயலாளர்கள்:** திரு. ஏ.தம்பிராஜா, திரு.பி.யோகேஸ்வரன்.

**பொருளாளர்:** திரு.வி.ஆதிமூலம்.

**உபபொருளாளர்:** திரு.எஸ். சுப்பிரமணியம்.

**காப்பாளர்கள்:** திரு.கே.ராமசாமி, திரு.பி.எம்.சுப்பையா, திரு.எம்.கே.நடராஜா.

**உறுப்பினர்கள்:** திரு.கே.என்.சுரேஷ்குமார், திரு.கே.மாணிக்கம், திரு.கே.எஸ். கங்காதரன், திரு.எஸ்.மெய்யப்பன், திரு.என். புவனேஸ்வரன், திரு.ஏ.புவனேந்திரராஜா, திரு.பி.சுப்பிரமணியம், திரு.எம்.சிவலிங்கம்.

**பா.உ:** திரு.ஏ.செல்லத்துரை, திரு.நி. கனகரட்ணம், திரு.எம்.செல்லையா, திரு.கே.சுப்பிரமணியம், திரு.கே.ரவிச்சந்திரன். திரு.எஸ்.சிவகவி, திரு.எல்.நேருஜி ஜே.பி. திரு.எஸ்.நித்தியானந்தன், திரு.எஸ். அன்பழகன், திரு.எஸ்.சிவகுமார்.

**சீதையம்மன் ஆலய அபிவிருத்தி குழு தலைவராக–**
திரு.எம்.சிவலிங்கம் பா.உ. தெரிவு செய்யப்பட்டார்.

**உறுப்பினர்கள்:** திரு.எஸ்.சுப்பிரமணியம், திரு.எஸ்.வேல்ராஜா, திரு.பி.மகேஸ்வரன், திரு.பி.சந்திரமோகன்.

# காதலுறவால் கசையடி

(துபாயிலிருந்து ஏ.எல்.எம்.நயீம்)

ஆசிய நாட்டைச் சேர்ந்த பணிப்பெண் ஒருவருக்கு 90 தடவைகள் கசையடி கொடுக்கவும் இரண்டு மாதங்களுக்கு சிறை வாசம் அனுபவித்தபின் நாடு கடத்தும் படியும் அண்மையில் எமிரேட்ஸிலுள்ள சார்ஜா நாட்டின் இஸ்லாமிய உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஆர்.பீ. என்றழைக்கப்படும் பெண் சார்ஜா நாட்டில் வேலை செய்து கொண்டிருந்த வீட்டில் தனது காதலனுடன் மறைமுகமாக தொடர்பு வைத்திருந்தது வீட்டு சொந்தக்காரரால் கையும் களவுமாக கண்டு பிடிக்கப்பட்டது. தன்னுடைய அறையில் தனது காதலனை அழைத்து இரவு நேரம் ஒன்றாக இருந்த வேளை வீட்டுச் சொந்தக்காரர் காலை வேளை தொழுகைக்கு செல்லும் போது பணிப் பெண்ணினது அறையிலிருந்து வெளியான பேச்சுக்களை தொடர்ந்து இவர்கள் பிடிக்கப்பட்டனர். காதலன் தப்பியோடியதால் பணிப்பெண் மட்டுமே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மேற்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

# உருவாகுமா
# முஸ்லிம் கலாசார அமைச்சு?

ஐ.தே.கட்சி ஆட்சியில் 1977 முதல் உருவாக்கப்பட்ட முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சினை தற்போதைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசு திணைக்களமாக மாற்றியுள்ளது.

கடந்த காலத்தில் இவ்வமைச்சு இலங்கையில் வாழும் முஸ்லிம் சிறுபான்மை சமூகங்களுக்கு தனியான ஒரு அமைச்சாக விளங்கியது. இதனால் உலகில் உள்ள மத்திய கிழக்கு நாடுகள் தொட்டு ஏனைய அரபு நாடுகளினதும் பாராட்டையும் வரவேற்பையும் பெற்றது.

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களது மத, கலாசார பண்பாட்டு விடயங்களை கவனிக்கவென இவ்வமைச்சு விளங்கியது.

மீண்டும் இவ் அமைச்சு உருவாக்கப்பட்டு தனியான ஓர் அமைச்சர் நியமிக்கப்பட்டு, எதிர்காலத்தில் இலங்கை வாழ் முஸ்லிம் மக்களின் நல்ல சிறந்த நற்திட்டங்களை அமைத்து இவ் நாட்டில் வாழும் அகதிகளின் பிரச்சினைக்கு பயன்தரக்கூடிய வகையில் பணியாற்ற பொதுசன ஐக்கிய முன்னணி அரசும் அமைச்சரவையில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் முயற்சி செய்ய வேண்டும்.

அஸ்றப்.ஏ.ஸமது-சாய்ந்தமருது.

# திருமலையில் புதிய தொலைபேசி வசதிகள்!
## புதிய உபதபாலகங்களும் உருவாக்கப்படும்

(திருமலை நிருபர்)

திருகோணமலை நகர வீதிகளில் பொதுத் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தாரின் உதவியுடன் பே.போன்- டெலிகாட் கம்பனியாளர்களால் இவ் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி வசதிகள் திருகோணமலை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று பிரபல சமூக சேவகர் எஸ்.குணநாயகம் ஜே.பி. அவர்களின் கோரிக்கைகளை ஏற்றே இவை நிறுவப்பட்டுள்ளன.

அத்துடன் அக்போபுர, முள்ளிப் பொத்தானை, கிளிவெட்டி, சேருவிலை, சாம்பல்தீவு, குச்சவெளி, கோமரசன்கடவை ஆகிய உப தபாலகங்களுக்கு மீளவும் தொலைபேசி வசதிகள் அளிக்கப்படவுள்ளதோ? கந்தளாய் சீனி ஆலை. குச்சவேளி, கட்டைபறிச்சான், சிராஜ்நகர், மல்லிகைத்தீவு, வானாறு, கடற்படைத்தளம் ஆகிய உப தபாலகங்களுக்கு புதிய தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட உள்ளன என்று அஞ்சல் அத்தியட்சகர் திரு.எஸ்.நல்லதம்பி முரசுக்குத் தெரிவித்தார்.

மேலும், சல்லி, கோபாலபுரம், லிங்கபுரம், கூனித்தீவு, பூநகர், உவமலை, வரோதயநகர், அபயபுரம், பாத்தியாகம ஆகிய பகுதிகளுக்கு விரைவில் புதிய உபதபாலகங்கள் நிறுவவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# திருத்தம் இல்லையோ?

நீர்கொழும்பு தேர்தல் தொகுதியிலுள்ள போருதொட கிராமத்தின் 'தக்கியா வீதி' குண்டும் குழியுமாக காணப்படுகின்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் வசிக்கும் இக்கிராமத்தின் இவ் வீதி ஒவ்வொரு தேர்தலின் முன்னும் திருத்தப்படுகின்றது. இவ்வாறே கடந்த பொதுத் தேர்தலின் முன்னும் நீர்கொழும்பு மாநகர சபையால் திருத்தப்பட்டதாயினும் தற்போது பாவணைக்குதவாது காணப்படுகின்றது. இக் கிராமத்தின் முக்கிய பாடசாலையான நீர்.அல். பலாஹ் மகா வித்தியாலயமும் இவ்வீதிக்கு அருகில் உள்ளது.

இவ்வீதியை புனர் நிர்மாணம் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவண செய்யுமாறு 'புகார் பெட்டி'மூலம் பணிவாய் வேண்டுகிறேன்.

பர்ஸாத்-பேருதொட்டை.


# மலை சாய்ந்து போனால் சிலையாகுமா?



10 வருட வயிற்றுவலி, 18 வருட கட்டி, 10 வருட இரத்தப்பெருக்கு, 10 வருட இருதயவலி, 15 வருட தோல்வியாதி ஆகிய பயங்கர நிலையில் இருந்து சுகம் பெற்றவர்.



வேலாயுதம் ஜானகி.
20 வருட சாராயம், 35 வருட வெற்றிலை, 14 வருட கால் அழுகி புண். ஆகியவற்றில் விடுதலை கண்டவர்.

புலவர் பத்தையும் பாடலாம், பலரும் பத்தையும் பேசலாம், எரி மலைகள் சரியும் போது மனுசன் செத்துமடிய வேண்டியதாக இருக்கும். ஒருவேளை சரிந்த மலையின் துண்டுகள் சிப்பியின் கையில் கிடைத்தால் அது சிலையாகலாம். மலைசாய்ந்தால் மனிதன் மரணத்தையே சந்திப்பான்.

கடவுளுடைய கோபம் எரிமலையை போல் உள்ளது. கற்பனையும், சித்திரமும் கடவுளை காட்ட தவறுகின்றது. தெய்வமோ நீதி வழுவா நெறி முறையின் மேன்மையானவனாக நீதி செலுத்திக் கொண்டு இருக்கின்றார்.

மனிதனை அடிமையாக்குகின்ற கடவுள் அல்ல, அவனுடைய கண்ணீரைத் துடைப்பவரே கடவுள். ஆனாலும் உலகத்திலே தெய்வ நீதி இல்லாமல் அராஜகமும் அநியாயமும் அழிவை உருவாக்குகின்றது. கடவுள் என்பது காகிதப் பூவாக காணப்படுகின்றது. மனிதனுக்கு இன்னும் கொஞ்சம் காலம் இந்த எரிமலை எழும்பினால் மூன்றாம் உலக மகாயுத்தம் சூழ்ந்து கொள்ளும். கடவுளின் இக் கொடிய கோபம் பற்றும் முன் இவ்வுலகம் கடவுளை தேடுமா?

இக் கதை கிறிஸ்தவத்தின் கிசு, கிசு மந்திரமாக தோன்றலாம் எனினும் கடவுளை தேடும் படி இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ பனி 17 சுவிசேஷ மகாநாட்டை நடத்தவுள்ளது.

**வாருங்கள்! சுகம் பெறுங்கள்!!**

இப்படங்களில் உள்ளவர் பெற்ற சுகத்தை நீங்களும் பெறலாம்.

இடம்:

**ஹெவ்லொக் விளையாட்டுத்திடல்**
**டிக்மன் வீதி சந்தி. கொழும்பு – 05.**

காலம்:

**1995 மார்ச் 12 – 19 வரை**
**தினமும் மாலை 5.30 மணிக்கு.**

செய்தி:

**சகோ. செ. இராஜேந்திரம்**

**இலவசம்**

இயேசு ஜீவிக்கிறார், த. பெ. 1044, கொழும்பு.



அசுத்த ஆவியின் பிடியில் இருந்தும் மனத்தாகத்தில் இருந்தும் விடுதலைக் கண்டவர்.



ரெஜினாமேரி.
இருக்க வீடில்லாமை, வறுமை, துயரம், நோய், கண்ணீரான வாழக்கையில் இருந்து விடுதலை பெற்றார்.



பல வருட பிசாசின் பிடியில் இருந்து விடுதலை கண்டவர்.



9 வருட காதில் சீழ் வடிதல் நோயில் இருந்து குணமானவர்.

ADVT

# தமிழக சிறை உடைப்பு புலிகள் தப்பியது ஏன்?

நாரதர்

## ♦ எக்ஸ்ரே ரிப்போர்ட் ♦



ராஜீவ் கொலைக்கு புலிகளே காரணம் என்பதை சட்டரீதியாக- நீதிமன்ற தீர்ப்பின் மூலமாக மட்டுமே நிரூபிக்க வேண்டியது பாக்கியிருக்கிறது.

அது தவிர சகல வழிகளிலும் புலிகளே காரணம் என்று இந்திய விசேட புலனாய்வுத்துறை நிரூபித்துவிட்டது.

புலிகளும் தமது பத்திரிகைகளில் ராஜீவ் கொலையை மறைமுகமாக ஏற்றுக் கொண்டுவிட்டனர். கனடாவில் இருந்து வெளிவரும் புலிகளது 'உலகத் தமிழர்' பத்திரிகையில் 'தனு' என்ற பெயரில் ஒருவர் கட்டுரை எழுதுகிறார்.

"பொட்டம்மானா? யார் அது?" என்று முன்னர் ஒருமுறை மாத்தையா கேள்வி எழுப்பினார்.

இப்போது தமது மூத்த தளபதிகளில் ஒருவர் என்று பொட்டம்மானை புலிகளது மேடைகளில் அறிமுகப்படுத்தியுமாகிவிட்டது.

சட்டத்தில் முன்பாக பகிரங்கமாக ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ராஜீவ் கொலைக்கான காரணத்தை தமிழர்கள் மத்தியில் மெல்ல மெல்ல புலிகள் ஒப்புக்கொள்ளத் தொடங்கினார்கள்.

இந்திய அமைதிப் படையின் அத்துமீறல்கள், கற்பழிப்புக்கள் போன்ற கொடுமைகளை தமிழர்கள் மறவாதிருக்கும் வரை, ராஜீவ் கொலை தமிழர்களது வெறுப்புக்குரிய ஒன்றாகாது என்பதே புலிகளது மறைமுக ஒப்புதல்களுக்கு காரணம்.

ராஜீவ் கொலையை இந்தியா சட்ட ரீதியாக நிரூபிக்க போதிய ஆதாரமில்லை என்றே புலிகள் நினைத்தனர்.

ஆனால், இந்திய விசேஷ புலனாய்வுத்துறை மகாபுத்திசாலித்தனமாக செயற்பட்டு ஆதாரங்களை குவித்திருக்கிறது.

புலிகளது பயிற்சி முகாமில், புலிக்கொடியோடு தனு அணிவகுத்துச் செல்லும் வீடியோப் படம் புலனாய்வுத் துறையிடம் சிக்கும் என்று புலிகள் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள்.

அது மட்டுமல்லாமல் மனிதக்குண்டாக மாறி 'தனு' ராஜீவை கொலை செய்த நடவடிக்கைக்கு பொறுப்பாக இருந்தவர் சிவராசன்.

சிவராசன் என்றோ பாக்கியச் சந்திரன் என்றோ எவரும் தமது இயக்கத்தில் எப்போதும் இருக்கவில்லை என்று முன்னர் கிட்டு கூறியிருந்தார்.

வேண்டுமானால் ராஜீவ் கொலையாளிகள் பற்றி கண்டறிய இந்தியாவுக்கு உதவத் தயார் என்றும் கிட்டு இலண்டனில் இருந்து அப்போது தெரிவித்திருந்தார்.

இந்திய புலனாய்வுத் துறையிடம் சிக்கிய வீடியோப் படம் ஒன்றில் சிவராசன் கூட்டமொன்றில் உரையாற்றுகிறார். இடுப்பிலே பிஸ்டல். அவர் உரையாற்றுவது திலீபனின் நினைவு தினக் கூட்டத்தில்.

சுற்றிவளைப்பில் கைதாகாமல் சயனைட் உட்கொண்டு சிவராசனும், சுபாவும் மரணமானபோது ஆதாரங்கள் யாவும் அழிந்து போனதாக கருதப்பட்டது.

ஆனால், சற்றும் மனம் தளராத விசேஷ புலனாய்வுத்துறை புலிகள் முன்னர் தங்கியிருந்த வீடுகளை அலசி ஆராய்ந்து ஆதாரங்களை தூசுதட்டி எடுத்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது.

வழக்கமாக புலிகள் இவ்வாறான ஆதாரங்கள் சிக்கிக்கொள்ள விடுவதில்லை.

இந்திய அமைதிப்படைக்கு எதிராக புலிகள் யுத்தம் செய்தபோது தமிழகத்தில் இருந்த புலிகள் சிறையில் அடைக்கப்பட்டனர். பின்னர் கிட்டு உட்பட பல உறுப்பினர்கள் இலங்கையில் இருந்த இந்திய அமைதிப்படையிடம் ஒப்படைக்கப்பட்டனர்

அவ்வாறு தமிழகத்தில் இருந்த புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் அலைக்கழிக்கப்பட்டபோது அவர்கள் வசமிருந்த ஆவணங்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன. வேறு சில ஆவணங்கள் புலிகளது தமிழக ஆதரவாளர் வீடுகளில் கொண்டு போய் வைக்கப்பட்டன. அவற்றில் பயிற்சி முகாம் மற்றும் புலிகள் சம்பந்தப்பட்ட வீடியோப் படங்களும் அடக்கம்.

எது எங்கே இருக்கிறது என்று தெரியாத நிலையில் திசைக்கொன்றாக சென்ற ஆவணங்கள்தான் இந்திய விசேஷ புலனாய்வுப் பிரிவின் கையில் சிக்கியிருக்கிறது.

தனு, சிவராசன் சம்பந்தப்பட்ட வீடியோப்படங்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்ட புலிகளது ஆவணங்களோடு கூட கிடந்திருக்கலாம்.

ராஜீவ் கொலைக்குப் பின் அவற்றை தூசுதட்டி கிளறிப் பார்த்ததில் புலனாய்வுப் பிரிவுக்கு வியப்பான ஆதாரங்கள் மாட்டியிருக்கலாம்.

எப்படியோ வெளியுலகில் மறுக்கவே முடியாத ஆதாரங்களோடு புலிகள் சிக்கியிருக்கிறார்கள்.

தனு, சிவராசன் சம்பந்தப்பட்ட வீடியோப் படம் விசேஷ புலனாய்வுத் துறையிடம் சிக்கிய விஷயம் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. இந்திய அரசியலில் ராஜீவ் கொலை விவகாரத்தில் பிரதமர் நரசிம்மராவ் நடவடிக்கை சந்தேகத்துக்குரியதாக மாற்றப்பட்டது.

ராஜீவ் கொலை விவகாரத்தில் உண்மைகளை மறைக்கப் பார்க்கிறார் பிரதமர் என்று அவரது போட்டியாளர் அர்ஜுன் சிங் குற்றம்சாட்டினார்.

அதனால் ராஜீவ் கொலைக்கு புலிகளே காரணம் என்று மக்களுக்கு சந்தேகமில்லாமல் தெரிவிக்கவே புதிய ஆதாரங்கள் பத்திரிகைகள் மூலமாக தெரியப்படுத்தப்பட்டன.

தமிழக சிறைகளில் பிணையில் வர முடியாத 'தடா' சட்டத்தின் கீழ் நூற்றுக்கணக்கான புலிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைவர் பத்மநாபா கொலை, ராஜீவ் கொலை போன்ற நடவடிக்கைகள் தொடர்பாகவே அவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கை அரசோடு புலிகள் பேச்சு நடத்தும் தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிறையில் உள்ள புலிகளை விடுவிக்க முயற்சி ஒன்று நடந்தது.

தமிழகத்தில் உள்ள புலிகளது அபிமானிகளும் நெடுமாறனும் அந்த முயற்சியில் ஈடுபட்டனர்.

"சிறையிலுள்ள புலிகளை விடுதலை செய்து இலங்கைக்கு அனுப்புங்கள்." என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தமிழகத்தில் நடந்த இந்த முயற்சி பற்றி யாழ்ப்பாணத்தில் புலிகளது பிரசார சாதனங்களும் முக்கியத்துவமளித்து செய்திகள் வெளியிட்டன.

எனினும், அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. இந்தச் சமயத்தில்தான் தனு, சிவராசன் தொடர்பான வீடியோப்படச் செய்திகள் படங்களோடு வெளிவந்தன.

தமிழக சிறையில் இருந்த புலிகளுக்கும் செய்திகள் கிடைத்தன. வழக்கு இறுகப் போகிறது என்று அவர்களுக்கு அதிர்ச்சி.

எனவேதான்-சிறையில் இருந்து தப்புவதைத்தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு அவர்கள் வந்திருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள பிரபல அரசியல் கட்சிகள் புலிகளை ஆதரித்துப் பேசுவதில் இருந்து பின்வாங்கிக் கொண்டன.

கலைஞர் கருணாநிதியோடு இருக்கும் வரை புலிகளை பகிரங்கமாக ஆதரித்தவர் வை.கோபாலசாமி. கலைஞர் கருணாநிதி அவரை தடுக்கப் படாதபாடுபட்டார்.

இப்போது வை.கோபாலசாமி தனிக்கட்சி தொடங்கிவிட்டார். தானே தலைவரான பின்னர் அவரது பேச்சு மாறிவிட்டது.

"நான் புலிகளை ஆதரிக்கவில்லை. தமிழீழத்து மக்களை ஆதரிக்கிறேன்."

என்கிறார் வை.கோபாலசாமி. ஆக, தமிழ்நாட்டில் சிறையில் இருந்து புலிகள் தப்பிக்க உதவியது இரண்டு- ஒன்று பணம். இரண்டாவது புலிகளிடம் பயிற்சி பெற்ற தமிழக தீவிரவாதிகள்.

தமிழ்நாடு விடுதலைப் படை என்ற பெயரில் வளர்ந்துவரும் தமிழக தீவிரவாத அமைப்புக்கு உரம்போட்டதும், உதவி செய்ததும் எல்லாம் புலிகள்தான்.

தமிழக அரசியல் வாதிகளை அவ்வப்போது பயன்படுத்திக் கொண்டாலும் புலிகள் அவர்களை நம்பியது கிடையாது.

மதிழக அரசியல்வாதிகள் தமது நலன்களுக்காக காலை வாரிவிடக் கூடியவர்கள் என்பதே புலிகளது நம்பிக்கை.

அதனால்தான் நீண்டகால திட்டத்தோடு தமிழ்நாட்டு தீவிரவாத அமைப்போடு உறவுகளைக் கட்டியமைத்தார்கள்.

தற்போதைய தமிழக சூழ்நிலையில் தமிழ்நாடு விடுதலைப்படை போன்ற தீவிரவாத அமைப்புக்கள் செல்வாக்குப் பெறுவது கடினம்.

ஆனால், அடிப்படையிலேயே இந்திய மத்திய அரசை இந்தி வல்லாதிக்கம் என்று எதிர்க்கும் தமிழ்நாட்டு தீவிரவாத அமைப்புக்களால் புலிகளுக்கு பிரயோசனம் அதிகம்.

தமிழகத்தில் வேலூர் சிறையிலிருந்து கடந்தமாதம் பெப்ரவரி 27ம் திகதி தப்பிச் சென்ற புலிகளுக்கு தமிழக விடுதலைப் படையின் உதவி கிடைத்திருக்காலம்.

இரண்டு பேர் உடனடியாக கைது செய்யப்பட்டார்கள். இன்னொருவர் சயனைட் உட்கொண்டு பலியானார்.

சிறைக்குள் எப்படி சயனைட் சென்றது? லஞ்சமும், ஊழலும் மலிந்துள்ள ஒரு நாட்டில் அந்த பலவீனங்களை பயன்படுத்துவது ஒன்றும் கஷ்டமான காரியமில்லை.

பணத்தை எறிந்து சிறை அதிகாரிகளது கண்ணை மூடச்செய்வதும் கடினமல்ல.

அனால்,இந்த தப்புதல் நடவடிக்கை இந்தியாவை மீண்டும் ஒரு தடவை புலிகள் சீண்டியிருக்கும் செயல் என்பதில் ஐயமில்லை.

வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவில் இந்தியாவை வெட்டிவிட்டதுகூட புலிகள் இந்தியாவின் கோபத்துக்கு கொம்பு சீவிவிட்டது போலத்தான்.

இப்போது இந்தியாவுக்குள் மீண்டும் சாகசம் காட்டியிருப்பதை இந்திய அரசு இரசிக்கப்போவதில்லை.

அதுவும், இந்தியாவை ஓரம் கட்டி விட்டு, "எப்படி எங்கள் சாதுரியம்" என்ற தோரனையில் பேச்சிலும், போர் நிறுத்தத்திலும் புலிகள் இறங்கியுள்ளார்கள்.

போதாது என்று இந்தியாவுக்குள்ளும் தம்மால் நினைத்ததைச் செய்ய முடியும் என்பதுபோல சிறையிலிருந்து தப்புகின்றனர்.

எப்படிப் பார்த்தாலும் புலிகளின் இந்தியா குறித்த அணுகுமுறைகள் நீண்டகால நோக்கில் விவேகமாகப் படவில்லை.

ராஜீவ் கொலையை வைத்து தங்களை இந்தியா தனிமைப்படுத்த முன்னர், இந்தியா அவ்வாறு செய்யமுடியாத அளவுக்கு வேறு நண்பர்களை உலக அரங்கில் தேடிக் கொள்ளப் புலிகள் நினைக்கிறார்கள்.

வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவுக்கு புலிகள் சிபாரிசு செய்த நாடுகளது பெயர்களும், "நாங்கள்தான் உங்களைச் சிபாரிசு செய்தோம்."என்று அந்த நாடுகளது பிரதிநிதிகளிடம் புலிகள் கூறியிருப்பதும் அதற்குச் சான்று.

**இந்தியாவோடு புலிகள் கைகுலுக்கா விட்டாலும், இலங்கையில் தமிழர்களுக்கு என்ன நடந்தாலும் இந்தியா தனது கண்களை இறுக மூடிக்கொண்டிருக்கும் நிலைக்கு செல்ல வைக்காமல் இருப்பதே நல்லது.**

□□

# பேச்சுக்கு நெருக்கடி பூநகரியில்!

எதிர்பார்த்ததுபோலவே பூநகரிப்பாதை விவகாரத்தில் விரிசல் அதிகமாகிவருகிறது.

பாதுகாப்பு படைக்கும் அரசாங்க தலைமைக்கும் இடையே முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையில் புலிகளது நிபந்தனைகள் இருப்பதாக அரசாங்கம் நினைக்கிறது.

பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட்டே தீரவேண்டும் என்று புலிகள் ஒரே பிடியில் நிற்பது அரசின் சந்தேகத்தை வலுவாக்கியுள்ளது.

இரு தரப்பும் கடுமையான அறிக்கைப் போரில் குதித்திருப்பது பேச்சில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை வெளிப்படுத்துகிறது.

கடுமையான குற்றச்சாட்டுகளோடு பிரபாவிடம் இருந்து வந்த கடிதம் ஜனாதிபதியின் செயலாளரைப் பற்றியதாக கூறப்பட்டாலும் அது ஜனாதிபதியை குற்றம் சாட்டியதற்கு சமனாகும்.

ஜனாதிபதியின் கருத்தைத்தான் அவரது செயலாளர் புலிகளுக்கு கடிதமாக எழுதியிருப்பார்.

எனவே-ஜனாதிபதியின் செயலாளரது கடித்தில் உள்ள கூற்றுக்களைப் பிரபா கடுமையாக விமர்சித்திருப்பது ஜனாதிபதிக்கு கசப்பான விசயம்தான்.

ஆயினும், பேச்சை தொடர்வதும், மோதல் தவிர்ப்பை நீடிப்பதும் அவசியம் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது.

'அரசியல் பேச்சை ஆரம்பிக்க புலிகள் தயங்குகிறார்கள்.' என்று சமீபத்தில் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

பதவிக்கு வந்த பின்னர் புலிகள் பற்றி அவர் கூறிய பகிரங்க விமர்சனம் அதுமட்டும்தான்.

அதே சமயம் புலிகள் ஜனாதிபதி சந்திரிக்கா மீது முடியுமான அளவுக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியே வருகின்றனர்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது கூட்டத்தில் அதிக நிதி அரசுக்கு கிடைத்துவிடக் கூடாது என்பதுதான் புலிகளது எண்ணம்.

அதனால் தான் வடக்கில் அபிவிருத்தி என்று அரசு ஆரம்பித்த முயற்சிகளையும், பிரசாரத்தையும் புலிகள் ஒரேயடியாகச் சாடியிருக்கிறார்கள்.

எதிர்தரப்பு பலமானதை எந்தவொரு மறுதரப்பும் அனுமதிக்காது என்ற சூத்திரத்தை புலிகள் நினைவூட்டுகிறார்கள்.

அரசு தன்னைச் சுற்றி பலமான சர்வதேச அனுதாபத்தை திரட்டுகிறது என்பதை புலிகள் கவனிக்கின்றனர்.

அதனால்தான் இம்முறை யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட புலிகளது அறிக்கைகள் உடனடியாக இண்டனில் உள்ள புலிகளது அலுவலகத்திற்கு பறந்தன. அங்கிருந்து வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்டன. சர்வேதச அரங்கில் இலங்கை அரசின் பிரசாரங்களுக்கு அடி கொடுக்கவே அந்த முயற்சி என்பது தெளிவானது.

யாழ்ப்பாணத்தில் புலிகள் அரசு தொடர்பாக கூறும் குற்றச்சாட்டுகளை அரசுக்கும் தெரியும்; ஆனாலும் அவர்களை அறியாதது போலவும், புலிகளோடு நல்லுறவு நிலவுகிறது போலவும் அரச பிரசார சாதனங்கள் கூறிவந்தன.

இதுதான் புலிகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. அதனால்தான் சர்வதேச செய்தி நிறுவனங்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் பிரபாவின் கடிதமும், ஏனைய அறிக்கைகளும் அனுப்பப்பட்டன.

'அரசு மீது அதிருப்தி உண்டு. எல்லாம் சுமுகமாக உள்ளன என்று நினைப்பது தவறு.' என்று வெளியுலகுக்கு தெரியவைப்பதே புலிகளது நோக்கமாக இருந்தது.


பிரபாவின் கடிதம் வெளியான பின்னர் தான் ஜனாதிபதி பகிரங்கமாகவே புலிகள் பற்றி விமர்சித்து பேசும் நிலைக்கு தள்ளப்பட்டார்.

ஆனால், ஒரு விடயம் தெளிவு, உடனடியாக இரண்டில் ஒன்று பார்த்துவிடும் பாணியில் இரு தரப்பும் இறங்கப் போவதில்லை.

அதேசமயம் பாதுகாப்பு படையினரின் நிலையைப் பலவீனப்படுத்தும். என்று தான் கருதும் நிபந்தனைகளுக்கு அரசு சம்மதம் தெரிவிக்கப்போவதுமில்லை.

அரச தொலைக்காட்சிக்கு வசந்தமான ராசா வழங்கியிருக்கிற

## அதிரடி அய்யாத்துரை



ரெண்டு எழுத்தாரின் முன்னாள் பிரதியார்மீது நாளும் பொழுதும் குற்றப்பட்டியல் நீண்டு கொண்டே போகுதாம்.அவருடன் முன்பு குளோசாப் பழகின ஆதரவாளர்கள் கலங்கிப் போய் இருக்கினமாம். தலைவரைத் தவிர வேறு யாரோடையும் நெருங்கிப் பழகுறதை விட்டுப்போடவேணும் எண்டு அனுபவப்பட்ட ஆதரவாளர் சிலர் சொல்லுறதிலையும் விசயம் இல்லாமல் இல்லை.

தங்களுக்கு ஆதரவான வெகுஜனப் பரதிநிதிகளுக்கு மேலிடம் சின்னதாய் ஒரு விருந்துபசாரம் வைச்சதாம். மலையக தனித்துவ தலைவரும், முன்னணித் தலைவரும் அருகருகே இருந்து சிரித்து பேசிக்கொண்டிருந்தவையாம். அரசியலில் 'நிரந்தர பகைவர்கள் கிடையாது' எண்டது பொருத்தம்தான். வளர்க உறவு.

அயல்நாடு எங்கடை பிரச்சனையிலை இனித் தலையிடக் கூடாது எண்டதுதான் ரெண்டு எழுத்தாரின் பொலிசி. ரெண்டு எழுத்தாருக்கு விரோதமாக நடக்க மாட்டோம் என்று ஒப்புதல் வாக்கு மூலம் விட்டது கூட்டான கட்சி. அதே நேரத்திலை அயல்நாட்டு அரசியல்வாதிகளைக் கூட்டிவந்து கருத்தரங்கு வைச்சு ரெண்டு எழுத்தாரின் பொலிசிக்கு மாறாக நடக்கலாமோ? கூடாதுதான். ஆனால் கூட்டான கட்சி அதைச் செய்துபோட்டுது பாருங்கோ. உதுக்குத்தான் சொல்றது அவசரப்பட்டு அறிக்கை விடக்கூடாது எண்டு.

திருவான மலையிலை கூட்டான கட்சிக் கிளை எடுத்த முடிவை தலைமை தூக்கி ஒரு மூலையிலை போட்டுவிட்டது. சம்பந்தமானவர் பக்கத்திலை நியாயம் இல்லை எண்டு கூட்டான கட்சியில் செல்வாக்குள்ள புள்ளி சொல்லிப்போட்டாராம். "துள்ளினதுதான் மிச்சம். அசைக்கவே டுடியாது பார்த்தியளோ" எண்டு சொல்லுது 'தங்கமான'வரின் ஆதரவு வட்டாரம்.

பங்களிப்பு என்னவென்று தெரியாவிட்டாலும் ரெண்டு மணி நேரம் செலவழிச்ச படம் பார்க்கிற தமிழ் பேசும் சனத்தை கிள்ளுக் கீரையா நினைக்கலாம் எண்டு சாதனை படைச்சுப்போட்டார். இலண்டனிலையும் இப்படித்தான் நடக்கிறதோ தெரியேல்லை. 'தாய் மனசு' படத்தை தடாலடியா நிப்பாட்டிப் போட்டு ஒரு மன்னிப்புக் கூடக் கேட்கேல்லை. ஒரு சினிமா பட விசயத்திலையே நியாயமாக நடக்கத் தெரியேல்லை சிக்கலான இனப்பிரச்சனை விடயத்திலை முற்போக்கு மாதிரிக் காட்டிக்கொள்ளுறதிலை அர்த்தமில்லை பாருங்கோ. ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம். வசந்தமான ராசா புரிந்து கொள்ளட்டும்.

ரம்ழான் திருநாளுக்கு பிறை கண்ட செய்தியை ஆங்கிலத்திலை மட்டும் வெளியிட்டு அரச தொலைக்காட்சி மொழிப் புலமையைக் காட்டினது இருக்கட்டும். என்ரை கேள்வி என்ன தெரியுமோ? இலங்கைக்கு வந்திருக்கிற உல்லாசப் பயணிகளுக்காகவோ பிறை கண்ட செய்தி வெளியிடப்பட்டது? ரம்ழானைக் கொண்டாடுவது யார் எண்ட விசயம் கூட நம்மூர் தொலைக்காட்சிக்கு எப்படி தெரியாமல் போனது? ஐயா தொலைக்காட்சியாளர்களே தமிழும் இந்த நாட்டில் அரச கரும மொழியுங்கோ. சமாதானத்தைப் பற்றி கலந்துரையாடல் காட்சி நடத்திக் காட்டினால் மட்டும் போதாது. விளங்கினால் சரி.

கிழக்கிலை ரெண்டு எழுத்தார் தங்களைச் சந்திச்ச செய்தி பொய் எண்டு கூட்டான கட்சி வட்டாரம் சொல்லுகுது. வெளிநாட்டு செய்தி நிறுவனம் கேட்டதுக்கும் கிழக்கின் சிங்கத்தார் அடிச்சு மறுத்திருக்கிறார். பிறகெப்படி செய்தி வந்தது? எல்லாம் ஒரே குழப்பாமாகக் கிடக்கு.

படைத் தளபதி ரெண்டு எழுத்து உறுப்பினரோடை போய் பேசினவரல்லோ, மொழி பெயர்ப்பாளர் உதவியோடைதான் பேச்சு நடந்தது. ஆனால் பாருங்கோ ரெண்டு எழுத்து உறுப்பினர் சரளமாக சிங்களத்தில் பேசினவர் எண்டு செய்தி வருகுது. ஏன் இந்த தவறுகள் நடக்குதோ தெரியேல்லை.

'முகாபலா' என்றால் என்ன அர்த்தம்? காதலையும் மோகத்தையும் விளக்க தமிழ் வார்த்தைகளுக்கோ பஞ்சம்? கண்ணதாசன் பாடல் ஒண்டு கேளுங்கோ.

"அச்சம் விட்டு ஆசை வந்து
அருகில் இழுக்குது!
ஐயோ! அம்மா! என்ன சொல்வேன்
மனசை கெடுக்குது!

மாம்பழத்தில் வண்டு எப்படி
மயங்கிக் கிடக்குது?...
மதுவுக்குள்ளே எறும்பு எப்படிச்
சுருண்டு கிடக்குது?...."

இப்படிப் பாடினா எங்களுக்கு விளங்காதோ? தெரியாத அர்த்தங்களிலை எழுதிப் போட்டு அவசர யுகம் எண்டு சொல்லுறது பொருத்தம் இல்லை.

# சுருதி மாறிய அமுதரின் பேச்சு

## இரண்டு தாக்குதல்கள்

1982ம் ஆண்டில் இரண்டு பாரிய தாக்குதல்களுக்கு திட்டமிடபப்ட்டது.

ஒன்று தோல்வியில் முடிந்தது. பொன்னாலைப் பாலக் குண்டு மட்டும் வெடித்திருந்தால் அதுவே முதலாவது பெரிய நிலக்கண்ணிவெடி தாக்குதலாக அமைந்திருக்கும். அத்தாக்குதல் தோல்வியானது பெரியளவான தாக்குதல் ஒன்றை நடத்த வேண்டும் என்ற எண்ணத்தை புலிகளிடம் ஏற்படுத்தியது.

அப்போது பிரபாகரன் இந்தியாவில் இருந்தார். இங்கே மாத்தையா பொறுப்பாக விளங்கினார். தாக்குதல் நடவடிக்கைக்கான பொறுப்பு மாத்தையாவின் விருப்பத்தோடு சாள்ஸ் அன்ரனி என்ற சீலனிடம் ஒப்படைக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸ் நிலையம்தான் இலக்கு.

ஏற்கனவே- ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தை உமா-சுந்தரம் குழுவினர் தாக்கியிருந்தனர்.

அதனால், தாமும் ஒரு பொலிஸ் நிலையத்தை தாக்கி வெற்றிபெற வேண்டும் என்று புலிகள் நினைத் திருந்தனர்.

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத் தாக்குதலின் பின்னர் வடக்கில் இருந்த பல பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டன.

ஏனைய பொலிஸ் நிலையப் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன அவ்வாறு பலப்படுத்தப்பட்டிருந்த பொலிஸ் நிலையங்களில் சாவகச்சேரி

வைக்கப்பட்டார். நிர்மலாவின் சகோதரி ரஜினி சீலனுக்கு சிகிச்சை செய்து அவரது உயிரைக் காப்பாற்றினார்.

இந்த ரஜினிதான் பின்னர் யாழ் மருத்துவபீட விரிவுரையாளராக இருந்தவர். திரணகம என்னும் சிங்களவரை காதலித்து மணமுடித்தார்.

'முறிந்த பனை' என்னும் ஆவணத்தை வெளியிட்டவர்களில் ஒருவராக இருந்த ரஜினி திரணகம புலிகள் உட்பட சகல தமிழ் அமைப்புக்களது ஜனநாயக மற்றும் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தினார். 1989ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வைத்து ரஜினி திரணகம சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது கொலைக்கு புலிகளே காரணம் என்று நம்பப்பட்டது.


ஆனால், தற்போது வெளியாகும் தகவல்கள் 'ரஜினி திரணகம' கொலைக்கு புலிகள் காரணமல்ல என்று தெரிவிக்கின்றன. (இது பற்றி பின்னர் விளக்குகிறேன்)

## முதல் பலி

சாவகச்சேரி பொலிஸ் நிலைய தாக்குதலின் பின்னர் நடந்த தேடுதல் வேட்டையில் புலிகளது முக்கிய உறுப்பினரான சங்கர் மாட்டிக்கொண்டார்

கமாண்டோக்களது முற்றுகையிலிருந்து தப்பிச் செல்லும்போது அவர் படுகாயமடைந்தார்

சங்கரை படகில் தமிழ் நாட்டுக்கு கொண்டுசென்றனர் புலிகள். மதுரையில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில்



சங்கர்

அதே அமுதர், "ஒரு சில ஆயுதங்களை வைத்துகொண்டு என்ன செய்ய முடியும் ? சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது." என்றெல்லாம் பேசத் தொடங்கினார்.

சலுகைகளுக்காக கையேந்த மாட்டோம் என்று சொன்னவர்கள் கூட்டணியினர்.

1977 பொதுத் தேர்தலின் பின்னர் அரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கிய 'கோட்டாக்களை' கூட்டணியினர் பெற்றுக்கொண்டனர்.

சமாதான நீதவான் (ஜே.பி) பதவிகளை தமது ஆதரவாளர்களுக்கு பெற்றுக்

சங்கத்தில் தலைவரான பின்னர் ஊழல் மலிந்தது. மோசடிகள் பரவின.

மனோகரன் என்னும் ஒருவர் யாழ்-கூட்டுறவுச் சங்க ஊழலை எதிர்த்து சாகும்வரை உண்ணாவிரதமிருந்தார்.

அகிம்சைவாதியான ஆலாலசுந்தரமோ அல்லது கூட்டணித் தலைமையோ அதனைக் கண்டுகொள்ளவில்லை.

ஈழமாணவர் பொதுமன்றம் (G.U.E.S) கூட்டுறவு சங்க ஊழலை புள்ளிவிபரங்களோடு அம்பலப்படுத்தியது.

ஆலாலசுந்தரம் ஒரு சட்டத்தரணி. ஊழலை மறைக்க உபாயம் தேடினார்.

யாழ்-கூட்டுறவுச் சங்க கணக்குகள் உட்பட முக்கிய ஆவணங்கள் இருந்த கட்டிடம் ஆலாலசுந்தரத்தின் ஏற்பாட்டால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

ஊழலுக்கு இருந்த ஆதாரங்களை தீ தின்னக்கொடுத்துவிட்டு நிம்மதியாக இருந்தார் ஆலால்.

## எச்சரிக்கை

கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கதிரவேற்பிள்ளை மரணமானதால் வெற்றிடம் ஏற்பட்டது. ஆலாலசுந்தரத்தின் கொள்கை உறுதியை மெச்சிய (?!) கூட்டணித் தலைமை அவருக்கே அந்தப் பதவியையும் வழங்கி கௌரவித்தது.

22.02.83 அன்று யாழ் கல்வியங்காடு சந்தைக்கு எதிரில் உள்ள ஆலாலின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது.

ஆலாலசுந்தரத்தை சந்திக்கவேண்டும் என்று கேட்டனர் கதவைத் தட்டிய இளைஞர்கள்.

ஆலால் வந்தார். இளைஞர்கள் அவரது காலில் சுட்டனர்.

மறுநாளே பிரசுரம் ஒன்று வெளிவந்தது. அது புலிகளால் வெளியிடப்பட்டிருந்தது.

ஆலாலசுந்தரத்தின் ஊழல் நடவடிக்கைகள் அந்த பிரசுரத்தில் வெளியிடப்பட்டிருந்தன.

சமூக விரோத செயல்களில் ஈடுபட்ட குற்றத்திற்காக ஆலால் எச்சரிக்கப்பட்டி

## கவசவண்டிமீது தாக்குதல்

வடக்கே கவச வண்டிகள் சகிதம் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

கவச வண்டிகளைப் பார்த்த மக்கள் பீதியடைவார்கள். வெல்ல முடியாது என்ற பிரமையால் போராட்டத்தில் நம்பிக்கை தளரும். நம்பிக்கை தளர்ந்தால் தீவிரவாத இளைஞர்களுக்கு கொடுக்கும் ஆதரவும் குறையும் என்று படையினர் எதிர்பார்த்தனர்

1983 மார்ச் 4ம் திகதி பரந்தனுக்கு அருகே உள்ள உமையாள் புரத்தில் கவசவண்டிகள் சகிதம் இராணுவத்தினர் ரோந்து வந்து கொண்டிருந்தனர்.

திடீர் தாக்குதலை மேற்கொண்டனர் கெரில்லாக்கள். இராணுவத்தினரும் பதில் தாக்குதலை ஆரம்பித்தனர்

சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற மோதலில் ஐந்து இராணுவத்தினர் காயமடைந்தனர்.

இராணுவ கவச வண்டியும் சேதமடைந்தது.

புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

## பாதுகாப்பு மாநாடு

வடபகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி ஜே.ஆர். ஜெயவர்த்தனா கவலையடைந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும் சேர்த்துக்கொண்டு தீவிரவாதிகளை தனிமைப்படுத்தலாம் என்று திட்டமிட்டார்.

'பாதுகாப்பு மாநாடு' ஒன்றை யாழ்ப்பாணத்தில் கூட்டுமாறு யாழ் அரச அதிபர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

'பாதுகாப்பு மாநாடு' என்று அழைக்கப்பட்ட போதும் தீவிரவாத இளைஞர்களது நடவடிக்கைகளை வேரோடு களையும் ஆலோசனை நடத்துவதே நோக்கம்.

மாநாட்டுக்கு யாழ் மாவட்ட அமைச்சர்

அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

18

அரசியல் தொடர்

பொலிஸ் நிலையமும் முக்கியமானது.

## சாவகச்சேரியில் தாக்குதல்

1982 அக்டோபர் 29ம் திகதி அதிகாலையில் மினிபஸ் ஒன்று புலிகளால் கடத்தப்பட்டது.

மினி பஸ்சில் தாக்குதல் பிரிவினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் நோக்கிச் சென்றனர்.

அதிகாலை நேரம் என்பதால் பொலிசார் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர்

காவல் பணியில் ஈடுபட்டிருந்த பொலிசார் விபரீதத்தை உணரும் முன்பாகவே மினிபஸ்சில் இருந்து குதித்த போராளிகளது துப்பாக்கிகள் முழங்கின.

துப்பாக்கி வேட்டுக்களை கேட்ட பொலிசார் தூக்கத்தில் இருந்து விழித்துக் கொண்டு எழுந்து தப்பி ஓடினார்கள்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மாடிவீட்டில் இருந்தது. மேல் மாடியில் இருந்து குதித்த ஒரு பொலிஸ் அதிகாரியின் கால் முறிந்தது.

கைக்குண்டுகளை வீசி ஆயுத களஞ்சிய அறையைத் தகர்த்த புலிகள் அங்கிருந்த ஆயுதங்களை கைப்பற்றிக் கொண்டனர்.

அனுமதிக்கப்பட்ட சங்கர் அங்கு பலியானார்.

மதுரையில் உள்ள சுடுகாட்டில் சங்கரின் உடல் தகனம் செய்யப்பட்டது. பொன்னம்மான், பேபி சுப்பிரமணியம் (இளங்குமரன்) கிட்டு ஆகியோரோடு இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட முக்கியமான ஒருவர் தமிழ்நாட்டு அரசியல்வாதியான நெடுமாறன்.

புலிகள் இயக்கத்தில் முதல் பலியான போராளியாக சங்கர் நினைவுகூரப் பட்டு வருகிறார்.

27.11.82 அன்று தான் சங்கர் உயிர் துறந்தார். அந்த நாளில்தான் புலிகளது மாவீரர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஐ.தே. கட்சி உறுப்பினர் தம்பாபிள்ளை என்பவர் மீதான நடவடிக்கைக்கும் சங்கர் பொறுப்பாக இருந்தார்.

பொன்னாலை பாலத்தில் தாக்குதல் முயற்சி, சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல் என்பவை சங்கர் பங்குகொண்ட முக்கியமான நடவடிக்கைகளாகும்.

சத்தியநாதன் என்னும் சங்கர் பிறந்தது 19.6.61 தியாக மரணம் 27.11.82.

## பருத்தித்துறையில் குறி



ஆலால சுந்தரம்

ருக்கிறார். காலில் சுட்டது ஒரு எச்சரிக்கை மட்டும்தான் என்று பிரசுரம் கூறியது.

உண்ணாவிரதங்களுக்கு அசைந்து கொடுக்காமல் இருந்த யாழ்-கூட்டுறவு சங்க நிர்வாகிகள் ஆலாலுக்கு வெடி விழுந்தவுடன் தாமும் விழுந்தடித்து பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

கூட்டணித் தலைமை கதி கலங்கிப் போனது. தம்மை சுடத் துணியார்கள் இளைஞர்கள் என்று கூட்டணி நினைத்தது பொய்த்துப் போனது.

கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் உடனடியாக புலிகளையும், தம்மை சுடக்கூடியவர்கள் என்று கருதப்பட்ட குழுக்களையும் புகழத் தொடங்கினார்கள்.

## யோகேசின் உபதேசம்

இந்த இடத்தில் ஒரு சம்பவம் கூறுகிறேன்.

ஈழமாணவர் பொதுமன்ற (G.U.E.S) மாணவர்கள் அன்றைய யாழ் தொகுதி பா.உ. யோகேஸ்வரனைச் சந்திக்கச் சென்றார்கள்.

யாழ் நகர் வர்த்தகர்களிடம் நிதி சேகரிக்க ஒரு சிபாரிசுக் கடிதம் கேட்டார்கள்.

விஜயக்கோன் தலைமை வகிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

அமிர்திலிங்கமும், கூட்டணி பா.உக்கள் சிலரும் மாநாட்டில் கலந்து கொள்ள மனப்பூர்வமாகச் சம்மதித்தனர்.

## இயக்கங்கள் கொதிப்பு

இயக்கங்கள் கூட்டணியின் துரோகம் என்று கொதித்தன.

புலிகள் ஒரு திட்டம் வகுத்தனர் கூட்டணியை தனது கையில் வைத்திருந்தால் நோக்கத்தை நிறைவேற்றலாம் என்று ஜே.ஆர். போட்ட கணக்கை தப்புக் கணக்காக்க வேண்டும் அதுதான் புலிகளது நோக்கம்.

1983ம் ஆண்டு ஏப்ரல் 2ம் திகதி. அன்றுதான் யாழ் அரச செயலகக் கட்டிடத்தில் 'பாதுகாப்பு மாநாடு' ஆரம்பமாக இருந்தது.

'பாதுகாப்பு மாநாட்டுக்கு' அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்கு செல்வதற்கு இடையில் புலிகள் விரைந்து சென்றனர்.

மாநாடு ஆரம்பமாவதற்கு சில மணிநேரங்களே இருந்தன.

திடீரென்று பலத்த குண்டுச் சத்தம். மாநாடு நடக்கவிருந்த கட்டிடம் உடைந்து வீழ்ந்தது.

யாழ் அரச செயலகம் ஸ்தம்பித்தது.

# கூட்டணித் தலைவரின் கூட்டுறவுச் சங்க ஊழல்

ஆயுதங்களை கைப்பற்றிக்கொண்டு பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியேற நினைத்த நேரத்தில் கதவு ஒன்றின் பின்னால் மறைந்து நின்ற பொலிஸ்காரர் சீலனை குறிபார்த்தார்.

சீலன் உஷாராவதற்கிடையில் குண்டு பாய்ந்தது. காயமடைந்த சீலனையும் தூக்கிக்கொண்டு கைப்பற்றிய ஆயுதங்களோடு தப்பிச் சென்றனர் புலிகள்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் பங்குகொண்டவர்களில் சீலன், மாத்தையா, சங்கர் ஆகியோர் முக்கியமானவர்கள்.

## இரகசிய சிகிச்சை

தீவிர தேடுதல் வேட்டை ஆரம்பமானது. காயப்பட்ட சீலனை காப்பாற்றுவதே பெரும்பாடாக இருந்தது.

யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களாக இருந்தவர்கள் நித்தியானந்தன், நிர்மலா நித்தியானந்தன் தம்பதியினர்.

அவர்கள் வீட்டில் சீலன் தங்க

புலிகள் உட்பட விடுதலை இயக்கங்களின் முக்கியஸ்தர்கள் பலர் யாழ்ப்பாணம் வடமராட்சியை சேர்ந்தவர்கள் என்ற சந்தேகம் பொலிசாருக்கு ஏற்பட்டிருந்தது.

பருத்தித்துறையில் இருந்த பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் விஜயவர்த்தனா அட்டூழியங்களுக்கு பெயர் பெற்றவர்.

1983 பெப்ரவரி 18ம் திகதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார் விஜயவர்த்தனா. காத்திருந்த புலிகள் தாக்கினார்கள்.

இன்ஸ்பெக்டர் விஜயவர்த்தனாவும் ஜீப் சாரதி ராஜபக்ஸவும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதே காலகட்டத்தில் புலிகளுக்கும் கூட்டணிக்கும் இடையிலான முரண்பாடுகள் தீவிரமாக வளரத்தொடங்கின.

பிரபாகரன் தனது கட்டுப்பாட்டை மீறி செல்லத்தொடங்கிவிட்டதை அமிரும் உணர்ந்தார்.

தமிழர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தனியான படையை உருவாக்கவேண்டும் என்று சொன்னவர் அமிர்.

கொடுத்தார்கள்.

அரசாங்கத்தை கண்டிப்பதுபோல மேடைகளில் பேசினாலும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன் நெருக்கமாகவே இருந்தனர்.

வட பிராந்திய போக்குவரத்து சபைக்கு தமது ஆதரவாளர்களை நியமித்தனர்.

## எதிர்த்தார்-எடுத்தார்

யாழ் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக மு.ஆலாலசுந்தரம் பதவி பெற்றார்.

1977 பொதுத் தேர்தலுக்கு முன்னர் துரோகிகள் வசை பாடல்களில் வெளுத்து வாங்கியவர் ஆலால சுந்தரம்.

யாழ் மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா யாழ் கூட்டுறவு சங்கத்தில் ஊழல் செய்கிறார் என்று ஆதாரங்களை அடுக்குவார் ஆலால்.

துரையப்பாவுக்கு ஆலால சுந்தரம் வழங்கிய பட்டம் 'கூப்பன் கள்ளன்.'

அதே ஆலால சுந்தரம் யாழ் கூட்டுறவுச்

யோகேஸ்வரன் உடனே சம்மதிக்கவில்லை. மாணவர்களோடு விவாதித்தார். யோகேஸ்வரன் மாணவர்களைப் பார்த்து சொன்னது இது:

**"நீங்கள் தம்பியோடு அல்லது கே.எம். குறூப்போடு போய் சேரலாம்தானே?"**

கே.எம் குறூப் என்பது குட்டிமணி குழுவினரை குறிக்கும் வார்த்தை.

கோபமடைந்த மாணவர்கள் கடுமையாக எதிர்த்தனர். இறுதியில் பணிந்த யோகேஸ் கடிதம் கொடுத்தார்.

பலம் இருந்தால் அந்த பலத்தால் தமக்கும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிந்தால் அந்த பலம் உள்ளவர்களை பாராட்டுவது

அவ்வாறு பாராட்டிக்கொண்டே தமது காரியத்தைச் சாதிப்பது என்பதுதான் கூட்டணி தலைவர்கள் பலரது தந்திரமாக இருந்தது.

அமிர் மட்டும் இந்த விடயத்தில் சற்று மாறுபாடாக இருந்தார்.

புலிகள் தனது கட்டுப்பாட்டில் இருந்து விலகிச்செல்கிறார்கள் என்று தெரிந்தவுடன் புலிகளை பகிரங்கமாகவே விமர்சித்தார் அமிர்.

ஆனாலும் 'பாதுகாப்பு மாநாடு' பிறிதோர் இடத்தில் நடைபெற்றது.

மாநாடு நடக்கவிருந்த கட்டிடத்தை சேதமாக்கி புலிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஆனாலும் அமுதரும், கூட்டணியினரும் 'பாதுகாப்பு மாநாட்டில்' கலந்து கொள்ளத் தவறவில்லை

**"அரச பயங்கரவாதிகளும், அரசியல் சந்தர்ப்பவாதிகளும் கலந்துகொள்ளும் மாநாட்டில் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை ஒடுக்கிவிடமுடியாது. அதனை உணர்த்தவே மாநாட்டு கட்டிடம் தாக்கப்பட்டது"** என்று புலிகள் கூறினார்கள்.

## அரசின் அறிவிப்பு

1983இல் கூட்டணியின் உதவியோடு ஜே.ஆர். அரசு மேற்கொண்ட மற்றொரு நடவடிக்கை புலிகளை ஆத்திரமூட்டியது.

1983 மே மாதம் 18ம் திகதி வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தப் போவதாக அரசு அறிவித்தது.

(தொடர்ந்து வரும்)

# விபரீதங்களுக்கு வழியமைத்த தப்புக்கணக்குகள்

அலசுவது – இராஜதந்திரி

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஆயுத ரீதியிலான மோதல் தவிர்ப்பு அமுலில் இருந்து வரும் இத்தருணத்தில் இரு சாராரும் தத்தமது கருத்து வேற்றுமைகளை வாய்வீச்சாகவும், அறிக்கைகள் மூலமாகவும் வெளிப்படுத்தியிருந்தனர்.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் சந்திரிகா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமிடையே சமரசப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியிருந்தன. ஆயினும் ஆக்கபூர்வமாகவும், வேகமாகவும் அப்பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெறாதிருக்கக் காணப்படுகின்றன.

அரச தரப்பினர் பொருளாதாரத் தடைகளை நீக்கிவிட்டுள்ளதாகக் கூறுகின்றனர். அனால் வடக்கே இருந்து வரும் தகவல்கள் அங்கே பாவனைப் பொருட்களுக்கு தட்டுப்பாடு தொடர்ந்து நிலவி வருவதாகவும், விலைகளில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி காணப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றன.

> “தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு பலம்மிக்க ஆயுதப் போராட்ட அமைப்பாகவே இருந்து வருகின்றனர். அவர்களது பலத்தை எடைபோட்டே போர் தவிர்ப்பு ஒப்பந்தமும் தொடர்கிறது.”



சந்திரிகா அரசு இது குறித்து கருத்து வெளியிடுகையில், வடக்கிற்கு அனுப்பி வைக்கப்படும் பொருட்களில் பெரும்பாலானவை தமிழீழ விடுதலைப் புலிகளையே சென்றடைவதாகத் தெரிவித்துள்ளதுடன், வடபகுதி மக்களின் பொருள் விநியோகத்தை தமிழீழ விடுதலைப் புலிகளே நிர்ணயிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பூநகரி-சங்குப்பிட்டிப் பாதை திறப்பு தொடர்பாக அரசாங்கம் எடுத்த முடிவை ஒரு தலைப்பட்சமானது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வே.பிரபாகரன் சாடியுள்ளார்.

இப்பாதை திறப்பு விடயம் அரசு-புலிகளுக்கிடையிலான சமரச அணுகுமுறைகளில் ஒரு தொல்லையாகவே இருந்து வந்தது.

பூநகரி-சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்துவிடவேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் முன்னைய ஆட்சியாளர்களையும் வலியுறுத்தி வந்தனர். ஆனால் எதுவித சாதகமான நிலையையும் புலிகளால் அன்று எட்டிவிட முடியவில்லை.

ஆயினும் தற்போது சந்திரிகா அரசு பூநகரி-சங்குப்பிட்டிப் பாதையை திறந்துவிட்டுள்ள அதே சமயம், தமிழீழ விடுதலைப் புலிகள் இந்நடவடிக்கையை ஒருதலைப்பட்சமானது என்று சாடியுள்ளனர்.

சந்திரிகா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானதிலிருந்து, சமரச அணுகுமுறைகளில் நாட்டு மக்கள் பெரிதும் நம்பிக்கை வைக்க ஆரம்பித்தனர்.

வடக்கே சென்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய அரச தரப்பினர் கொழும்பு திரும்பியதும், "பேச்சுக்கள் முன்னேற்றகரமானதாக இருந்தன. அனைத்தையும் மனந்திறந்து பேசினோம்" என்றே கூறிவந்தனர்.

இருந்தபோதிலும் சந்திரிகா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே தோன்றிய முரண்பாடுகள், சமரச முயற்சிகளைப் பாழாக்கிவிடுமோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இரு தரப்பினரும் நடத்திய பேச்சுக்களையடுத்து மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது. இதனையடுத்து கடந்த இரு மாதங்களாக வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் எதுவித அசம்பாவிதங்களும் இடம்பெறாதிருக்கக் காணப்படுகின்றது.

இம்மோதல் தவிர்ப்பு நிலை காரணமாக வடக்கு-கிழக்குப் பிரதேச மக்கள் சுதந்திரமாக நடமாடித் திரிவதுடன், குண்டுவீச்சுக்கள், மற்றும் இராணுவக் கெடுபிடிகள் என்பனவற்றின் அச்சுறுத்தலின்றி இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இத்தகைய அமைதி நிலை நீடித்து, நாளடைவில் ஒரு பரிபூரண அமைதி நிலை ஏற்படவேண்டுமென்பதே வடக்கு-கிழக்கு மக்களின் விருப்பமாக இருக்கின்றது.

இது தவிர நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சமாதானத்தின் தேவை என்றுமில்லாதவாறு உணரப்பட்டிருக்கின்றது. பல்வேறு அமைப்புகளும் சமாதானக் கூட்டங்கள், யாத்திரைகள் என்பனவற்றை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஒழுங்கு செய்துவரக் காணப்படுகின்றன.

எனவே சமாதான அணுகுமுறைகளில் நாட்டு மக்கள் நம்பிக்கை கொள்ள ஆரம்பித்துள்ள இத்தருணத்திலேயே சந்திரிகா அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒருவரை ஒருவர் கடந்த வாரங்களில் சாடியிருந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா, தமிழீழ விடுதலைப் புலிகளுடனான தனது தொடர்புகள் குறித்து கருத்து வெளியிட்டபோது இருசாராரும் இதுவரை சுமார் முப்பது கடிதங்கள்வரை பரிமாறிக்கொண்டதாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இத்தகவல், நேரடிப் பேச்சுக்களுக்கப்பால் கடிதத் தொடர்புகள் மூலமாகவும் இரு தரப்பினரும் கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபட்டிருந்ததையே வெளிப்படுத்தியது.

ஜனாதிபதி சந்திரிகா, இரு சாராரும் இதுவரை சுமார் முப்பது கடிதங்கள்வரை பரிமாறிக்கொண்டதாக மட்டுமே தெரிவித்தாரே தவிர அக்கடிதங்கள் ஊடாக தாம் தொடர்புகொண்ட விடயங்கள் பற்றி எதனையும் குறிப்பிடவில்லை.

கடந்த ஆட்சியாளர்கள்கூட தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர். அப்போதும்கூட "பேச்சுக்கள் சுமுகமாக இருக்கின்றன; முன்னேறகரமாக இருக்கின்றன" என்று கூறப்பட்டன. ஆனால் எதிர்பாராதவிதமாக இரு சாராரும் அன்று பேச்சுக்களை முறித்துக்கொண்டு மோதல்களில் குதித்தனர்.

பேச்சுவார்த்தைகளில் ஆராயப்பட்டவை, இரு தரப்பினரும் இணங்கிக்கொண்ட விடயங்கள் என்பனபற்றி எதுவுமே வெளியே தெரிந்திருக்கவில்லை. அனைத்தும் மூடுமந்திரமாகவே இருந்தன.

ஆனால் மோதல்கள் ஏற்பட்டமைக்கு அன்று இரு சாராரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டியதுடன், ஒரு நீண்ட கெடுபிடி யுத்தத்துக்கும் வழியமைத்திருந்தனர்.

பேச்சுக்கள் என்று ஆரம்பிக்கும் பட்சத்தில் இரு சாராருமே மனந்திறந்து நடந்துகொள்ளவேண்டியதே இன்றியமையாததாகின்றது. அத்துடன் சந்தேகங்கள், தப்பெண்ணங்கள் தோன்றுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டியதும் அவசியமானதாகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய கொழும்பின் பிரபல அரசியல் விமர்சகர் டாக்டர் ஜயதேவ உயங்கொட, இப்படிக் கூறியிருந்தார்: "பேச்சுவார்த்தைகள் என்று ஆரம்பிக்கும்போது அனைத்தையுமே 'உத்தியோகபூர்வமான' என்ற வட்டத்துக்குள் வைத்திருக்கவேண்டிய அவசியமில்லை. உலகில் பல நெருக்கடியான தீர்வுகளுக்கு 'உத்தியோகபூர்வம்' என்ற வட்டத்துக்கு அப்பாற்பட்ட விதத்தில் பரஸ்பர நல்லெண்ணங்களுடன் கூடிய கருத்துப் பரிமாற்றங்கள் மூலமாகவே தீர்வுகள் எட்டப்பட்டுள்ளன. இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள், மற்றும் அரச தரப்பினருக்கிடையிலான பேச்சுக்களும் பரஸ்பர புரிந்துணர்வைக் கொண்டவையாக உத்தியோகபூர்வ அணுகுமுறைக்கப்பாலும் இடம்பெறவேண்டும்." என்று தெரிவித்திருந்தார்.

எனவே, டாக்டர் உயங்கொடவின் இக்கருத்து இரு சாராரும் மேலும் நெருக்கமாக தமது தொடர்புகளை வைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையே குறிப்பிடுவதாக இருக்கின்றது.

பூநகரி-சங்குப்பிட்டி பாதை திறப்பு விடயத்தில் அரசாங்கம் எடுத்த முடிவு ஒருதலைப்பட்சமானது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் சாடியுள்ளனர். கூடவே இப்பாதைத் திறப்பு விடயத்தில் தமது கோரிக்கை முற்றுமுழுதாக கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பதும் அவர்களது முறையீடாக இருக்கின்றது.

பூநகரி-சங்குப்பிட்டிப் பாதையைத் திறக்கும்போது பூநகரியில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டுமென்பதே புலிகளின் வேண்டுகோளாக இருந்தது.

வடக்கே இராணுவ அழுத்தங்களை ஏற்படுத்துவதில் பூநகரியும் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருப்பதாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் கருதுகின்றனர்.

வடக்கே தென்னிலங்கையின் பெருநிலப் பகுதியை இணைக்கும் ஆனையிறவுப் பிரதேசம் ஒரு பாரிய தளமாகவே மாறியிருக்கின்றது. எனவே பூநகரி-சங்குப்பிட்டியும் அத்தகையதொரு இராணுவக் கேந்திரப் பகுதியாக விளங்கும் பட்சத்தில், வடபகுதி மக்கள் இராணுவ முற்றுகைக்குள்ளான ஒரு சூழ்நிலையிலேயே காணப்படுவர்.

இந்நிலையில் அரசினால் மேற்கொள்ளப்படும் அரசியல் ரீதியிலான பேச்சுக்கள் என்பது துப்பாக்கி முனையில் பயமுறுத்தலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஓர் அணுகுமுறையாக அமையும் என்றே கருதமுடியும்.

அரசியல் பேச்சுவார்த்தைகள் என்று அமர்ந்து கொள்ளும் பட்சத்தில் இரு தரப்பினரும் ஒருவரையொருவர் அச்சுறுத்தும் பாணியிலான சூழ்நிலைகளுக்கு இடந்தராதிருப்பதை உறுதிப்படுத்தவேண்டியவர்களாகின்றனர்.

கடந்தகால அனுபவங்கள் அரசியல் ரீதியாக நல்ல படிப்பினையாகவே இருக்கின்றன.

1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகியிருந்தது. இதனையடுத்து இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கியது.

தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட ஏனைய தமிழ்ப் போராட்ட இயக்கங்கள் தமது ஆயுதங்கள் பலவற்றை அன்று கையளித்து சமாதான அணுகுமுறைகளில் தமக்குள்ள விருப்பத்தை வெளியிட்டிருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வே.பிரபாகரன்கூட அன்று யாழ்ப்பாணம் சுதுமலைப் பகுதியில் நடந்த மாபெரும் பொதுக் கூட்டமொன்றில் புலிகள் இயக்கத்தினரின் ஆயுதக் கையளிப்புக் குறித்து அறிவித்திருந்தார்.

ஆயினும் இலங்கை-இந்திய ஒப்பந்த அமுலாக்கம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை-இந்திய அரசுகளுக்குமிடையே முரண்பாடுகள் தோன்றியதையடுத்து, மோதல்கள் வெடித்தன. இந்தியப்படையினர் இந்த மோதல்களை முறியடிக்க பூரண போர்க்கோலம் பூண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதக் கையளிப்பை மேற்கொண்டபடியால் அவர்களை இலகுவாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரலாம் என்று இந்தியப்படையினர் கருதியிருந்தனர்.

ஆனால் நாளடைவில் தாம் போட்டது ஒரு 'தப்புக்கணக்கு' என்று இந்தியப்படையினர் உணர்ந்துகொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள், நவீனரக ஆயுதங்கள் சகிதம்- உலகிலேயே நான்காவது பெரிய இராணுவம் என்ற நிலையிலிருக்கும் இந்திய இராணுவத்தை துணிச்சலுடன் எதிர்கொண்டனர்.

இறுதியாக இந்தியப்படையினர் தமது எண்ணம் கைகூடாத நிலையிலேயே இலங்கையிலிருந்தும் வெளியேறினர்.

இந்தியப் படையினரின் வெளியேற்றத்தையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கையின் பிரேமதாசா அரசுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

அப்போது இலங்கையின் பாதுகாப்புச் செயலாளராக அன்று ஜெனரல் சிறில் ரணதுங்க பதவி வகித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களின் சில கட்டங்களில் அவரும் பங்குபற்றியிருந்தார்.

ஆனால் மோதல்கள் ஏற்பட்டதையடுத்து முழு அளவில் மிண்டும் அரச படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக யுத்தத்தை முன்னெடுத்தனர்.

இத்தகைய முழு அளவிலான யுத்த முஸ்தீபுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் பலம் குறித்து இலங்கைப் பாதுகாப்புப் படையினர் போட்ட 'தப்புக் கணக்'கே காரணமாக அமைந்திருந்தது.

இந்தியப் படையினரால் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகள் விரிவாக மேற்கொள்ளப்பட்ட நிலையில், புலிகள் தொடர்ந்து போராடுவதில் பெரியளவிலான உத்வேகத்தைக் கொண்டிருக்கமாட்டார்களென்பது இலங்கைப் படையினரின் கணிப்பாக இருந்தது.

ஆனால் எதிர்பார்த்ததைவிட அனைத்துமே நேர் மாறானவிதத்திலேயே விளங்கியிருந்தன. இலங்கைப் படையினருக்கு முன்பு ஏற்பட்ட இழப்புக்களைவிட பாரதூரமான இழப்புகள் இந்த 'இரண்டாவது ஈழப் போர்' (Eelam war 2) என்ற யுத்தத்தில் எற்பட்டிருந்தன.

கூடவே முன்னைய அரசும் கடந்த நான்கு வருடகாலத்தில் என்றுமில்லாதவாறு பெருந் தொகைப் பணத்தை இந்த இரண்டாவது ஈழப் போரின் நிமித்தம் செலவிட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானது.

இந்நிலையில் சந்திரிகா அரசும் பேச்சுவார்த்தைகள் குறித்த விடயங்களில் எவ்விதத்திலும், தப்பெண்ணங்களுக்கோ அல்லது 'தப்புக்கணக்கு'களுக்கோ இடமளிக்கும் சூழ்நிலைகளை தவிர்க்கவேண்டியது அவசியமாகின்றது.

முழு நாடுமே இன்னுமொரு யுத்தம் ஏற்படுவதை முற்றிலுமாக நிராகரித்துள்ளது. இந்த நிராகரிப்பையே சந்திரிகாவின் அரசியல் வெற்றிகள் புலப்படுத்துகின்றன.

வடக்கு-கிழக்கு மக்கள்கூட போர் தவிர்ப்பு ஒப்பந்தம் நிலைகுலைந்து மீண்டும் தமது ஆகாயப் பிராந்தியத்தை போர் விமானங்கள் ஆக்கிரமிப்பதையும், ஜந்துக்களைப்போல நிலத்தைக் குடைந்து புகலிடம் தேடுவதையோ எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளமாட்டாக்ள்.

கடந்த ஒரு தசாப்தகாலமாக இராணுவ அழுத்தங்களால் தமிழீழ விடுதலைப் புலிகள் சூழப்பட்டிருந்தாக்ள். இந்நிலையில் எவ்வேளையிலும் இராணுவ அணுகுமுறைகள் தம்மீது கட்டவிழ்த்துவிடப்படலாம் என்ற சந்தேகம் அவர்களிடம் இருக்கவே செய்யும்.

மறுபுறம் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒரு பலம்மிக்க ஆயுதப் போராட்ட அமைப்பாவே இருந்து வருகின்றனர். அவர்களது பலத்தை நன்கு எடைபோட்ட நிலையிலேயே போர் தவிர்ப்பு ஒப்பந்தமும் அமுலில் இருக்கக்காணப்படுகின்றது.

இந்நிலையில் மோதல் என்று மீண்டும் ஏற்படும் பட்சத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் முழு அளவில் இராணுவ நடவடிக்கைகளில் குதிப்பாக்ள் என்றே எதிர்பார்க்க முடியும்.

எனவே கூடியவரை இரு தரப்பினரும் சூடான வாதப் பிரதிவாதங்களுக்கோ, அல்லது கடுமையான கருத்துப் பரிமாற்றங்களுக்கோ இடமளிப்பதைத் தவிர்க்க வேண்டியவர்களாகின்றனர்.

பேச்சுக்கள், மற்றும் சமரச முயற்சிகளில் தொய்வுகள், தாமதங்கள், ஏன் முறிவுகள்கூட ஏற்படலாம். ஆனால் எந்தவொரு கட்டத்திலும் இரு தரப்பினரும் இராணுவ நடவடிக்கைகளை தவிர்ப்பதன் மூலமே சமரச முயற்சிகளை ஆக்கபூர்வமானவையாக மாற்ற முடியும்.

இல்லையேல் அழிவுப்படலமே மீண்டும் தலையெடுப்பது நிச்சயமாகிவிடும்.



மனைவி ஜாக்குலினுடன் காரில் செல்கிறார் கென்னடி.

# திறந்த காரில் ஒரு பிரபலக் கொலை



ஒஸ்வால்டு

1963-நவம்பர் 22.

அமெரிக்கர்கள் தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும், பூங்காக்களிலும், மதுபான விடுதிகளிலும் எங்கும் சுறுசுறுப்பாக இருந்தனர்.

தமது பிரியத்துக்குரிய ஜனாதிபதி இன்றுதான் கொல்லப்படப் போகிறார், என்பதை அறியாமல் அமெரிக்கா அவசர யுகத்திற்கு ஏற்ப இயங்கிக்கொண்டிருந்தது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் இருக்கிறது டல்லாஸ் நகரம்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எஃப் கென்னடி அங்கு விஜயம் செய்திருந்தார்.

கென்னடியோடு அவரது அழகான மனைவி ஜாக்குலினும் கூடச் சென்றிருந்தார்.

"தங்களைக் காண டல்லாஸ் நகர மக்கள் ஆவலோடு இருக்கிறார்கள்."

ஜனாதிபதி கென்னடி அதைக் கேட்டவுடன் பூரிப்பாய் புன்னகைத்தார்.

"ஜாக்குலின் நீ ரெடியா?"

அமெரிக்காவின் இணையற்ற அழகியான தனது மனைவி ஜாக்குலினைப் பார்க்க கென்னடிக்கு பெருமையாக இருந்தது.

அன்று முன்பு எப்போதும் இருந்ததைவிட ஜாக்குலின் மிக அழகாகத் தெரிந்தாள்.

கட்டான உடல் என்றால் என்ன? ஜாக்குலின் அதற்கு விடையாவாள்.

அளவாக வெட்டப்பட்டு காதுகளை வருடிக்கொண்டு தோள்களைத் தொட்டு நிற்கும் முடி.. அமெரிக்காவின் மிக லேட்டஸ்டான பாஷன் எதுவென்று கேட்டால் அதற்கு ஜாக்குலின் அணியும் உடையில் பதில் இருக்கும்.

இந்த பிரமாதமான அழகி துணைவியாக இருக்கும் போது, கென்னடி எதற்காக நடிகை மர்லின் மன்றோவை தேடி ஓட வேண்டும்?

அமெரிக்கர்கள் அப்படித்தான் யோசித்தார்கள். இப்போது கென்னடியும் தன்னை மறுபரிசீலித்துக் கொண்டாரோ தெரியவில்லை.

ஜாக்குலினை ஆராய்வது போலப் பார்த்தார். "புறப்படலாமா?" ஜாக்குலின்தான் கேட்டாள்.

கென்னடியின் உதட்டில் புன்னகை "ஓ.கே.!"

வரவேற்பறையில் டெக்சாஸ் மாநில கவர்னர் ஜோன் பி கென்னடி காத்திருந்தார்.

ஜனாதிபதி வர, எழுந்து புன்னகையை பரிமாறி கை குலுக்கல் முடிய, வெளியே காருக்குச் சென்றார்கள்.

ஜனாதிபதி கென்னடியை மக்கள் காண்பதற்கு வசதியாக இருக்கட்டும் என்று திறந்த காரை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

கார் புறப்பட்டது. மரண தூதன் தனக்காகக் காத்திருப்பது தெரியாமல் மகிழ்ச்சியோடு பயணத்தை ஆரம்பித்தார் கென்னடி.

நேரம் 12.30.....

பாடசாலை புத்தக நிறுவனம் ஒன்றின் ஆறாவது மாடிக் கட்டிடத்தில் இருந்து வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தவனின் விழிகளில் பரபரப்பு.

இதயம் தடக்....தடக்....என்று அடித்துக் கொண்டது. கையிலே துப்பாக்கி. அதுவும் வீதியை நோக்கி குறி பார்த்துக் கொண்டிருந்தது.

'காரியம் முடியவேண்டும்.'

மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

விழிகளை அகல விரித்து மீண்டும் வீதியை அலசினான். வந்து கொண்டிருக்கிறது- கார் பவனி வந்து கொண்டிருந்தது.

கண்டுவிட்டான். இதயத் துடிப்பு ஏறியது. துப்பாக்கி விசையில் விரல் பதித்து தயாரானான்.

'அழகான நகரம். அன்பான மக்கள்' கென்னடி காருக்குள் இருந்தபடி மக்களை நோக்கி கையசைத்தார்.

....டுமீல்....

அவன் சுட்டான்.

குறி தவறியது. குண்டு வீதியில் இருந்த ஒரு மரத்தில் பட்டது.

கென்னடி தப்பிவிட்டார்.

அவன் மீண்டும் விசையை அழுத்தினான். இப்போதும் குண்டு தனது கடமையில் பாதியை மட்டுமே செய்தது.

கென்னடியின் முதுகில் பாய்ந்தது. அருகில் இருந்தவர்கள் திடுக்கிட்டு நிமிர, மற்றொரு குண்டு பாய்ந்து வந்தது. குறி தவறவில்லை.

கென்னடியின் தலையில் பாய்ந்தது. அப்படியே காருக்குள் சுருண்டு விழுந்தார் கென்னடி.

அருகிலிருந்த கவர்னரும் காயமடைந்தார்.

ஆனால்... கென்னடியின் உயிர்.... பிரிந்துவிட்டது!

அவன் மாடியில் இருந்து வேகமாக இறங்கினான்.

இறங்குவதற்கு முன்னர் துப்பாக்கியை மாடியில் மறைவாக ஒழித்து வைத்தான்.

மாடியை விட்டு அவன் இறங்கி வந்த வேகத்தில் களைத்திருந்தான். வியர்த்திருந்தான்.


அவனது பதட்டத்தைப் பார்த்த ஒரு பொலிஸ்காரர் அவனை தடுத்து நிறுத்த முற்பட்டார்.

ஆனால் அவனோ வேகமாய் நழுவி ஓடிவிட்டான்.

சந்தேகம் வலுப்பட்டது. அவனது அங்க அடையாளங்களை தெரிவித்து பொலிஸ் வயர்லெஸ் மூலம் தகவல்கள் பறந்தன.

அமெரிக்கா முழுவதும் செய்தி பரவியது. எங்கும் பதட்டம்.

அவன் மட்டும் பதட்டமே இல்லாமல் தனது வீட்டுக்குச் சென்றான்.




ஜாக்குலினின் உடையில் கென்னடியின் இரத்தம் சிந்தியது.

ஜாக்குலினிற்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. புரிந்தபோது சிலையாக உறைந்து போனார்.

பாதுகாவலர்கள் விரைந்து ஓடி வந்தனர்.

தனது உடைகளை மாற்றிக்கொண்டான். அவசரமேயில்லாமல் அலுமாரியைத் திறந்து அதற்குள் இருந்த கைத் துப்பாக்கியை எடுத்து தனது இடுப்பில் வைத்துக் கொண்டான்.

வீட்டை விட்டு வெளியே வந்து அருகில் உள்ள சினிமா தியேட்டர் நோக்கி நடந்தான்.

"ஒரு ரிக்கற் கொடுங்கள்."

பெற்றுக்கொண்டு உள்ளே சென்றான்.

அவன் உள்ளே சென்றதை ஒரு ஜோடி கழுகுக் கண்கள் கவனித்து விட்டதை அறியாமல் படத்தை இரசிக்கத் தொடங்கினான்.

இரசிப்பு நீடிக்கவில்லை. ஆபத்தான நொடிகள் நெருங்கி வந்தன.

தியேட்டரை சுற்றி வளைத்தது பொலிஸ். திரைப்படம் நிறுத்தப்பட்டது.

அவன் எழுந்து ஓடினான்.

பொலிஸ் சகல திசைகளிலும் நின்றது.

கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டான்.

"நெருங்கவேண்டாம். இரக்கமே காட்டமாட்டேன். குண்டுகளை பொழிந்து விடுவேன். விலகுங்கள்."

எச்சரித்தான். பின்புறமாய் வந்த பொலிஸ்காரர்கள் பாய்ந்து மடக்கினார்கள்.

'யார் நீ? உன் பெயர் என்ன?"

பொலிஸ் நிலையத்தில் கேட்டார்கள்.

"லீ ஹார்வி ஒஸ்வால்ட்"

என்று தன் பெயர் சொன்னான்.

"ஏனடா எங்கள் ஜனாதிபதியை ஒழித்தாய்?"

ஒஸ்வால்ட் நிமிர்ந்து பார்த்து அலட்சியமாக கேட்டான்,

"என்ன...? ஜனாதிபதியை நான் கொன்றேனா? அபாண்டமான கேள்வி. கொலையாளியைப் பிடிப்பதை விட்டு விட்டு என்னோடு விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள்"

பொலிசார் குழம்பிப் போனார்கள். அதே நேரம் அமெரிக்காவின் இரவு விடுதியில் இருந்து கைத்துப்பாக்கியோடு ஒருவன் புறப்பட்டான்.

அவனது குறி...?

(தொடர்ந்து வரும்)

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ ✝ விந்தைகள்

## தீயது புகை என்று தெரியுமோ?




புகை பிடிப்பதை தவிர்ப்பதன் மூலம் பல நோய்களிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கிறது. ஆயுளையும் விருத்தி செய்யலாம். நுரைஈரல் நோய், புற்று நோய் சீழ்க்கட்டி ஏற்படுதல், கடுமையான மார்ச்சளி, மற்றும் இருதயநோய், இருதயத்துடன் தொடர்புடைய இரத்தநாளக் கோளாறுகள் ஏற்பட புகைபிடித்தலே பிரதானமான காரணியாக விளங்குகிறது. நோயற்ற வாழ்வுக்கு புகை பிடித்தலைத் தவிர்ப்பது நல்லது.

தார், நிக்கொட்டின் மற்றும் கார்பன் மொனொக்சைட் ஆகிய இரசாயனக் கலவைகள் புகைப்பதன் மூலம் உடலுட் புகுந்து பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. புகையை உள் இழுக்கும் போது இவை நுரை ஈரலில் 70 முதல் 90 சத விகிதம் வரை படிகின்றன. தார் நுரையீரலில் படிந்து புற்று நோய்க்கு வித்திடுவதுடன் சுவாசத்தைத் தடுக்கும் செயலுக்கும் துணைபுரிகிறது. நரம்புகளையும் நாளங்களையும் நிக்கொட்டின் தாக்குகிறது. இதுவே தற்காலிகச் சுறு சுறுப்பினையும் கிளர்ச்சியூட்டும் தன்மையையும் தருவதுடன் மீண்டும் மீண்டும் புகைபிடிப்பதை நாடுவதற்கான உந்துதலையும் தந்து, புகைத்தலுக்கு புகைப்பவரை அடிமையாக்குகிறது.

கார்பன் மொனொக்சைட் செங்குருதி உயிர்மங்களைத் தாக்கி, உடலின் பலபாகங்களுக்கும் பிராணவாயுவைக் கொண்டு செல்லும் அவற்றின் ஆற்றலையும் குறைக்கிறது.

இருதயத்துடன் தொடர்புடைய நோய்கள், பலவகைப் புற்று நோய்கள், சுவாசக் கொளாறு ஆகியவற்றுக்கு புகை பிடித்தல் காரணமாகிறது.

## இருதய நோயை எப்படித் தடுக்கலாம்?



பொதுவாக எமது உடல் உற்பத்தி செய்துவரும் கொழுப்புப் பதார்த்தத்திற்கு (கொலஸ்ட்ரோல்) மேலதிகமாக நாம் உண்ணும் உணவில் அடங்கப்பெற்று வரும் கொழுப்புப் பதார்த்தமும் ஒன்றிணைந்து குருதியிடன் கலந்து சென்று உடலின் உள்ளுறுப்புக்களில் உறைத்து விடுகிறது.

இவ்வாறு உறையப்படும் கொழுப்புக்களை குருதிகளின் நாளத்தில் படிந்து காலப்போக்கில் குருதியோட்டத்தின் தொழிற்பாடுகளை சீர் குலைப்பதன் மூலமே பெரும்பாலும் இருதய நோய்த் தாக்கம் ஏற்படுகிறது.

கொழுப்புச் சத்துக் கூடிய உணவு வகைகளில், குறிப்பாக முட்டையின் மஞ்சள் கரு, ஆடைநிரம்பிய பால்மா வகைகள், ஆடை நிரம்பிய வெண்ணை வகைகள், உறை கொழுப்புக்கள் கூடிக் காணப்படும் மாடு, ஆடு, பன்றி போன்றவைகளின் இறைச்சிகள், இறால் வகைகள், கண்டு, தயிர், தேங்காய் எண்ணெய் ஐஸ்கிறீம், மோல்ட் சொக்கலேட் வகைகளை குறிப்பிடலாம்.

கொழுப்புச் சத்துக் குறைவான உணவு வகைகளில், ஆடைநீக்கப்பட்ட பட்டர்,மற்றும் பால்வைககள், தவிடு நிறைந்த உணவு மா வகைகள், காய்கறிவகைகள், தானியங்கள், சோயாஅவரை, மற்றும் சோயா எண்ணை சிறிய மீன் வகைகள், இறைச்சியைப் பொறுத்த மட்டில் கோழி, முயல் போன்றவைகளை குறிப்பிடலாம்.

உடல் பருமனுடையோர் கொழுப்புச் சத்துக் குறைவான அகாரங்களையும் சிறிதளவே உட்கொள்வது உசிதமாகும்.

இருதய நோய்த்தாக்கத்திற்கு ஆளாகியுள்ளோர்களைப் பொறுத்தவரை உடற்பயிற்சி மிக மிக அத்தியவசியமானதாகும். இவ்வாறானவர்கள் தமது அன்றாட வீட்டுப்பணிகளில் ஈடுபடுவதோடு நாளாந்தம் நடத்தல் போன்ற இலகுவான உடற்பயிற்சியில் ஈடுபடுவது பொருத்தமாகும்.

இருதய நோய் ஏற்பட்டு குணமடைந்த நான்கு தினங்கள் வரை கொழுப்புச் சத்து அடங்கப் பெற்றிராத நீர் ஆகாரங்களை உட்கொள்வது சிறப்பாகும்.

ஐந்தாம் நாள் தொட்டு கொழுப்பற்ற இலகுவான திண்ம ஆகாரங்கைள உட்கொண்டு வருவதோடு தொடர்ந்தும் அட்டவணைப்படி குறைந்தளவு ஆகாரங்களை உட்கொண்டு வருவதன் மூலம் இருதய நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்திக் கொள்வது சாத்தியமாகும்.

இவ்விருதய நோய்த் தாக்கம் உணவு வகைகளினால் மாத்திரமன்றி பிறப்பு வழித் தோன்றல், உடல் உழைப்பு குறைவு, புகைபிடித்தல், நீரிழிவு போன்ற காரணிகளாலும் இரத்த அழுத்தமும் இருதய நோய்த் தாக்கமும் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாக வைத்தியர்கள் கூறுகின்றனர்.

## உடல் மெலியக் காரணங்கள்



பட்டினி, விரதம், உணவைக் கண்டால் வெறுப்பு, சத்துணவில்லாமை, வலி, கவலை, உறக்கமின்மை, அசதி போன்ற காரணங்களாலும் போதுமான அளவு உண்ணாமையாலும், விழுங்குவதில் குறைபாடு காரணமாக உணவை முழு அளவில் எடுத்துக்கொள்ள இயலாமை-நாக்கு பாரிசம், தொண்டை குழல் அழற்சி, ஹிஸ்டீரியா, கல்சியம் பற்றாக் குறை, தொண்டை குழல் கட்டிகளாலும் உடல் மெலியும்.

சிலருக்கு உண்ணும் உணவு முழுமையாக ஜீரணமாகி குடலால் உறிஞ்சப்படாமல் இருக்கும். வாந்திபேதி, குடலடைப்பு ஆகியவற்றாலும் உடல் மெலியும்.

வயிற்றுப் புற்றுநோய், அமீபியாசிஸ், பெருங்குடல் அழற்சி நோய், குடல் பூச்சிகள், குடல் கசநோய் உடலை மெலியச் செய்யும்.


கணையக்கட்டிகள், கல்லீரல் வியாதிகள், இதயத்தசை அழற்சி, சிலவகை நரம்பு நோய்கள், பார்கின்சன் நோய், காரணமாக உடல் மெலியும்.

பசியின்மை, மனநோய்,நீரிழிவு, சிறுநீரகக் கோளாறு, விட்டமின் பி-பற்றாக்குறை, நாள்பட்ட மலேரியா, காசநோய், ஆகியவற்றிலும் விபத்துக்களுக்குப் பின்பும் உடல் மெலிந்துபோகும்.

இரத்தப் புற்று, சோகை, மதுப்பழக்கம், அதிகமாக புகைப்பது போன்றவை உடல் மெலிந்து போக துணைசெய்யும்.

காரணமின்றி உடல் எடை குறைந்தால் தகுந்த மருத்துவ ஆலோசனை பெறவேணடும். சுவரை வைத்துத்தானே சித்திரம் வரைய முடியும்!

-டாக்டர் செல்வி.கணேசன்-



# வாரிசு

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் ஜிம்மி கார்டர். இன்றைய அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனின் வெளிநாட்டுக் கொள்கைகள் கார்டரின் வாரிசாக அவரை நினைக்க வைக்கின்றன. ஒரு கம்பியூட்டர் நிபுணர் தனது கம்பியூட்டரில் கிளின்டனின் முகம் ஜிம்மி கார்டரின் முகமாக மாறுவது போல் இருவரது புகைப்படத்தையும் வைத்து தந்திரம் காட்டியுள்ளார். அதுதான் இது.

(நன்றி டைம்ஸ்)

# மூட நம்பிக்கைக்கு அடி!

## இதோ என் சிலை!



ஜப்பான் தலைநகரான டோக்கியோவின் தென்மேற்கே 1320 கிலோ மீட்டர் (820 மைல்) தொலைவில் உள்ளது டொக்குனுஷிமா தீவு. அங்கே இருக்கும் அசன் என்ற ஊர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துவிட்டது. காரணம், அங்கு வாழ்ந்த ஷிகெசியோ இஸீமி 120 வயதுவரை படு ஆரோக்கியமாக வாழ்ந்துவிட்டுத்தான் செத்துப்போனார். சரியான ஆதாரபூர்வ ஆவணப்படி உலகில் நீண்டகாலம் வாழ்ந்தவர் இவர்தான் என்கிறது கின்னஸ் புத்தகம்.


இன்னொரு தகவல்; தான் வாழும்போதே தனக்கொரு சிலையையும் ஊரில் கட்டுவித்து அதன் கீழே இருந்து புகைப்படமும் எடுத்திருக்கிறார் ஷிகெசியோ இஸீமி. இப்போது சொல்லுங்கள்; உயிரோடு உள்ளவர்களுக்கு சிலை வைத்தால் ஆயுள் குறையும் என்பது மூட நம்பிக்கையா இல்லையா?

## தகவல் பெட்டி



# இந்த எடை போதுமா?

உலகில் மிகப் பெரிய இராட்சத ஆமை இதுதான். மொரிசியஸ் நாட்டின் 'அல்டால்ரா' என்னும் ஊரில் இது 1989இல் கண்டுபிடிக்கப்பட்டது. உடனே உலக சாதனைப் பதிவாளர்களுக்கு தகவல் பறந்தது. உலக சாதனையில் பதிவு செய்ய இந்த ஆமையை எடை பார்த்தார்கள். 657 இறாத்தல் இருந்தது. இந்து சமுத்திர கரைகளில் உள்ள தீவுகளில் இந்த ரக ஆமைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள் ஆய்வாளர்கள். இந்த அதிசய ஆமைக்கு 'எஸ்மெரெல்டா' என்று பெயர் வைத்தார்கள்.





அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்திலுள்ள 'பீட்ஸ்பர்க்' நகரில் ஒரு இளம் ஜோடி இடைவிடாது 190 மணி நேரம் கட்டித் தழுவி முத்தம் கொடுத்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளனர். அந்த வாலிபரின் பெயர் ரெபிளேசினா. வயது 25. அப்பெண்ணின் பெயர் பாபிஹோர்வாக். வயது 22. ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை 5 நிமிடம் மட்டும் பிரிந்து வைக்கப்பட்டார்கள். போகப் போக சாதனைகள் எது எதுவையோ வரும்போல.

## கார்த்திக்கின் முடிவு

ஒரே நேரத்தில் ஒன்று அல்லது இரண்டு. அதற்கு மேல் கூடாது. என்று முடிவெடுத்திருக்கிறார். கார்த்திக். படங்களில் நடிக்கும் விசயத்தில்தான் அந்த முடிவு.



விஜயகுமார், இந்துமதி, அஞ்சு படம்-ராஜவசரி

## நடிகை கொடுத்த

இந்தி திரையுலகில் துணிச்சலுக்கும் பெயர் ... யாரென்று கேட்டால் பட்டென்று வரும் ... குப்தா.

கவர்ச்சியாக நடிக்க சற்றும் தயங்காத ... சமீபத்தில் ஒரு விருந்துபசார நிகழ்ச்சியில் ... உச்சாக பானம் உள்ளே சென்றதால் ...

93

## மினி சினி

- 'வேலுச்சாமி' படத்தைத் தயாரித்த லட்சுமி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் அடுத்து, ஒரே நேரத்தில் இரு படங்களைத்தயாரிக்க விருக்கிறது. ஒரு படத்தில் பிரபுவும், இன்னொரு படத்தில் கார்த்திக்கும் கதாநாயகன்களாக நடிக்கவுள்ளனர்.
- 'தாயின் மணிக்கொடி' என்ற தமிழ்ப்படத்தில் நடித்து வரும் விஜயசாந்தி, சுரேஷ்கோபிக்கு ஜோடியாக மலையாளப் படமொன்றில் நடிக்கவுள்ளார் இப்படத்தின் முழுபடப்பிடிப்புக்களும் வெளிநாடுகளில் படமாக்கப்படவுள்ளன.
- 'எல்லாமே என் ராசாதான்' படத்தில் சொந்தக் குரலில் இரண்டு பாடல்களைப் பாடிய வடிவேலு, 'ராசையா' 'நம்ம ஊரு ராசா' போன்ற படங்களிலும் தலா ஒரு பாடல்களைப் பாடியுள்ளார். இப்போது இவர், ஏ.ஆர். ரகுமான் இசையில் 'மிஸ்டர் ரோமியோ' படத்திலும் ஒரு பாடலைப் பாடவுள்ளார்.
- 'பெரிய மருது' 'கறுப்பு நிலா' ஆகிய படங்களில் விஜயகாந்துடன் இணைந்து நடித்த ரஞ்சிதா, ராஜகாளியம்மன் பிலிம்ஸ் நிறுவனம் அடுத்து தயாரிக்கும் புதிய படமொன்றில் விஜயகாந்திற்கு ஜோடியாக நடிக்கவிருக்கிறார்.
- கமலின் நம்மவர் படத்திற்குப் பின்னர் தமிழில் படமின்றி சில இந்திப் படங்களில் நடித்து வரும் கௌதமி, தெலுங்கில் ஜெகபதிபாபுவுக்கு ஜோடியாக 'சங்கல்பம்' என்ற படத்தில் நடித்து வருகிறார்.
- 'சோலையம்மா' 'தாய்மனசு' போன்ற படங்களில் வில்லனாக நடித்துள்ள கரிகாலன், தற்போது கஸ்தூரிராஜா இயக்கி வரும் 'நாட்டுப்புறப்பாட்டு' படத்திற்காக மொட்டையடித்து நடிக்கிறார்.
- 'மணிரத்னத்தின் 'பம்பாய்' படத்தில் பிரபல இந்தி நடிகை சோனாலி பாந்த்ரே ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார். இவருடன் சேர்ந்து பிரபு தேவாவின் தம்பி பிரசாத் நடனமாடியுள்ளார்.
- 'உதிரிப்பூக்கள்' 'முள்ளும் மலரும்' போன்ற படங்களை இயக்கிய மகேந்திரனின் மகனான ஜான்ரோஷன் முதன் முறையாக 'மிஸ்டர் ஜானகிராமன்' என்ற படத்தை இயக்குகிறார். ராம்கி-'கருத்தம்மா' மகேஸ்வரி ஜோடியாக நடிக்கும் இப்படத்திற்கு இளையராஜா இசையமைக்கிறார்.



மம்தா குல்கர்னி

## சினி விசிட்



விஜயசாந்தி-மோகன்பாபு படம்-சூப்பர்லேடி

### கமலுக்கு ஜோடி மனிஷா

'ஜென்டில் மேன்' 'காதலன்' வெற்றிப்படங்களை இயக்கியதால் பர பரப்பாகப் பேசப்பட்டவர் சங்கர். சங்கர் இயக்கத்தில் கமல் நடிக்கும் புதிய படம் 'இந்தியன்' தொடக்க விழாவில் ரஜினிகாந்த் கலந்து கலகலப்பூட்டினார்.

கமலுக்கு ஜோடி இந்தி நடிகை மனிஷா கொய்ராலா. 'பம்பாய்' படத்தின் கதாநாயகியாக நடித்திருப்பவரும் அவரே.

படத்திற்குப் படம் வித்தியாசம் காட்டும் கமல் 'இந்தியன்' படத்திற்காகவும் ஒரு வித்தியாசம் செய்துள்ளார். காதோரம் முதல் உச்சந்தலைவரை முடியை ஒட்ட நறுக்கியிருக்கிறார்.

### இளையராஜா படத்தில் ரஜனி.

இளையராஜாவின் குடும்ப நிறுவனம் தயாரித்த 'ராஜாதி ராஜா' படத்தில் ரஜனிகாந்த் நடித்தார் படம் சூப்பர் ஹிட் தற்போது மீண்டும் ரஜினியை அனுமிதிருக்கிறார்கள் 'செய்யலாம் பொறுங்கள்' என்று சொல்லியிருக்கிறாராம். ரஜினி.

சிவாஜியின் பட நிறுவனம், நடிகை ரோஜா ஆகியோரும் தமது படங்களில் ரஜினியை நடிக்கவைக்க காத்திருக்கிறார்களாம்.

### இரசிகர்கள் விருப்பம் என் விருப்பம்

விஜயசாந்தி தெலுங்கில் நடித்து வெற்றிபெற்ற படம் தமிழில் 'லேடி பாஸ்' என்ற பெயரில் வந்து வசூலை அள்ளியிருக்கிறது.

அடுத்து வரும் விஜயசாந்தியின் மொழிமாற்றுப் படம் சூப்பர் லேடி.. அடி தடி இல்லாத படங்களில் நடித்தால் தனது ரசிகர்கள் பெரிய குறையாகக் கருதுகிறார்கள். ஆனால் ரசிகர்களது விருப்பப்படி ... நடிக்கிறாராம் விஜயசாந்தி.

வைஜயந்தி ஐ.பி.எஸ். படத்தை பெண் ... அதிகாரி ... துவக்கவைத்ததை மறக்கமுடியாத நினைவாக சொல்லுகிறார் விஜயசாந்தி.



ரஜினா ராண்டன்

பரத்குமார், சங்கவி படம்-அன்புமகன்

### மாயா பஜார் 1995

வெற்றிப் படங்களை வரிசையாக வழங்கிவரும் ... பஞ்சு அருணாசலத்தின் நிறுவனம் புதிதாகத் தயாரிக்கும் படத்தின் பெயர் 'மாயா பஜார் 1995'. இளையராஜா இசையில் ராம்கி-ஊர்வசி ஜோடி நடிக்கிறார்கள். கதை-வசனம் பஞ்சு அருணாசலம். ஊர்வசிக்குத்தான் படத்தில் வேலை அதிகம். இரட்டை வேடத்தில் முதன் முறையாக நடிக்கிறார். பெண் மந்திரவாதியாகவும், வெகுளிப் பெண்ணாகவும் நடிக்கும் ஊர்வசிக்கு இரண்டு பாத்திரங்களுமே 'அல்வா' மாதிரி.

முகப்பில் செண்பகா வினிதா விஜய்

### 1995 இந்தியன்

டாக்டர் ராஜசேகர் நடிக்கும் புதிய படத்தின் பெயர் '1995 இந்தியன்' இதே நேரத்தில் கமல் நடிக்கும் புதிய படத்தின் பெயர் 'இந்தியன்.' பெயர் குழப்பம் ஏற்படுத் தொலைக்கப் போகிறதே என்று நீங்கள் நினைத்தால் இன்னொரு தகவல்.

பாபுகணேஷ் கதாநாயகனாக நடிக்கும் படத்தின் பெயர் நான் ஒரு இந்தியன். இப்போது கேள்வி ரெடி. மூன்று படங்களிலும் பெயர் மாற்றப்படப் போகும் படம் எது? அநேகமாக கமலின் பட பெயர் மாறாது என்று அவர்.



...தே!
...நடிகை
...தான்
...குப்தா
...ண்டார்.
...வித்தார்.
...என்று
...பட
...வர்
...கில்
...இடையைத்
...ஏதோ
...தல்
...னம்
...ன்ன
...ருக்கு
...ந்து
...ராம்.
...ட்டைக்
...பிடித்து
...ராம் அது
...ளிப்பாளர்
...லை.
...போதாக்கும்"
...போது
...பூவம்
...ன்னார்
...ளைப்
...தாது.
...க்க




# உயரும் வாரிசு

அப்பா தெலுங்கு மாநில முதல்வர் முன்னாள் நடிகர். மகன் இன்றைய தெலுங்குப் படவுலக சூப்பர் ஹீரோ. அந்த சூப்பர் ஹீரோவின் பெயர் பாலகிருஷ்ணா.
'பொப்பிலி சிம்மம்' என்னும் படம் தெலுங்கில் தூள் கிளப்பிவிட்டு தமிழில் 'சின்ன பண்ணை' என்று மொழிமாற்றப்பட்டது.
'டாப் ஹீரோ' என்னும் படமும் பாலகிருஷ்ணா-சௌந்தர்யா ஜோடி நடித்து தெலுங்கில் தூள் கிளப்பிவருகிறது.
விடுவார்களா தயாரிப்பாளர்கள் 'டாப் ஹீரோ' என்ற பெயரை மாற்றாமல் தமிழில் மொழிமாற்றம் செய்கிறார்கள்.
'காந்தி' படத்தில் காந்தியின் மனைவியாக நடித்த ரோஹிணி ஹத்தங்காடி என்னும் நடிகை முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

## காதலிக்கப் போட்டி.

தெலுங்கில் 'பங்காரு புல்லோடு' என்ற பெயரில் வெற்றிகரமாக ஓடிய படம் 'தங்க பாண்டி' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டுள்ளது.
கதாநாயகன் பாலகிருஷ்ணா. அவரை காதலிக்க இரண்டு பெண்களிடையே பலத்த போட்டி. ஒருவர் ரம்யா கிருஷ்ணன். மற்றவர் ரவீனா.
காதல் போட்டி என்ற பெயரில் இருவருமே கவர்ச்சிப் போட்டியே நடத்தியிருக்கிறார்களாம்.

## தொலைக்காட்சியில் பிரபலங்கள்

தமிழ்நாட்டில் தொலைக்காட்சியில் பிரபல நட்சத்திரங்கள் நடிக்கத் தொடங்கி விட்டார்கள்.
கமல் ஒரு தொலைக்காட்சித் தொடரில் நடிக்கிறார். கமல் நடிக்க முன்வந்திருப்பதால் ஏனைய முன்னணி ஹீரோக்களும் நடிக்க முன்வரலாம். சத்யராஜ், விஜயகாந்த் இருவரும் சினிமா உலகை பாதிக்கும் தொலைக்காட்சித் தொடர்களில் நடிப்பதில்லை என்ற முடிவில் இருக்கிறார்கள்.

## உலக அழகிக்கு பிடித்தவர்

உலக அழகி ஐஸ்வர்யாராய் மணிரத்னத்தின் ரசிகையாம். அவரது இயக்கத்தில் நடிக்க அழைப்பு வந்தால் உடனே 'ஓ.கே' சொல்வேன் என்கிறார் அழகுராணி. மணி அழைப்பாரா?

## ஷில்பா என்பதே பேச்சு

'மிஸ்டர் ரோமியோ' படத்தில் பிரபுதேவாவின் ஜோடியாக நடிக்கிறார் இந்தி நடிகை ஷில்பா ஷெட்டி. கவர்ச்சியில் நக்மாவையும் மற்றும் தனக்கு முன்வந்த பம்பாய் இறக்குமதிகளையும் தூக்கிச் சாப்பிடும் வகையில் அசத்தப் போகிறாராம் ஷில்பா. படப்பிடிப்புக்காக கோடம்பாக்கம் வந்த ஷில்பாவை கண்டவர்கள் கிறங்கிப் போனார்களாம். பிரபுதேவா எப்படியோ?

## ...நேரம் இல்லை"

...தமிழின் முன்னணி ...டு நடித்துவிட்டார் மீனா. ...இந்த வருடத்திலாவது ...டும் என்று விரும்புகிறார். ...விருப்பத்தை கமலிடம் ...தெரிவித்தும் இருக்கிறார். ...ாவது காதலிக்கிறீர்களா?" ...விக்கு மீனாவின் பதில் ...எனக்கு நேரம் இல்லை ...விரும்பும் வரை நடிப்பேன் ...ய்-தந்தை பார்த்து வைக்கும் ...ளையை மணப்பேன். ...க் குழந்தைகளைப் ...வன்" மீனா சொல்லியிருப்பது ...தும் அல்லவா.




## என்ன பார்வை?

விக்னேஷ்-தேவகி ஜோடி நடித்துவரும் படம் 'பார்வை'. கொலைக் குற்றவாளியின் காதல் கதையை சுவாரசியமாக சொல்லுகிறார்களாம். இசை-ஆதித்யன். இயக்கம்-பிரகாஷ்.





## சளைக்காத குஷ்பு

முன்பு போல கிளு-கிளுப்பாகப் பேசப்படாவிட்டாலும் குஷ்பு அரங்கில் இருக்கிறார்.
'கோலங்கள்' படத்தில் ஜெயராமுடன் ஜோடியாக நடித்திருக்கிறார். 'முறைமாமன்' படத்தில் ஜெயராமுடன் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். மே மாத வெளியீடாக வரப்போகிறது முறைமாமன்.
25 ஆண்டுகாலம் பிரிந்திருந்த இரு குடும்பங்கள் மீண்டும் இணைகிறார்கள். அது எப்படி? அதுதான் சஸ்பென்ஸ்.

## மணி-அடுத்து?

'பம்பாய்' படத்தை வெளியிட்ட கையோடு மணிரத்னம் இயக்கும் புதிய படத்தில் சிரஞ்சீவி கதாநாயகனாக நடிப்பார் என்று தகவல்.
மோகன்லாலை வைத்து படம் ஒன்றை இயக்க மணி போட்டிருந்த திட்டம் கைவிடப்பட்டுள்ளது.





பாண்டியராஜன்
படம்-நல்ல மனசுக்காரன்

## ஓ.கே.ரெடி

'கருத்தம்மா' படத்தின் கதாநாயகி ராஜஸ்ரீ பாண்டியராஜனுடன் ஜோடியாக நடித்துவரும் படம் 'நீலக்குயிலே'. பேட்டி கொடுக்க விடுத்த தடையை பாரதிராஜா விலக்கிவிட்டதால் வெளுத்து வாங்குகிறார் ராஜஸ்ரீ. கதைக்கு தேவையானால் (சும்மா ஒரு சாட்டு) கவர்ச்சியாகவும் நடிப்பேன். ...காட்சியிலும் ஓ.கே என்று பேட்டி கொடுத்திருக்கிறார் ... தெரிந்த ராஜஸ்ரீ.

## 'ஜமீன் கோட்டை'

'வளவாளி' படத்தை இயக்கி வில்லனாக நடித்தவர் கலப்புலி ஜி. சேகரன். அவரது திரைக் கதை-வசனத்தில் உருவாகும் புதிய படம் ஜமீன் கோட்டை. முக்கிய பாத்திரத்தில் ஜி. சேகரன் நடிக்கிறார். கதாநாயகி மோகினி. இசை, சிற்பி. இயக்கம், ராமச்சந்திரன்.

## இன்னொரு தடவை

பாண்டியராஜனும் இந்தியில் படம் தயாரித்து கையைச் சுட்டுக்கொண்டவர் தான். இனிமேல் இந்திப் பக்கமே போகமாட்டேன் என்று சபதம் செய்துவிட்டார். இப்போது தமிழில் பிஸியாகி பல படங்களில் நடித்து வருகிறார். இந்தியில் நுழைந்து வெற்றி தமிழ்பட இயக்குநர் வரிசையில் பாண்டியராஜன் இடம்பெற முடியவில்லை.
ஆனால், எஸ்.ஏ. சந்திரசேகரன் பற்றி கவலைப்படவில்லை. இந்தியில் எட்டு படங்களை இயக்கியுள்ளதுடன், தனது புத்திரன் நடித்த ரசிகன் படத்தையும் இந்தியில் இயக்கி வருகிறார்.

## சத்யராஜ் படம்.

கட்டுமரக்காரன் படத்தை தயாரித்த நிறுவனம் அடுத்து தயாரிக்கவுள்ள படத்தின் நாயகன் சத்யராஜ். படத்தை இயக்கப்போவது தாய்மாமன் படத்தை இயக்கிய குரு தனபால்.

# லேடீஸ் ஸ்பெசல்

## றோஜாப்பூ

**எஸ்.எஸ்**

**தேவையான பொருட்கள்:-**
**வாணிஷ் பேப்பர் இருநிறம்.**
**எடுக்கப்பட வேண்டிய அளவுகள்:**
**12 செ.மீ x 75 செ.மீற்றர்**
**(இவ்வாறு இரு பேப்பர்களை எடுக்கவும்)**

**செய்முறை:**

மேற் கூறப்பட்ட அளவிலான ஒரு நிறவாணிஷ் பேப்பரை சுருட்டிக் கொள்ளவும். முதலாவது நிறப் பேப்பர் சுருட்டி முடிவடையும் பகுதியில் அடுத்துள்ள பேப்பரை வைத்துச் சுருட்டவும்.

சுருட்டிய பேப்பர் குழாய் வடிவத்தில் தோன்றியதும் அக்குழாயை 5 செ.மீ அளந்து நிலைக்குத்தாக படம் 1ல் காட்டியபடி வெட்டவும். நிலைக்குத்தாக வெட்டிய பகுதியை இடையில் படம் 2 இனை கவனத்திற் கொண்டு இதழ் வடிவமாக வெட்டவும்.


வெட்டிய இதழ்களில் ஒரே நிறமுடைய இதழினை வட்ட வடிவத்தில் மீண்டும் வேட்டவும். (உ+ம் படம் 3)

வட்ட வடிவமான இதழ்களை ஸ்குரு ஆணியின் உதவியினால் கீழ் நோக்கி சுருட்டி அமத்தி விடவும். (படம் 4)

வெட்டப்பட்டு மடித்த சகல இதழ்களின் குழாய் அமைப்பின் உச்சியில் மெதுவாக ஒரு விரலினை விட்டு இழுக்கவும். இழுக்கும் முறை படம் 5ற்கானது.

இதழ்களை எல்லாப் பக்கமும் பரவியிருக்கும்படி பேப்பர் சுருள் குழாயின் இருபக்கத்தின் முனைகளிலும் கைகளைப் பிடித்து முறுக்கவும். முறுக்கியதும் படம் 6ன் அமைப்புத் தோன்றும்.

அவ்வாறு தோன்றிய அமைப்பினை படம் 7இன் உதவியுடன் சுருள் குழாயின் உச்சியை உள்நோக்கி அமத்தவும். அமத்திய பின்னர் அழகிய றோஜாப்பூ மலர்ந்து விடும்.




## முட்டை முக்கியம்

கர்ப்பிணித் தாய்மார்கள் தமக்கு மாத்திரன்றி தமது வயிற்றுக்குள் வளர்ந்து வரும் குழந்தைக்கும் போசாக்கு வழங்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இக் காலப் பகுதியில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவைப்படும் புரதம், விட்டமின் ஏ. பி. டி. போன்ற ஜீவபதார்த்தங்கள் ஒருங்கே கொண்டிருக்கக் காணப்படும் முட்டை கர்ப்பிணிகளின் ஆகாரத் தொகுதியில் முக்கிய பங்கை வகுத்து வருவதாக போசாக்குப் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## ரவா சிப்ஸ்

**சமைப்போம் சுவைப்போம்**
**தொகுத்துத் தருவது–சுகந்தினி**

**தேவையான பொருட்கள்:**
**ரவை - 100கிராம்**
**உப்பு - 1/2 தேக்கரண்டி**
**மிளகுதூள் - 1/4 தேக்கரண்டி**
**மிளகாய்தூள் - 1/4 தேக்கரண்டி**
**எண்ணெய் - தேவையான அளவு**

**செய்முறை:**

ரவை, உப்பு, மிளகுத்தூள், மிளகாய்த்தூள், ஆகியவற்றைத் தண்ணீர் அல்லது தயிர் விட்டுக் கெட்டியாகப் பிசைந்து கொள்ளவும். அரைமணி நேரம் கழித்து, மீண்டும் சிறிது தண்ணீர் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். பின்பு ரொட்டி போல செய்து, சிறிய துண்டுகளாக வெட்டி, கொதித்த எண்ணெயில் பொட்டுப் பொரித்துக் கொள்ளவும். இது ஐந்து பேருக்குப் போதுமானதாகும்.

## நிறத்தில் இல்லை அழகு!



இங்கு நம் சூழலுக்கேற்ப மாநிறமாகவும், இலேசான கறுப்பு தோலும் அதிகம் உள்ள மனிதர்கள் காணப்படுகின்றனர். நம் தோலில் உள்ள மெலானின் (melanin) என்னும் பொருளே தோலின் நிறத்தை அடையாளம் காணச் செய்கிறது. அதேபோல் ஸ்கின் கான்சர் எனும் தோல் புற்றுநோய் வராமல் தடுக்கும் ஆற்றல் கறுப்பு நிறத் தோலுக்கு உண்டு.

நாம் அறியாமையினால் வெள்ளைத் தோலுக்கு ஆசைப்படுகிறோம். பொண்ணு நல்ல சிவப்பா அழகா இருக்காடா என்று வசனங்களை அநேக வீட்டில் கேட்கலாம். தோலை வைத்து அழகை எடைபோடுவது தவறு. தோலிற்கும் அழகிற்கும் தொடர்பில்லை. பெண்களின், ஆண்களின் உடலமைப்பு, வடிவத்தைப் பொறுத்துத்தான் அழகு. உடலமைப்பு நன்கு இருக்கிறதா? என்று பார்ப்பதுதான் சரி.

இன்று உலகின் முன்னணி மொடல்களாக இருப்பவர்கள் யார்? கறுப்பு நிற அழகிகள் தான். அவர்களின் அழகுதான் பளிச்சென்று தெரியும். மொடலிங்கில் கூட அழகை விட உடலமைப்புக்குத்தான்(body features) முக்கியத்துவம் கொடுப்பார்கள். இதிலிருந்தே தோலின் பொலிஷ் புரிந்திருக்குமே.

## பெண்கள் கவனிக்க முக்கிய குறிப்புக்கள்



பெண்களுக்கு பொதுவாக மார்பகப் புற்று நோய் தோன்றுவதுண்டு. தங்களைத் தாங்களே பரிசீலனை செய்வதன் மூலம் இந்நோயிலிருந்து தற்காத்துக்கொள்ள முடியும். இதனை முற்றவிட்டால் உயிருக்கே ஆபத்தாக முடியும்.

அடிக்கடி கண்ணாடியின் முன்நின்று தங்கள் மார்பகங்களை தாங்களே பரிசோதித்துக் கொள்ளலாம். மார்பகத்திலும் முலைக்காம்பிலும் ஏதாவது குறிப்பிடத்தக்க மாற்றங்களை அவதானித்தால் உடனடியாக மருத்துவருடைய ஆலோசனையை நாடுங்கள். உங்கள் உள்ளங்கையை முலைக்காம்பின் மீது அமுக்கும்போது உட்புறத்தில் ஏதாவது கடினமாக சதை வளர்ச்சியின் அறிகுறி தென்பட்டாலும், அது புற்று நோயின் ஆரம்பமாகவும் இருக்கலாம்.

நீங்களாகவே பரிசீலனை செய்து, திட்டவட்டமான முடிவுக்கு வரமுடியாவிட்டால், எவ்வாறு இத்தகைய பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை உங்கள் மருத்துவரிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

உங்கள் மேனியில் ஆங்காங்கே தென்படும் மச்சம், மறு ஆகியவற்றையும் அவ்வப்போது கவனமாக அவதானிக்க வேண்டும். அவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றம் தென்பட்டாலோ அல்லது இடம் மாறினாலோ சருமப்புற்று நோய் தோன்றுவதற்கான அறிகுறியாக அது இருக்கலாம்.

### கர்ப்பகாலத்தில் தேகப்பயிற்சி:

பெண்கள் தங்கள் தேகக் கட்டை சீராக வைத்திருக்க தேகப்பயிற்சி உதவுகிறது. தொடர்ச்சியாக தேகப்பயிற்சி செய்து வரும் பெண்கள் கருவுற்றதும் திடீரென பயிற்சியினை நிறுத்தி விடுகிறார்கள். இது தவறாகும். கருவுற்று 5 மாதம் வரை பயிற்சியைத் தொடரலாம். ஆனால் மருத்துவ ஆலோசனை பெற்றபின்னர் தொடர்வதே நல்லது. நமது பெண்கள் அன்றாடம் தங்கள் வீட்டு வேலைகளில் ஈடுபடும் போதே-அதுவே ஒரு வகைத் தேகப்பயிற்சியுமாக முடிகிறது. இருப்பினும் கருவுற்ற பெண்களுக்கென சிபார்சு செய்யப்பட்டுள்ள தேகப்பயிற்சிகளைத் தொடர்வது நல்ல பலனை அளிக்கும். குழந்தை பெற்ற பின்னர் உடலமைப்பு அளவாக அமைவதற்கு இப்பயிற்சிகள் உதவுகின்றன.

கர்ப்பம் தரித்திருந்தாலும் அல்லாவிட்டாலும் கூட தொடர்ந்து தேகப்பயிற்சியிலீடுபடுவது நல்ல பலன்தரும். வாரத்தில் 3 நாட்கள் மட்டும்- தினசரி அரை மணிநேரம் பயிற்சியிலீடுபட்டாலே போதுமானது. வேறு பயிற்சிகளில் ஈடுபடமுடியாவிட்டாலும் கால் நடை அல்லது நீச்சல் போன்றவையும் பலன் தரும்.

### பெண்களும் ஒத்துக்கொள்ளாமையும்

சில நடைமுறைகள் சிலருக்கு ஒத்துக் கொள்ளுவதில்லை. சிலருக்கு பனி அல்லது குளிரில் வெளியில் திரிந்தால் உடனே ஆஸ்த்மா வந்துவிடும். இத்தகைய ஒத்துக் கொள்ளாமை ஆண்களைவிட பெண்களையே அதிகம் பாதிக்கிறது. உணவு மற்றும் மருந்துகள் கூட பெண்கள் பலருக்குப் பொருந்துவதேயில்லை. ஆனால் சளி சுரம் அல்லது பூச்சிக்கடி பெண்களைவிட ஆண்களுக்கே பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. பெண்கள் கருவுற்றவுடனேயே பல பாதிப்புக் குள்ளாக்கப்படுகின்றனர். தோல் அழற்சி, வாந்தி, காய்ச்சல், வயிற்றோட்டம் மற்றும் குறைந்த குருதி அழுத்தம் ஆகிய பாதிப்புகளுக்குட்படுகின்றனர்.

பெண்கள் புகைப்பழக்க முள்ளவர்களானால் கருவுற்றதும் அப்பழக்கத்தை அடியோடு விட்டொழித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் கருவில் வளரும் குழந்தையின் எதிர்ப்புச்சக்தி பெரும்பாலும் அற்றுப் போய்விடும். புகையிலிருந்து கிடைக்கும் சில திரவங்கள் குழந்தையின் நோய் எதிர்ப்பு ஆற்றலை முற்றாக அழித்துவிட நேரிடும். இக்குழந்தை பிறந்தாலும் பலதரப்பட்ட பொருட்களையும் ஒத்துக் கொள்ள முடியாத நிலையிலேயே வளர்ந்து நோய்களை உடனடியாக பற்றிப் பிடித்துக் கொள்ளும் நிலையினை அடைந்து விடக் கூடும் என்று சுவீடன் நாட்டு ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

### உறுதியற்ற எலும்பு

பெண்களுக்கு விரைவில் எலும்பின் உறுதி குறைந்து விடுகிறது. போதுமான அளவு கல்சியம் (சுண்ணச்சத்து) குறைந்து போவதே இதற்கான காரணமாகும். இளவயதிலிருக்கும்போது ஏற்றுக்கொள்ளும் கல்சியத்தின் அளவினை வயதாக ஆக பெண்களின் உடல் ஏற்றுக் கொள்வதில்லை. ஆகவே 35 வயதுடைய பெண்ணின் எலும்பிலுள்ள உறுதி 45 வயதை அடைந்ததும் வெகுவாகக் குறைந்து விடுகிறது. இதனால் இவர்கள் சுறுசுறுப்பாக இயங்க முடியாதவர்களாகி விடுகின்றனர்.

மாதவிடாய் நின்றதும் எலும்பின் உறுதி மேலும் தளர்ந்து விடுகிறது. எந்தச் சிறிய அளவு பாரத்தினையும் தாங்க முடியாது ஒடிந்துவிடும் நிலையில் எலும்புகள் காணப்படும். முதுகெலும்பு வளைந்து கூனவைத்துவிடும். இடுப்பு எலும்புகள் பலம் குன்றி சாதாரணமாகச் சிறிய தாக்கம் ஏற்பட்டாலே முறிந்து விடக்கூடும்.

குழந்தைகளுக்கு தாய்ப்பாலூட்டுதல் சிறந்தது என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும் இதனையும் குறிப்பிட்ட காலத்தில் நிறுத்திவிட வேண்டும். இல்லையேல் தாயின் கல்சியம் முற்று முழுதாக உறிஞ்சப்பட்டு விடும். தாய்ப்பால் ஊட்டப்படும் காலங்களில் தாய்மார் கல்சியச்சத்துப் பொதிந்த பதார்த்தங்களை உட்கொள்வது அவசியம்.

சாதாரணமாக ஒரு பெண் நாளொன்றுக்கு 800 மில்லிகிராம் கல்சியம் சத்தினை உட்கொள்ள வேண்டும். பெரும்பாலும் உணவுப் பொருட்களுடன் கல்சியம் சேர்ந்திருக்கும் பட்சத்தில் அதனை உட்கொள்ளுவது சுலபமாகயிருக்கும்.

தினசரி 3 கிளாஸ் பால் பருகுவது போதுமான கல்சியம் சத்தினைப் பெறப் போதுமானதாகும். தயிர், வெண்ணெய் ஆகியவற்றிலும் கல்சியம் கிடைக்கிறது. சில மீன் வகைகள், சூரியகாந்தி விதை மற்றும் கடலை- பருப்பு வகைகளிலும் உண்டு.

புரதச்சத்தினை அதிகமாக உட்கொள்ள நேர்ந்தால் கல்சியம் அழிந்துவிடக்கூடிய நிலை ஏற்படவும் கூடும்.

## ஹோட்டல்களில் சாப்பிடுவதுண்டா? ஒரு நிமிடம் இதைப் படியுங்கள்!



- கத்தி, முள்ளுக் கரண்டிகளுடன் சாப்பிடும்போது கத்தியை வலது கையாலும், முள்ளுக்கரண்டியை இடது கையாலும் பிடித்துக்கொள்ளுங்கள்.
- ஐஸ்கிறீமை கரண்டியால் எடுக்கும்போது உங்கள் பக்கமாக வெட்டவேண்டும். சூப்பாக இருந்தால் எடுக்கும்போது கை, உங்கள் புறத்திலிருந்து எதிர்ப் புறமாக இருக்கவேண்டும்.
- சூடான பொருட்களை வாயால் ஊதிச் சாப்பிடக்கூடாது.
- கப்பில் கோப்பி அல்லது தேனீர் குடிக்கும்போது அதன் காதைக் கட்டை விரலாலும், மற்ற விரல்களாலும் இறுக்கிப் பிடித்துக்கொள்ளவேண்டும். ஆட்காட்டி விரலை அதன் காதில் நுழைத்துக்கொள்வது அநாகரீகம்.
- சாப்பிடும்போது உங்கள் உதடுகள் மூடியே இருக்கவேண்டும். முழங்கையை மேசைமீது ஊன்றிக் கொள்ளக் கூடாது.
- கரண்டியை காலியான கப்பிற்குள் வைக்கக்கூடாது. சோஸர் மீதுதான் வைக்க வேண்டும்.
- சாப்பிட்டு முடிந்த பிறகு கத்தியையும், முள்ளுக்கரண்டியையும் சேர்ந்தால் போல் தட்டின் நடுவில் உங்கள் பக்கம் இருக்கும்படி வைக்கவேண்டும். கரண்டியில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஐஸ்கிறீமை நக்கக்கூடாது.
- மீன் முள் அல்லது சிறிய எலும்பு வாயில் மாட்டிக்கொண்டால் வாயில் விரலை விட்டு எடுக்கலாம்.

**பரிசுக் கூப்பன் மகளிர் மட்டும் இல 4**

## மகளிர் மட்டும் –பரிசுப் போட்டி–

**முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை**

- **முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.**
- **25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.**
- **25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.**
- **முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.**
- **25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.**

**பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.**


## பதினாறும் பெறலாமா?

மணவிழாக்களில் "பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க" என்று வாழ்த்துவது வழக்கம்.

வாழ்த்தி விட்டார்களே என்பதற்காக பெரு முயற்சி செய்து 16 குழந்தைகள் பெற்றவர்களும் உண்டு. வாழ்த்தியவர்கள் அதையா சொன்னார்கள். அவர்கள் சொன்ன பதினாறு வேறு. அறிய விரும்பினால் இதோ அந்த பதினாறு;

**01. கல்வி, 02. நீண்ட ஆயுள், 03. நல்ல நண்பர்கள், 04. உடல் வலிமை, 05. நோயற்ற வாழ்வு, 06. மனோதிடம், 07. மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை, 08. சிறந்த குழந்தைகள், 09. புகழ், 10. நேர்மை, 11. வாய்மை, 12. உழைத்துப் பெறும் செல்வம், 13. நாட்டில் நல்ல ஆட்சி, 14. வழிகாட்டி உதவும் பெருமக்கள், 15. எல்லா உயிர்களிடத்திலும் அன்புடமை, 16. வளமான வாழ்க்கைக்கு தேவையான பொருட்கள்.**

இவைதான் அந்த பதினாறு.



# கத்தரித்த கடி ஜோக்ஸ்



கோபு: கைதிகள் பூரண கும்பத்துடன் நிற்கிறார்களே...ஏன்?

பாபு: புதுக் கைதியாக ஒரு சாமியார் வருகிறாராம்.

□□

காதலன்: அன்பே! உனக்காக அந்த வானத்தை வில்லாக வளைக்கவும் தயார்!

காதலி: அதெல்லாம் வேண்டாங்க, போன மாதம் என்னிடம் கடனாக வாங்கிய நூறு ரூபாவைக் கொடுங்க- அது போதும்.

□□

தாய்: டேய் கண்ணா! இந்த மாத்திரையை சொக்கிலேட்டுன்னு நினைச்சு சாப்பிடுப்பா. காய்ச்சல் குணமாயிடும்.

மகன்: அம்மா நீங்க சொக்கிலேட் ஒண்ணு குடுங்க, அதை நான் மாத்திரையா நினைச்சுச் சாப்பிடுறேன்.

□□

குண்டானவர்: உடம்பு ரொம்ப பெருத்துப்போச்சு டாக்டர்.

டாக்டர்: இந்த மருந்தைச் சாப்பிட்டுட்டு தினமும் 2 கிலோமீற்றர் ஓடுங்க உடம்பு இளைச்சிடும்.

குண்டானவர்: நடக்கிற காரியமா சொல்லுங்க டாக்டர்.






# தேன் கிண்ணம்

## "கருக்கட்டப்படாத கவிதை"

மேசையில் திறந்து கிடந்த பேனா.....
அழுகிறது.....
ரத்தமை சொட்ட.....

•

மேசையருகில் கிடந்த
கதிரையிலமர்ந்து......
கை நகங்களோடு சதையையும்
சேர்த்து கடித்து கடித்து...
சிந்திக்கிறேன்.....

•

இரவாகி சாமக்கோழியும்
கூவிவிட்டது...ஆனால்...
எனக்குள் இன்னும்...
தெளிவு வரவில்லை..

•

சாத்தப்படாத ஜன்னல் கதவுகள்
காற்றில் உதைபட்டு உதைபட்டு...
என் விழிகளை உருட்டி நிமிர்த்துகிறது...

•

நிலவின் வெளிச்சம்
ஜன்னல் விழியாக கால்களில் விழுந்து
மெல்ல மெல்ல மறைந்தது....

•

அப்போது தான் என்
சிந்தனை தெளிவு
படிப்படியாக நகர்ந்தது.
இருதயத்திலிருந்து மூளைக்கும்;
மூளையிலிருந்து தொண்டைக் குழிக்குமாக....

•

நாய்களின் இரைச்சல்
அதிகரித்துக் கொண்டுவர நான்.....
மெதுவாக எழுந்து போனாவையும்;
டையரியையும்.....
எடுத்துக் கொண்டேன்.....

•

ஆனால் ஒரு வரி கூட எழுதப்படவில்லை
வெடிச் சத்தம் காதுகளை துளைக்க
சிந்திக்கிறேன்...
இருதயம் துடிக்க....துடிக்க....

•

இப்படி யொரு இரவில் தான்
என் ஆத்ம நண்பனையும்....
துப்பாக்கி துளைத்தது....
கண்களுக்குள்ளாலும்,
மூளைக்குள் இறங்கியும்.....

•

நாளை யார் உயிரோடு இருப்பாரோ...
இல்லையோ....
ஆனல் விடியும்......

••

பொத்துவில் ஏ. மஜீத்

## சமாதானக் காற்று

காரிருள் மேகத்தில்
கண்ணடிக்குது
மின்னல் கீற்றுக்கள்
சத்தங்கள் கேட்காதது
சற்று நிம்மதி தான் மனதிற்கு


காரிருள் விலகுமா?
கதிரவன் தெரியுமா–இப்
பாரினில் பிறந்தது
தமிழரின் குற்றமா?
காலம் முழுவதும்
கலங்கியே சாவதற்கு

மீண்டும் ஒரு புயல்
தொடங்கினால்
துவண்டு போவது
இரண்டு இனமும் தான்.

க. ஜெயகாந்தராஜா
திருகோணமலை.







## வாழும் கவிதை

கவிஞனவன் கவிதையதோ
கற்பனையின்தேர்–அது
காற்றினிலே கலந்துவரின்
கமகமக்கும் வேர்
சொற்சுவையைச் செப்புவதில்
சரதியுறை நார்
சோதனைகள் மிக்கவரே!
கவிஞரவர் பார்......!

விடிவிற்காய் நிதமிங்கு
பூபாளம் பாடும்.
வீணர்களின் பகைமையினை
விரும்பாது சாடும்,
ஈனர்களை இனம் கண்டு
எமது கவி மோதும்
இல்லையெனில் எமதுகவி
என்றைக்கோ மாழும்.......!

சமரசங்கள் கண்டுவிட
சாந்திக்காய் வேண்டும்,
சகலருமே வாழ்வுபெற
சமத்துவத்தைத் தூண்டும்,
விரசங்கள் தழுவாது
விளக்கங்கள் கூறும்,
விலாசங்கள் வேண்டாது
விண்ணுக்கும் ஏறும்,

அந்தகரை, நொந்தவரை
ஆதரித்துப்பாடும்,
அபலைகளை, விதவைகளை
அனுசரித்து வாழும்

உழைப்பவரை உத்தமரை
உயர்வாகப் பாடும்
உண்மையாம் எமதுகவி
எந்நாளும் வாழும்....!

வி. நடனசேகரம்.
கிளிவெட்டி.

## பஸ் பயணங்களில்

மௌனமே,
தினம் தினம்
உன் விழிகள் பேசும்
நீண்ட வசனங்களால்
நான் காதல் ஆகிப்போனேன்!'

கவிதை வடித்து
கண்ணீர் விடும்
கவிஞன் ஆவதும்,
முகம் மறைக்க
உரோமம் வளர்த்து
முனிவன் ஆவதும்

உன்னால் வேண்டாம்!

ஒரு வார்த்தை
பேசிவிடு.
உல்லாச, பயணம் போக
தனியார் பேருந்தின்
ஜன்னலோர இருக்கைகள்
நமக்காகவும்...
காத்துக்கிடக்கின்றன.

ஹெந்தளை நவா.

## சர்வ நிச்சயம்!

கண்களை மூடித்
தியானம் செய்
என் பெயரைத் தினமும்
நூறு முறையாவது
மனதிற்குள் உச்சரி

தனிமையில் இருந்து
என் கவிதைகலை வாசி.
உன் இதழ்களை
என் எழுத்துக்களில்
பொருத்து..!

கற்பனையில்
என்னை
அணைக்கவிடு.
அனைவரும் உறங்கியபின்
நீ விழித்துக்கொள்
தலையணையில்
என்னைப் பார்.

பகற்பொழுதை நினை
நீ குளிக்கும்போது
உன் தேகம் முழுவதையும்
தழுவிச்செல்வது
தண்ணீரல்ல,
நான்தான்!

உன் தேகத்தை
நான் ரசித்த அளவிற்கு
வேறு யாராலும்
ரசிக்க முடியாது
நான நிச்சயமானவன்.

உன் மீது
காற்றுப் படும்வரை
நானும்
பட்டுக்கொண்டிருப்பேன்.

ஆகவே,
நம்பிக்கைகொள்
நம்பிக்கைதான் வாழ்க்கை
நம்பு.
நீ நினைப்பது
சர்வ நிச்சயமாய் நடக்கும்..!!

எம். சுரேஷ்.

## (அ)தர்மம்!

சொந்தமாய்
வீடுள்ள வனை
விரட்டி விட்டு,
வீதியில் படுத்திருப்பவனிடம்
'கலண்டர்' கொடுக்கின்றார்கள்!

## சம உரிமை!

மண்ணுக்காக போராடி
உயிர் நீத்த

எதிரிகளை
ஒன்றாக அரவணைத்து
விழுங்கியது மண்!

## 'அரசியல் வாதி'

தமிழுக்கு
சம உரிமை கேட்டு
ஆங்கலத்தில்
சத்த மிடுகின்றனர்

கோவுஸ்ஸ ராம்ஜீ-எல்ல.

## உடைந்த கண்ணாடி

இதயமென்னும்
கண்ணாடியில்
நீ எறிந்த
கல்!

சிதறிப்போன
ஒரு
துண்டுகூட
என் நேசம்
பொய்யென்று
சொல்லாது!

கேட்டுப்பார்
என்
நாயகா!

ரஜனி ராஜ்மோகன்
கொழும்பு.



## இன்னும் தான் பயம் எனக்கு....

தொண்ணூறின் பின்
இன்னும் தான்
பயமெனக்கு
பொழுது மறைவதுகண்டு!

தேய்நதுபோன நிலவொளியில்
வெட்டியுங் கொத்தியும்
சுட்டுந்தள்ளிய
அந்த இரவு
இனியும் வருமோ?

விடியச்சாமப் பார்வையில்
கொள்ளிக் கட்டைகளை.....
பரவி விட்டதுபோல்
சடலங்கள்.
வெப்பிசாரம் தாங்காமல்
ஊரின் ஒப்பாரி ஓலம்
மதிய வெயிலின் காயலில்
வயிற்றைக்குமட்டும்
இரத்த வேட்கை!

சகோதரத்துவத்துக்கு
சமாதிகட்ட நினைத்த
சண்டாளர்களின்
சதி விலகாதவரை
இன்னும் தான்
பயமெனக்கு
பொழுது மறைவதுகண்டு!

ஏ.அஹ்மது ஜுனைது.
ஏறாவூர்–06

## படுக்கை எங்கும் பவித்திர ஈரம்

அனேகமா...
அவர்கள் கண்கள்
அயர்ந்திருக்கும்!
ஊர் சனம்
உறங்கி
ஏகாந்தம்
வீதியெங்கும்
சப்தமிட்டுத்திரியும்
என் நயனங்கள்
மாத்திரம்–
சாத்திரம் பார்க்கும்
அனேகமாக....
அவர்கள் கண்கள்
அயர்ந்திருக்கும்!

□

தொலைந்துபோன
சுதந்திரம் தேடி
தூரச் சென்றிருந்தது என்
தூக்கம்
நான்
அனுமதி கொடுத்தது
தவறு!
இப்போதுதான் புரிகிறது!

□

அழுது அழுத
என்
விழிப்பிரதேசத்தில்
ஒரு சகாரா!

□

என்
படுக்கையில்
ஒரு சாகரம்!

□

அகிலம் முழுதும்
அங்கலாய்ந்தது
அங்கிருந்தவர்கள்
உறக்கத்தில் உளறினார்கள்....
"நாம் இங்கு
சுதந்திர தேசத்து
அடிமைகள்
இன்னொரு
நிஜ சுதந்திர நாள்
வேண்டும்
இலங்கைக்கு–அதில்
இனங்கள்
பிணங்கள் உண்ண
இணக்கப்படாமல்
இருந்தால்....
நிஜ சுதந்திரம்
நிச்சயம்!"

□

அனேகமாக....
அவர்கள் கண்கள்
அயர்ந்திருக்கும்!
ஆனால்–என்
படுக்கையெங்கும்
பவித்தர ஈரம்
இருக்கிறது இன்னும்.

இஸ்லாஹிய்யா–கே. முனாஸ்

# இந்த வாரம் உங்கள் பலன்

(12.03.95 முதல் 18.03.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- துன்பம் நீங்கும், கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, பெரியோர் உதவி. | காலை 8 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், புதிய முயற்சி. | காலை 9 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| சனி- உயர்ந்தநிலை, தொழில் மந்தம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

## மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு-பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, செய்தொழில் விருத்தி. | காலை 6 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், பணவரவு. | பகல் 11 மணி |
| சனி- காரியத்தடை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

## இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனக்கவலை. | காலை 6 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வீண் குறைகேட்டல், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| சனி- செலவு மிகுதி, பணத்தட்டுப்பாடு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

## மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பயனற்ற செயல், கௌரவக்குறைவு. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- பயனற்ற செயல், மனக்கவலை. | காலை 9 மணி |
| வியாழன்- வீண் குறைகேட்டல், அந்நியர் பகை. | பகல் 12 மணி |
| வெள்ளி- தேகசுகம் பாதிப்பு, மனக்கவலை. | காலை 7 மணி |
| சனி- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

## கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- துன்பம் நீங்கும், முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| செவ்வாய்- வெளியிடவாழ்க்கை, கௌரவநிலை. | பி.ப. 1 மணி |
| புதன்- செய்தொழில் விருத்தி, பயனற்ற செயல். | காலை 6 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- தனலாபம், செய்தொழில் நஷ்டம். | காலை 7 மணி |
| சனி- புதிய முயற்சி, பணத்தட்டுப்பாடு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-8

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், புதன், சனி |
| மேடம் | - கேது |
| கர்க்கடகம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| மகரம் | - வெள்ளி |

சந்திரன்-கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்
15.03.95இல் மீனச் சூரியன்

## கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, உயர்ந்தநிலை. | காலை 9 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், வீண் மனஸ்தாபம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, பணவரவு. | காலை 9 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வியாழன்- உறவினர் பகை, மறைமுக எதிர்ப்பு. | காலை 8 மணி |
| வெள்ளி- அகால போசனம், பிரயாணச் செலவு. | காலை 7 மணி |
| சனி- பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

## மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- கடன்தொல்லை, மனப்பயம். | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், பயனுள்ள செயல். | பகல் 12 மணி |
| புதன்- துன்பம் நீங்கும், கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், மனத்தைரியம். | பகல் 12 மணி |
| சனி- காரியானுகூலம், பணவரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -7

## சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்தநிலை, கோபமிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனச் சஞ்சலம். | காலை 6 மணி |
| புதன்- பயனுள்ள செயல், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 6 மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, பணத்தடை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

## தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 9 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- துன்பம் நீங்கும், உறவினர் பகை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -4

## விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| புதன்- புதிய முயற்சி, முன்னேற்றம். | காலை 6 மணி |
| வியாழன்- பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், தொழில் சிறப்பு. | காலை 9 மணி |
| சனி- வெளியிடப் பயணம், பொருள் வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

## துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்தநிலை, முன்னேற்றம். | காலை 6 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, அந்நியர் சகவாசம். | காலை 9 மணி |
| வெள்ளி- தொழில் நிலை உயர்ச்சி, பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- பொருள் வரவு, செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 2


## கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | காலை 9 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- உறவினர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7





## இனிய பூஞ்சோலை பார்

வண்ண மலர்கள் பூத்துக்குலுங்கும்
வனப்பு மிக்க சோலை பார்!
எண்ணம் போலே வண்டுகள் கூடி
இனிக்கும் தேனை உண்ணுதல் பார்!

வண்ணத்துப் பூச்சி வடிவாய் மலர்களில்
அமர்ந்து செட்டையடிக்குது பார்!
முன்னும் பின்னும் பறந்து பறந்து
சோலை எழிலைக் கூட்டுது பார்!

வட்டம் போட்டு சிட்டுகள்கூட
வந்து அங்கே தங்குது பார்!
மட்டமின்றி நீண்ட சொண்டால்
மகிழ்வாய் தேனை உறிஞ்சுது பார்!

கூட்டாய் மலர்ந்த மலர்கள் [illegible]
கூடி தலையை அசைக்குது பார்!
காட்டம் கூட்டி கனிவும் சேர்த்து
கந்தம் எங்கும் பரவுது பார்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

"தரித்திரம் போகுது; செல்வம் பெருகுது;
படிப்பு வளருது; பாவம் தொலையுது;
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான், போவான், ஐயோ வென்று போவான்."
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை



## சாதுரியப் பேச்சு

பாறைகளையும், மலைகளையும் எல்லையாகக் கொண்ட ஒரு ஊரின் அருகே ஒரு மைதானம் இருந்தது. அந்த மைதானத்தில் ஒரு வேடிக்கை நடந்துகொண்டிருந்தது.

ஒரு செப்படி வித்தைக்காரன் சாதாரண மனிதன் ஒருவன் தூக்க முடியாத ஒரு பாறையைத் தூக்கிச் சுற்றிலும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மக்களுக்குத் தன்னுடைய பலத்தைக் காட்டிக்கொண்டிருந்தான்.

கூடி நின்ற மக்கள் அவனது திறமையைப் பாராட்டி அவனுக்குப் பணமும், பொருளும் ஏராளமாகக் கொடுத்தார்கள். உலகத்தில் அவனைப் போன்றதொரு பலசாலி இருக்க முடியாது என்றும் பேசிக்கொண்டார்கள்.

அந்தக் கூட்டத்தில் நோஞ்சான் என்பவன் இருந்தான். அவன் பெயர் மகாதேவன். ஆனால் அவன் நெடுநெடுவென்று வளர்ந்து மிகவும் ஒல்லியாக இருந்ததால் அவனை நோஞ்சான் என்றே மக்கள் அழைத்தனர். இறுதியில் அந்தப் பெயரே நிலைத்து விட்டது.

அவனுக்கு நிலையான வேலையோ வருமானமோ கிடையாது. ஆனால் எப்படியோ சில கில்லாடித்தனங்கள் செய்து பிழைப்பு நடத்தி வந்தான். அந்தச் செப்படி வித்தைக்காரனுக்குப் பணமும், பொருளும் கொடுக்கும் மக்களை நோக்கி அவன்,

"அற்பத்தனமான ஒரு செயலைச் செய்ததற்காக இந்த மனிதனைத் தலையில் தூக்கி வைத்து ஆடுகிறீர்கள். இதைவிட பிரமாதமான வேலைகளையெல்லாம் நான் செய்வேன்," என்று சொன்னான்.

அதைக்கேட்டு கூடியிருந்த மக்கள் சிரித்தார்கள்.

"நோஞ்சான்! உன்னால் ஒரு சிறு கல்லைக் கூடத் துக்க முடியாது. அப்படியிருக்க நான் ஒரு பெரிய பாறையைத் தூக்கிவிடுவேன் என்று நீ சொன்னால் நாங்கள் நம்பி விடுவோமா?" என்றான் கூட்டத்திலிருந்த ஒருவன்.

அதைக்கேட்ட நோஞ்சான்,

"இதோ பாருங்கள்! இவர் தூக்கிய இந்தப் பாறையைத் தூக்கப் பெரிய உடம்பும் தேவையில்லை. பலமும் தேவையில்லை. மனோவலிமை மட்டும் இருந்தால் போதும். இமயமலையைக் கூடச் சுமக்கலாம். அதோ பாருங்கள் அந்தக் குன்று இருக்கிறதே, அதை என்னால் சுமக்க முடியும். எவ்வளவு பந்தயம் கட்டுகிறீர்கள்?" என்று சவால் விட்டான்.

மக்கள் அனைவரும் அந்தக் குன்றைப் பார்த்துவிட்டு, அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

நோஞ்சானான உன்னால் அவ்வளவு பெரிய குன்றைச் சுமக்க முடியுமா?

எங்களால் நம்ப முடியவில்லையே!" என்றான் ஒரு மனிதன்.

"நம்புங்கள், என்னால் சுமக்க முடியும். எவ்வளவு பந்தயம் கட்டுகிறீர்கள்?" என்று கேட்டான் நோஞ்சான்.

அவனால் அது முடியாது என்று மக்களுக்கு நன்கு தெரியும்: ஆகவே, துணிந்து பந்தயம் கட்ட முன்வந்தார்கள்.

"இதோ பார் நோஞ்சான் அந்தக் குன்றை நீ தூக்கிச் சுமந்துவிட்டால் உனக்கு ஆயிரம் ரூபாய் தருகிறோம்!" என்றார் ஒருவர்.

"சரி" என்று ஒப்புக் கொண்டான் நோஞ்சான்.

"எங்கே தூக்கு பார்ப் போம்", என்றனர் மக்கள்.

"பொறுங்கள் இப்போது இருக்கும் எனது உடல் பலத்தைக்கொண்டே அந்தக் குன்றைச் சுமந்துவிட முடியும். ஆனாலும், என் உடம்பை இன்னும் பலப்படுத்திக்கொண்டால் குன்றைச் சுமப்பது எனக்கு எளிதாக இருக்கும். இதற்கு உங்களுடைய உதவி வேண்டும்." என்றான் நோஞ்சான்.

"என்ன உதவி?" என்று கேட்டனர் மக்கள்.

இந்த ஊரில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் முறை வைத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் எனக்கு விருந்து வைக்கவேண்டும். மூன்று மாத காலத்திற்கு இவ்வாறு நீங்கள் எனக்கு விருந்து வைத்தால் என்னுடைய உடல் இன்னும் நல்ல பலம் பெறும். அப்போது நான் குன்றை எளிதில் சுமந்து காண்பிப்பேன்," என்றான் நோஞ்சான்.

மக்களும் அதற்குச் சம்மதித்து, தினந்தோறும் முறை வைத்து ஒவ்வொரு குடும்பமும் சமைத்துப்போட நன்றாகச் சாப்பிட்டு வந்தான்.

மூன்று மாத காலத்திற்குள் நோஞ்சான் மிகவும் கொழுத்துவிட்டான். முன்பு இருந்த நோஞ்சானா?' எனப் பார்ப்போர் வியக்கும் வண்ணம் பெருத்துவிட்டான்.

"நீ கேட்ட கெடு முடிந்துவிட்டது. இனி நீ அந்தக் குன்றைச் சுமந்துகாட்டுவாய் அல்லவா?" என்று நோஞ்சானைப் பார்த்துக் கேட்டனர் மக்கள்.

"நிச்சயமாக", என்று சொன்ன அவன் ஒரு நாளை நிச்சயித்து அன்றைய தினம் மக்களுக்கு அந்தக் குன்றைச் சுமந்து காண்பிப்பதாக வாக்குறுதி அளித்தான்.

அந்த நாளும் வந்தது. ஊர் மக்கள் எல்லாரும் அந்த மைதானத்தில் கூடினர். சிறிது நேரத்திற்குள் நோஞ்சான் மிகவும் கம்பீரமாக நடந்து அங்கே வந்தான்.

பந்தயப் பணத்தைத் தயார் செய்து கொண்டீர்களா?" என்று கேட்டான் நோஞ்சான்.

"தயார் செய்துவிட்டோம். முதலில் நீ குன்றைத் தூக்கு பார்ப்போம்," என்றனர் மக்கள்.

"சரி, நீங்கள் அனைவரும் இந்தக் குன்றை ஆளுக்கு ஒரு கைபிடித்துத் தூக்கி என் தோள்மீது வையுங்கள். நான் சுமக்கிறேன்," என்றான் நோஞ்சான்.

அதைக் கேட்டுத் திடுக்கிட்ட மக்கள், "நாங்கள் தூக்கி உன்மீது வைக்க வேண்டுமா? என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டனர்.


"நீங்கள் தூக்கி என்மீது வைத்தால் நான் சுமந்து காட்டுகிறேன்!" என்றான் நோஞ்சான்.

"எங்களை ஏமாற்ற நினைக்காதே நோஞ்சான். குன்றை நாங்கள் தூக்கி உன்மீது வைக்கவேண்டும் என்று நீ நிபந்தனை விதிக்கவில்லை. நீதான் சுமந்து காட்டுவதாய் சொன்னாய்," என்று கோபத்துடன் மக்கள் கூறினர்.

"ஆமாம் சுமந்து காட்டுவதாய்த்தான் சொன்னேனே தவிர, தூக்கிக் காட்டுவதாக நான் சொல்லவில்லையே, நீங்கள் தூக்கி வைத்தால் நான் சுமந்து காட்டத் தயார். உங்களால் அது முடியவில்லை என்றால் இப்போட்டியில் நான் வென்றுவிட்டதாகத்தான் அர்த்தம். எங்கே பந்தயப் பணம் ஆயிரம் ரூபாய்?" என்று கேட்டான் நோஞ்சான்.

மக்களும் அப்பொழுதுதான் அந்த வார்த்தையின் சாதுரியம் விளங்கியது. நோஞ்சானின் சாதுரியப் பேச்சால் ஏமாந்த மக்கள், நிபந்தனைப்படி ஆயிரம் ரூபாயை நோஞ்சானிடம் கொடுத்துத் தமது தோல்வியை ஒப்புக்கொண்டனர்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18.03.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 82
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 79

**பரிசுக்குரியவர்**
வே.நவரட்னசாமி
ந/சரஸ்வதி த.ம.வித்தியாலயம்-லிண்டுல.

**பாராட்டுக்குரியவர்கள்**
எம்.நந்தகுமார், இந்துக்கல்லூரி-மட்டக்களப்பு.
பி.விஸ்வநாதன்
ஆரா/உடப்புத் தமிழ் மகா வித்தியாலயம்-உடப்பு.
எம்.ஐ.ஜமல்டீன்- புதிய காத்தான்குடி-1.
முஸ்றிஹா முபாரக்-புத்தளம்.
பி. அனுஷியா
தி/விக்னேஸ்வர மகா வித்தியாலயம்-திருகோணமலை.


## விடுகதைகளும் விடைகளும்

01. நாடொன்று உண்டு. அந்த நாட்டின் பெயரிலே பெண்ணின் பெயரொன்று உண்டு. அந்த நாடு எது?
02. பறக்கக்கூடிய ஒன்று- ஆனால் அது சிலருக்கு சூட்டக்கூடிய ஒன்று. அது என்ன?
03. வாழ்ந்தாலும் ஏசுவான். தாழ்ந்தாலும் ஏசுவான். யார் அவன்?
04. நமக்கு சொந்தமான ஒன்று. ஆனால் பிறர் பாவிக்கக்கூடிய ஒன்று. அது என்ன?
05. நாம் கதை சொன்னால் அவனும் கதை சொல்வான். யார் அவன்?
06. பிறக்கும்போது வாயில்லை. இறக்கும்போது வாயுண்டு. அது என்ன?
07. அண்ணன் முன்னால் ஓடுவான். தம்பி பின்னால் ஓடுவான். யார் அவன்?
08. ஆதவன் பெயரையும், அகிம்சையின் வள்ளல் ஒருவரின் பெயரையும் இணைத்தால் ஒரு பூவின் பெயர் வரும். அது என்ன?
09. சாரதிகள் கவனிக்கவேண்டிய விதிமுறைகளில் ஒன்று. கடைகளிலும் இது விற்பனைக்குண்டு. அது என்ன?
10. இளமையில் ஓடுவான். முதுமையில் ஆடுவான். அவன் யார்?

### விடைகள்

| | |
|---|---|
| 01. ஆசியா | 02. பட்டம் |
| 03. வையகம் | 04. பெயர் |
| 05. தொலைபேசி | 06. குரும்பை |
| 07. கடிகார ஊசி | 08. சூரியகாந்தி |
| 09. சிக்னல் | 10. பாம்பு |

எம்.என் றிநூசா-யோனகபுர திக்வெல்ல.



ஆபிரிக்க பாலைவனப் பகுதிகளிலும், மத்திய ஆசியாவிலும் காணப்படும் ஒருவகை ராட்சத சிலந்திகள் மிக வேகமாக ஓடும். இவற்றின் வேகம் மணிக்கு 16 கிலோமீற்றர்.



இங்கிலாந்தைச் சேர்ந்த டேவிட் ஆஷ்மன் என்பவர் 34 ஆண்டுகள் ஹொக்கி விளையாடினார். விளையாடிய காலத்தில் 2 ஆயிரத்து 2 கோல்கள் போட்டுள்ளார்.

அட்லாண்டிக் கடலை விமானம் மூலம் முதன் முறையாகக் கடந்தவர்கள் அமெரிக்க விமானப் படையைச் சேர்ந்த விமானிகள். அல்பேர்ட் குஷன் ரீட் என்பவர் தலைமையில் இந்தக் குழு 1919 ஆண்டும் மேமாதம் இந்தச் சாதனையை நிகழ்த்தியது.

## வாரம் ஒரு நாடு

### ஆர்ஜென்ரீனா



**அமைவிடம்:** தென் அமெரிக்காவில் தென் கிழக்குப் பிராந்தியத்தில் அமைந்திருக்கிறது.
**பரப்பளவு:** 2,777,800 சதுர கி.மீ (1,072,500 சதுரமைல்)
**மக்கள் தொகை:** 32,000,000பேர். (32 கோடி.)
**தலை நகரம்:** போனஸ் எயாரிஸ்
**ஆட்சி முறை:** சமஷ்டிக் குடியரசு.
**தேசிய தினம்:** மே 25.
**மதம்:** உரோமன் கத்தோலிக்கம்.
**மொழி:** ஸ்பானிய மொழி.
**பார்க்கவேண்டிய இடங்கள்:**

பிளாஸா டி மாயோ என்ற தேவாலயம் கட்டாயம் எவரும் பார்க்க வேண்டிய அமைப்பு. இதில் ஆர்ஜென்ரீனாவை மீட்ட தளபதி சான் மார்ட்டினின் நினைவுச் சின்னங்கள் வைக்கப்பட்டுள்ளன. நகரமண்டபம் கண்காட்சிச்சாலை, அரசாங்க அலுவலகங்கள் ஆகியவை இங்கே அமைந்துள்ளன. தாவரவியல் பூங்காவான பலேர்மோ வனம் இயற்கை அழகுடன் செயற்கை அழகும் இணைந்தது. இதே இடத்திலேயே தேசிய வரலாற்று காட்சியகம், நகரின் இத்தாலியப் பிரிவான லா பொகா ஆகியனவும் உள்ளன. உயிரியல் பூங்காவும் இங்குண்டு.

இயற்கையாக அமைந்த அருவிகளும் செயற்கைக் கால்வாய்களும் இவைகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறு சிறு தீவுகளும் வனப்புமிக்கவை. இந்நீர் நிலைகளில் தோணி ஓட்டங்கள் மனதுக்குக் கிளர்ச்சி தருபவை.

இசை அரங்குகள், நாடக அரங்குகள், திரை அரங்குகள் யாவும் போனஸ் அயரிஸ் நகரின் ஒரு பகுதி முழுவதையும் ஆக்கிரமித்துள்ளன. இரவு நேரக் கேளிக்கை விடுதிகளும் இங்கு அதிகமாகக் காணப்படுகின்றன.


கால்பந்து, குத்துச்சண்டை மற்றும் குதிரைச் சவாரி ஆகியன இந்நாட்டின் தேசிய விளையாட்டுகளாகும்.

## உடல் அரசாங்கம்

| | |
|---|---|
| மூளை | –பிரதமமந்திரி |
| சுவாசப்பை | –உள்துறை மந்திரி |
| தோல் | –பாதுகாப்பு மந்திரி |
| கால்கள் | – போக்குவரத்து மந்திரி |
| வயிறு | –உணவு மந்திரி |
| வாய் | – செய்தி ஒலிபரப்பு மந்திரி |
| கண் | –சட்ட மந்திரி |
| கைகள் | –தொழில் மந்திரி |
| காது | –தபால் மந்திரி |
| மூக்கு | –சுகாதார மந்திரி |
| பல் | –பொதுத் தேவை மந்திரி |
| நாக்கு | –பிரசார மந்திரி |

நியாஸத் பறக்கத்துல்லா
எருக்கலம்பிட்டி-03.

## செய்து பாருங்கள்



ஒரு போத்தலை எடுத்து அதில் அரைவாசி நிரம்புமவரை நீர்விடவும். அதனுள் ஒரு ஸ்ட்ரோவைப் போடவும். ஸ்ட்ரோவின்மேல் முனை வழியே காற்று உரசிச் செல்லும் வகையில் ஊதுங்கள். இனிமையான இசை வரும். ஸ்ட்ரோவை இன்னும் ஆழத்தில் அமிழ்த்தி ஊதினால் அதிகமாக இசை வரும். ஸ்ட்ரோவை சற்று மேல் இழுத்து ஊதினால் லேசாக மெல்லிய இசை வரும்.

**எழுதுவது யார்?**

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்

'முரசு'க்காக எழுதும் தொடர் இது!

வாசகர்களின்
ஊகிப்புத் திறனுக்கு சவால்!
கண்டுபிடிக்கும்
வாசகர்களில்
பத்து
அதிஷ்டசாலிகளுக்கு
அசத்தலான-பரிசுகள்
காத்திருக்கின்றன.
தொடர்ந்து வாசியுங்கள்
நாம்கேட்கும்போது
விடையை எழுதி அனுப்பினால் போதும்.


# 12 மகாகூலம்



விடாமல் பெய்தது மழை! இரவே இது ஆரம்பம். குளிர்காற்றும் கொட்டும் மழையுமாகப் பூமியைப் பிரளயம் பிடித்து ஆட்டிக் கொண்டிருந்தது.

அந்த மழையில் 'அகத்து அம்மா'வாக மாறியிருந்த பத்ரா ஓர் ஓலைக் குடையைப் பிடித்துக் கொண்டு புறப் பட்டுவிட்டாள். அவளுக்குத் தினமும் களறிப் பயிற்சி நடந்து கொண்டிருந்தது.

பெரிய வீட்டுப் பெண்களுக்கு அன்றைய நாளில் இந்தத் தற்காப்புக் கலை மிகமிக அவசியமாக இருந்தது. கத்திச் சண்டையும், தேகப் பயிற்சியும் இணைந்ததுதான் களறி.

பருவம் அடைந்த பின் நன்றாக வளர்ந்து செழிப்பேறி விட்டது பத்ராவின் உடல்! அவள் பயிற்சிக்குப் போனால் கத்தியை எடுக்கத் தேவையே இருக்காது! கண்களே எதிரிகளை வீழ்த்திவிடும் பேரழகு. இருந்தாலும் தேகப் பயிற்சி இல்லை என்றால் உடலின் வாளிப்பும், வனப்பும் பொதுக்குபட்டுப் போய்விடும் என்பதை அந்த வெண்ணெய் மேனிப் பெண் விவரமாய்த் தெரிந்திருந்தாள்.

நங்கையும் பத்ராவுக்கு இப்படி எல்லாம் பயிற்சி எடுப்பது ஓர் அவசியம் என்றுணர்த்திருந்தாள். இல்லாவிட்டால் பருவகாலத்தில் ஆண்களின் உருவங்கள் அடிக்கடி கனவில் வந்து வாட்டும்! எனவே தான் தினம் தவறாமல் மகள் களறிக்குப் போவதை நங்கை ஊக்குவித்திருந்தாள்.

சிவசங்கரன் நம்பூதிரி திண்ணையில் அமர்ந்து மழையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாம் என்று தான் நினைத்தாள் நங்கை. ஒருநிமிடம் கூட ஓய்ந்து உட்காராத மனிதருக்கு இப்படிப்பட்ட மழையாவது ஓய்வு தரலாம்!

ஜன்னலின் வழியாகத் திண்ணையைப் பார்த்தாள் நங்கை. சிவசங்கரனைக் காணோம்.

'எங்கே போயிற்று இந்த மழையில், யோசித்தபடி அடுக்களையில் அன்றைய உணவுக்கான ஆயத்தம் மேற்கொள்ளப் போனாள் நங்கை. போகும் போது அடுக்களை ஜன்னலில் அந்த அற்புதம் தெரிந்தது! சிவசங்கரன் திருமேனி தென்னந்தோப்பில் நின்று கொண்டிருந்தார். அவரது கையிலிருந்த வெட்டரிவாள் எதையோ வீசிவீசி துண்டு போட்டுக் கொண்டிருந்தது!

கூர்ந்து பார்த்தாள். விழுந்த மட்டைகளை வெட்டி விறகுக்காகச் சேமித்துக் கொண்டிருந்தார் சிவசங்கரன்!

அவளுக்குச் சிரிப்பு வந்தது. காரணம்- இப்படியொரு பேய்மாரி கொட்டிக் கொண்டிருக்கிற உணர்வுகூட இல்லாமலா ஒரு மனிதன் வேலை பார்ப்பான்?

வெட்டிய துண்டுகளை அடுக்கிக் கொண்டிருந்தார் சிவசங்கரன். இடுப்பில் ஒரேஒரு ஒற்றைத்துண்டு. அது ஒட்டிப்போய் உள்கோமணக் கட்டை வெளிச்சப் படுத்தியது!

சே....

அவள் அடுப்பருகே திரும்பிக் கொண்டாள்.

□□□

இப்படிப்பட்ட ஒரு வேலைக்காரனை உலகத்தில் தேடிக் கண்டுபிடிப்பது மிகமிக கஷ்டம்தான்! தனது கடமைகளை நிறைவேற்றுவதில் அவருக்கு இரவா பகலா எதுவுமே தெரியாது!

விழிப்பு வந்து விட்டால் வேலை.... வேலை... வேலை!

நான்கு ஏக்கராவிலும் நின்றிருந்த தென்னை, மா, பலா, எலுமிச்சை மரங்களுக்கு அடியில் ஒரு புல்லோ பூண்டோ தெரியக் கூடாது? காய்கறிப் பாத்தியில் ஒரு களை கண்ணுக்குத் தெரிந்தாலும் பதறுவார்.

"இருக்கட்டுமே! நாளைக்குக் கொத்தினால் போதாதா?" என்று பரிவுடன் கேட்டிருக்கிறாள் நங்கை.

"அப்படி விட்டால்...நாளைக்குச் செய்ய வேண்டிய வேலை அடுத்த நாளைக்குப் போயிடும்மா! கூடாது ஒருநாள் கூட சோம்பேறியா உட்காரக்கூடாது!" என்பார் சிவசங்கரன்.

"....மழையோ, வெய்யிலோ, பனியோ எதுவானாலும் சரி என்னாலே சோம்பி உட்காரவே முடியாதும்மா! நீங்க போடற சோத்துக்கு நான் கடன் வைக்கக்கூடாது! ஒருநாள் சோம்பலா உட்கார்ந்தா அதுவே தினமும் மனுஷனைச் சோம்பேறியாக்கிடும்!"

இப்படி அவர் சொன்ன பிறகு நங்கை எதையுமே அவரிடம் கேட்பதை விட்டு விட்டாள். அவரே தான் எல்லாக் காரியங்களையும் எடுத்துப் போட்டுக் கொண்டு செய்வது வழக்கம். வந்து சேர்ந்த ஓரிரு நாட்களிலேயே வடக்குத் தரை இல்லத்தின் காரியக்காரனாக ஊர்முழுக்க அவரை ஏற்றுக் கொண்டு விட்டது! ஏருக்கு ஆள்பிடிக்க... நாற்று நடவு செய்ய... களையெடுக்க.... உரம்போட.... நெல்லறுத்துக் கண்டு முதல் செய்ய... எல்லாக் காரியங்களிலுமே சிவசங்கரனின் முக்கியத்துவம் வந்துவிட்ட பிறகு...

ஏவலிடமும் காவல் காக்கவும் நங்கைக்கு தேவையே வரவில்லை.

"ஏதோ ஒரு எண்ணத்திலே இல்லத்தை விட்டுட்டு வந்த எனக்கு தங்கி இருக்க ஒரு அறையும்.... மூணுவேளை வயிறு முட்டச் சோறும் போடறீங்களேம்மா! அதுக்கு நான் என் கடமையைச் செய்யலேன்னா நாளைக்கு என்னை அந்த ஈஸ்வரன் கேள்வி கேட்கறப்ப என்ன பதில் சொல்லி மழுப்பறது?" என்றவர் சிவசங்கரன். எனவேதான் பொறுப்பை அவர் தலைமீதே கட்டிவிட்டு வெளியே தலையைக் கூடக் காட்டாமல் ஒதுங்கிக் கொண்டவள் நங்கை அந்தர்ஜனம். சாப்பாடுகூடப் பரிமாற வர வேண்டாம் என்று தடுத்துவிட்டவர் அவர்.

"என் சோறு எவ்வளவுன்னு தெரியும். அதை எடுத்து வச்சிட்டு நீங்க உள்ளே இருங்க அம்மா! நான் பசிச்சா வந்து சாப்பிடப்போறேன் அவ்வளவுதானே?"

வந்த புதிசில் அவரோடு ஏதாவது பேசிக் கொண்டிருந்ததும் இந்த ஒரு ஏற்பாட்டினால் இல்லாது போயிற்று! நங்கைக்குப் பேச்சுத்துணை பத்ரா மட்டும்தான். அவள் கூட தொணதொண வென்று பேசுகிற ரகமில்லை! என்னம்மா என்றால் என்னம்மா- அவ்வளவுதான்.

□□□

பேரிடி ஒன்று ஈசானிய மூலையில் இடித்தது! அதைக் கூடக் கவனிக்காமல் சிவசங்கரன் களையை வெட்டி வெட்டித் தள்ளிக் கொண்டிருந்தார். ஏற்கெனவே நிலத்தில் தெப்பமாக நிற்கிற தண்ணீர் அதில் அவர் வெட்டரிவாளைக் கொண்டு செடிகளை வீசிவீசி செதுக்குகிற வேகத்தில் மழையோடு நிலத்து நீரும் அவர்மீது பட்டுத்தெறித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தாள் நங்கை.

அடேயப்பா! என்ன உடம்பு?

சோத்தை அமுக்குகிற நம்பூதிரி அல்ல இவர்! திடகாத்திரமும் தேகவாளிப்பும் அவரை உருட்டித் திரட்டியிருந்தன. வீசிவீசி வெட்டும் போது அவரது கையும் தோளும் உருண்டு உருண்டு மினுமினுப்பதையும் பார்த்தாள் நங்கை. அவரது உடலை அப்படியே பார்த்துக் கொண்டு நிற்பதில் ஓர் ஆனந்தம் தெரிந்தது.

சற்று நேரத்தில் அந்த ஆனந்தம் வேறேதோ ஓர் உணர்வை நங்கையின் மனசில் கிளறி விட்டது!

இப்படிப் பட்ட ஓர் ஆண்மையை ஸ்பரிஸித்த அனுபவம், அவளுக்கு நாராயணன் நம்பூதிரியோடு முடிந்துவிட்டது! அதற்குப் பிறகு.....? மூன்று ஆண்டுகளின் வெறுமையில் மறுடியும் ஓர் ஆசை! வந்த வேகத்திலேயே அதற்கு வேறொரு அர்த்தம் கற்பித்தது ஊரும் உறவும்!

அப்படி ஒரு பழியை ஏற்கிற மனசில்லா மனசோடுதான் மகள் பத்ராவிடமே மழுப்பலாகச் சொன்னாள். "அம்மா ஆண் துணை தேடறது எனக்காக இல்ல பத்ரா! நம்ம வீட்டையும் பூமியையும் பார்க்கத்தான்! என் ஒருத்தியாலே எதுவுமே செய்ய முடியலே பார்த்தியா? வீடு காடாயிருக்கு; பூமிதரிசாயிருக்கு!

இனி இதை எல்லாம் எப்படி மறுபடியும் பழையபடி உருவாக்கறது?"

பத்ராவும் அதை நம்பினாள். அந்த நேரம் சிவசங்கரன் எதேச்சையாக வந்ததுமே.... மகளிடம் பேசிய பொய்யையே நிஜமாக்கிக் கொள்ளும்படியாகி விட்டது! நங்கைக்கு!

ஆனால் உள்ளே இருந்த ஆசை...?

□□□

அது இனியும் அப்படியே உட்கார்ந்து கொண்டுதானிருப்பதாகப் பட்டது நங்கைக்கு! மனப்பூர்வமாக இல்லை என்று மகளை நம்பும்படி செய்திருந்தாலும்.... அதை மறந்துவிடாத மனசு- இனியும் அந்த ஏக்கத்துக்குள் தத்தளித்துக்கொண்டே இருப்பது உண்மைதான்!

சிவசங்கரனைப் பார்த்த அந்தப் பார்வை..... அவளுக்குள் இனியும் அதை வேரூன்றி வைத்திருப்பதாகவே உணர்த்தியது!

வானம் அப்போதும் இருள ஆரம்பித்து விட்டது!

மறுபடியும் மழை கொட்டப் போகிற ஆயத்தம். உடுத்திருந்த ஈரிழைத் துண்டு மறுபடியும் நனையலாம். சிவசங்கரன் எதையுமே யோசிக்காமல் தன்பாட்டுக்கு வேலையில் மூழ்கியிருந்த போது

சரியா தப்பா என்பதையே மறந்து போன நிலையில் நங்கை அறைக்குள்ளிருந்து கூவ ஆரம்பித்தாள்.

"ஐயோ கடவுளே! யாராவது வாங்களேன்!"

இல்லத்தில் வேறொரு மனிதருமில்லை என்று அவளுக்குத் தெரியும். களறிக்குப் போன மகள் திரும்பிவர நேரம் பிடிக்கலாம். அங்கே இருக்கிற ஒரே ஆள் சிவசங்கரன் நம்பூதிரிதான்!

"ஐயையோ....."

மறுபடியும் அலறினாள் நங்கை!

சிவசங்கரன் திரும்பிப் பார்ப்பது தெரிந்தது. உடனே தனது அறைக்குள் ஓடினாள். கட்டிலில் விழுந்தாள். கண்கள் கதவுக்கு வெளியே முற்றத்து ஜன்னல் கம்பிகளுக்கு நடுவே பதிந்தன!

"ஐயையோ- சிவசங்கரா!"

மறுபடியும் கூப்பாடு. வெட்டரிவாளைப் போட்டுவிட்டுத் தோப்புக்குள்ளிருந்து ஓடிவந்த சிவசங்கரன் ஜன்னல் பக்கமாக உள்ளே பார்த்தார். தனக்கு ஒதுக்கப்பட்ட அறையை விட்டு வேறு எந்த அறைக்கும் நுழையாத மனிதர்.... அப்படியும் இப்படியுமாக உள் அறைகளை எல்லாம் தேடினார்.

நடு இல்லத்து அறைக் கதவுக்குள் கட்டிலில் அந்தர்ஜனம்.

இருகைகளாலும் வயிற்றை அமுக்கிக் கொண்டு புரள்வதைப் பார்த்தார் அவர்.

"ஐயோ- இப்படி வாங்களேய்யா! அங்கேயே நிற்கிறீங்களே!" கத்தினாள் நங்கை.

தயங்கித் தயங்கி உள்ளே வந்தார் சிவசங்கரன்.

"என்னாச்சு... என்னாச்சு?" என்றார் அவர். "வைத்தியரைப் போய் அழைச்சுட்டு வரட்டுமா- சொல்லும்மா!"

"வேண்டாம். எப்போதாவது இப்படி வரும். அழுத்தித் துடைச்சிட்டே இருந்தா அது பாட்டுக்குப் போயிடும். இன்னிக்கு பத்ராவையும் காணலே! கொஞ்சம் அழுத்திப் பிடியுங்களேன்!"

நங்கை உத்தரவிட்டதுமே சிவசங்கரன் பார்த்தார். உருண்டு புரண்டதால் உடுத்திருந்த இடுப்புப் புடவை ஒருபக்கம் விலகியிருந்தது...

சந்தனமா, வாழைத்தண்டா என்று நினைக்கச் செய்கிற மாதிரிப் பளிச்சிட்டது நங்கையின் ஒரு பக்கத்துத் தொடை!

சிவசங்கரன் தயங்கினார்.

"எங்கே அழுத்தணும்?" கேட்டார். உடனே ஒருகையால் அவரது கையைப் பற்றி மறுகை வைத்திருந்த வயிற்றின் மீது பதித்தாள் நங்கை.

"இங்க தான்.... இங்கே... இங்கே."

சிவசங்கரனின் வலதுகை மிருதுவாக நங்கையின் வயிற்றின் மீது பதிந்திருந்தது!

"கொஞ்சம் அழுத்துங்களேன்...."

அழுத்தினார். தம் பலத்தைக் காட்டக் கூடிய இடமல்ல என்கிற கவனம் அப்போதுமிருந்தது நம்பூதிரிக்கு.

"என்ன செய்யறீங்க சிவசங்கரா?"

ஒரக்கண் திறந்து பார்த்த நங்கை உரத்த குரலில் கேட்டதுமே பதறிப் போய் கையை இழுத்தார் அவர்.

"கொஞ்சம் நல்லா அழுத்துங்க...." என்றவள் அந்தக்கையை மறுபடியும் இழுத்து வயிற்றில் பதித்துக்கொண்டு விட்டாள்!

"உம்...அப்படித்தான்...அப்படித்தான்..... இனியும் கொஞ்சம் கீழே....கீழே....கீழே..."

விருட்டென்று கையை இழுத்துக் கொண்டார் நம்பூதிரி.

நங்கை விடவில்லை.

மறுபடியும் கையை இழுத்துப் பதித்தபோது அவள் புடவை மொத்தமும் விலகியிருந்தது! நங்கை சட்டென்று கால்களால் கதவைத் தள்ளி விட்டாள்! அப்புறம்?

சிவசங்கரனின் கண்கள் அகன்று போயின.

சிணுங்கிச் சிரித்தாள் நங்கை. அவளையே வைத்தகண் எடுக்காமல் சிவசங்கரன் பார்த்தார். பார்த்துக் கொண்டே கட்டிலில் நங்கையின் அருகே உட்கார்ந்தார்.

□□□

வெளியே மழையின் உக்கிரம்- திடீரென்று வளர்ந்து சொட்டுக்கு ஒரு குடம் பேய் மாரியாகியது!

அப்போதும் சிவசங்கரனின் கைகளையே பற்றியிருந்தாள் நங்கை! பேரிடி ஒன்று ஆயிரம் சூரிய வெளிச்சத்தைக் காட்டி இடித்தது! அப்படியே அவரை இறுகத் தழுவிக் கொண்டாள் நங்கை.

சிவசங்கரனின் கை நடுக்கம் நின்று போயிற்று.

உடம்புக்குள் ஒரு நூறு நரம்புகளும் துள்ளி முறுக்கிக்கொள்ள ஆரம்பித்தன.

மழையில் நின்றிருந்தபோது சில்லிட்டிருந்தன கைகள்! ஆனால் இப்போது நங்கையின் கைப்பிடியில் அவை சூடும் உணர்வும் ஏறிக்கொண்டு தத்தளித்தன!

புருஷ ஸ்பரிஸம் மறந்திருந்த மனசும் உடலும், மரத்துப் போன பெண்மைக்குள் மீண்டும் முழித்து எழுந்து ஊற்றுக்கண் திறந்தன! உற்சாகமாய் நாற்றுவிட்டு அசைந்தன!

கண்களைத் திறந்து பார்த்தாள் நங்கை.

தழுவிக் கொண்டிருந்த உடம்பு மொத்தமும் நாராயணன் திருமேனியின் வடிவாய்....நிறமாய்..!

மனசு அழுதது....'இத்தனை நாளும் என்னை விட்டுவிட்டு இப்படிப்போய் விட்டீர்களே.....' என்று புலம்பியது!

ஆம்....

அவள் அணைப்புக்குள் சிவசங்கரனைப் பார்க்கவேயில்லை!

□□□

மழை விடவேயில்லை! கொட்டோ கொட்டென்று கொட்டியது!

என்றாலும் பத்ரா பயிற்சிக் கூடத்தில் நிற்கவில்லை!

அவளுடன் பயற்சி செய்த சிலர் அவளை உற்று உற்றுப்பார்த்தனர்! "எப்படி பத்ரா போகப் போறே?"

"இதோ இப்படித்தான்!" என்றாள் அவள்! ஓலைக்குடையை கழுத்துக்கு அருகில் சேர்த்துப் பிடித்துக் கொண்டாள். மழையில் நடக்க ஆரம்பித்தாள்!

சாரலாய் வீசியடித்த மழை பத்ராவின் பின்பக்கத்தை மறுபடியும் நனைத்து ஈரமாக்கியது!

இல்லத்துக்கு வரும்வரை- நனைந்து கொண்டே வந்தவள், முற்றத்தில் நின்றதுமே குடையை வைத்துவிட்டு உள்ளே ஓடினாள்.

அறைகள் அத்தனையும் அடைத்திருந்தன.

அம்மா அடுக்களையிலிருப்பாள் என்கிற உணர்வோடு... தன் அறையின் கதவைத் தள்ளினாள்.

சொரசொரத்த ஈரப்பாவாடையை அவிழ்த்து எறிந்தாள்.

மேல் ரவிக்கையையும் களைந்தாள்!

கண்ணாடியில் அவளது தோற்றம் ...கண்களையே கூசவைக்கிறதாயிருந்தது!

"இனி நீ களறி படிக்கிறதை நிறுத்திக்கலாம் பத்ரா!"

ஆசான் சொன்னது கவனத்துக்கு வந்தது!

"ஏன்?"

"இல்லே..! ஏதாவது ஒரு நம்பூதிரி வாலிபனைத்தேடி அவனும் நீயும் கட்டில்லே சண்டை போடற காலம் வந்தாச்சு பத்ரா! உங்க அம்மா இனியும் இதைப் பற்றி நினைக்கவே இல்லியா?"

அந்தக் கிழட்டு ஆசான் எப்போதுமே இப்படித்தான்! இப்போது சொஞ்சம் மாறுதலாக!

தலையைக் குனிந்தவள் அலமாரியைத் திறந்து ஒரு பாவாடையையும் ரவிக்கையையும் எடுத்துக் கொண்டு மூடியபோது-

அந்தக்கண்ணாடிக்குள்-

இடுப்பில் ஒரு சிறு துண்டு மட்டும் கட்டிக் கொண்டு நின்றார் சிவசங்கரன் நம்பூதிரி!

இந்த ஆள் எப்படி உள்ளே வந்தார் என்கிற உறுத்தலுக்கும் மேல் உறுத்தியது.... அவர் தன்னை இப்படி நிர்வாணமாகப் பார்த்து விட்டாரே என்கிற பீதியும் கோபமும்தான்! சட்டென்று கதவைச் சாத்தினாள் பத்ரா. பரபரப்பாக உடுத்துக்கொண்டாள்.

'அம்மாவிடம் போய்ச் சொல்ல வேண்டும்! இந்த ஆளை இனி இந்த் வீட்டில் எந்த வேலைக்கும் விடக் கூடாது! விரட்டி அடிக்க வேண்டும்!' என்றெல்லாம் சொல்லத்தான் வேகமாக நடந்தாள் பத்ரா.

அப்போது-


அடுத்த அறைக்கதவு திறந்து கிடந்தது.

கட்டிலில் அம்மா....! ஏதேதோ நினைப்பால் கண்களை மூடியபடி புன்னகைத்துக் கொண்டிருந்த அவள் உடம்பில் புடவையும் ரவிக்கையும் பிரிந்து கிடந்தன!


பத்ராவின் கண்களிலிருந்த கோபாக்கினி உக்கிரமடைந்தது!

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கண்ணன்
வயது: 21
முகவரி: 414, காலி வீதி
கொழும்பு-6.
பொழுபோக்கு:
தொலைக்காட்சி,
பத்திரிகை.




பெயர்: எம்.பௌஸர்
வயது: 21
முகவரி: 38/ஏ, பழைய வீதி
பேருவளை.
பொழுதுபோக்கு:
பத்திரிகை,பேனாநட்பு,
கிரிக்கெட்.



பெயர்: ரி.சங்கவி
வயது: 19
முகவரி: இறப்பர்தொழிற்சாலை
மாதம்பை எஸ்டேட், ரக்குவானை.
பொழுதுபோக்கு:
சினிமா,
தொலைக்காட்சி.



பெயர்: எவ்றிஸ்னா
முகவரி: 262, பீ.எச்.வி.
பண்டாவ-பொல்கஹவலை.
பொழுதுபோக்கு:
பத்திரிகை, வானொலி,
பேனா நட்பு.



பெயர்: வி.சின்னத்தம்பி
முகவரி: P.O.BOX-03
CODE NO-66051,
MENA AL ZOOR,
KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை,
'ரீ.வி, பேனாநட்பு.



பெயர்: ஏ.செய்னுல் ஹுஸைன்
வயது: 24
முகவரி: SAUDIA CATERING
P.O.BOX-456
DHAHRAN-31932- K.S.A
பொழுதுபோக்கு: பத்திரிகை,
சினிமா, கதைப்புத்தகம்.

பெயர்: ஏ.பிரகாஷ்
வயது: 19
முகவரி: 41, யூ.சி.வீடு
மன்னார் வீதி-
புத்தளம்.
பொழுதுபோக்கு:
பத்திரிகை,
கிரிக்கெட்.

பெயர்: எம்.றிஹாஸ்
வயது: 17
முகவரி: அல்லை வீதி,
தோப்பூர்-3.
பொ.போ: வழமையான
பொழுதுபோக்குகள்.

பெயர்: இ.பாபு
வயது: 28
முகவரி: P.O.BOX-56129, RIYADH-11544, SAUDI ARABIA.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: எம்.ஷம்ரூத்
வயது: 17
முகவரி: றஹீமா மன்ஸில் பம்மன்ன, நாரங்கொட.
பொ.போ: பத்திரிகை, வானொலி.

பெயர்: என்.குகநாதன்
வயது: 22
முகவரி: இல53, பழைய சோனகத்தெரு, கொழும்பு-12
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா.

பெயர்: எம்.ஹரீஸ்
வயது: 18
முகவரி: 386, புதிய தெரு, வெலிகம.
பொ.போ: ரீ.வி, பத்திரிகை, வானொலி.

# தாய்

## 16

அவன் பேசும்போது, கடிகாரப் பெண்டுல ஓசைகூட, வெளியே சுவர்களில் விழுந்து வழியும் பனிமழையின் ஓசையும் கூட, தாயின் செவியில் நன்றாகக் கேட்டன.

"நான் என் பாஷையிலே, ஒரு கொல்லனின் பாஷையிலேயே பேசுகிறேன். கடவுள் ஒரு நெருப்பு! அவர் இதயத்தில் தான் வாழ்கிறார். 'பூர்வத்தில் சொல்தான் பிறந்தது; அந்தச் சொல்தான் கடவுளாயிருந்தது' என்கிறார்கள். எனவே சொல் தான் பரிசுத்த ஆவி!" என்றான் ரீபின்.

"இல்லை. சொல்தான் அறிவு!" என்று அழுத்திக் கூறினான் பாவெல்.

"ரொம்ப சரி. அப்படியென்றால், கடவுள் இதயத்தில் குடியிருக்கிறார்; அறிவிலும் குடியிருக்கிறார்—ஆனால், நிச்சயமாக தேவாலயத்தில் அல்ல; தேவாலயம் கடவுள் கல்லறை; கடவுளின் சமாதி!"

தாய் தூங்கிப் போய்விட்டாள்; ரீபின் போனது அவளுக்குத் தெரியாது.

ஆனால் அது முதற்கொண்டு ரீபின் அங்கு அடிக்கடி வர ஆரம்பித்தான். அவன் வரும் சமயத்தில் பாவெலின் பிற தோழர்கள் யாரேனும் இருந்தால், அவன் தன்பாட்டுக்கு ஒரு மூலையிலே உட்கார்ந்து ஒன்றுமே பேசாமலிருப்பான். எப்போதாவது இடையிலே "அதுதான் சங்கதி!" என்று ஒரு வார்த்தையை மட்டும் போட்டுவிட்டுச் சும்மா இருந்துவிடுவான்.

ஒருநாள் அவன் அங்கு கூடியிருந்த கூட்டத்தைத் தனது இருண்ட பார்வையால் நோட்டம் பார்த்துவிட்டுச் சோர்ந்த குரலில் பேசினான்:

"நிலைமை இன்று எப்படி இருக்கிறது என்பதைப் பற்றித்தான் நாம் பேசவேண்டுமே ஒழிய, அது நாளை எப்படியிருக்கும் என்பதைப்பற்றி அல்ல. நிலைமை எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என்பது யாருக்குத் தெரியும்? மக்களுக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டால், அவர்களே தங்களுக்கு எது நல்லது என்பதைத் தீர்மானித்துக்கொள்வார்கள். அவர்களைக் கேட்காமலேயே அவர்கள் தலைமீது வேண்டாத விரும்பாத விஷயங்களையெல்லாம் புகுத்தியாயிற்று. அவை போதும்! இனி அவர்களாகவே சிந்தித்துப் பார்க்க அவகாசம் கொடுப்போம். வேண்டுமென்றால், அவர்கள் தங்கள் வாழ்க்கையை, கல்வியை, கற்ற அறிவை, உதறித் தள்ளிவிட்டுப் போகட்டும்; தேவாலயத்திலுள்ள கடவுளைப்போல, எல்லாமே தமக்கு எதிராகத்தான் அணிவகுத்து நிற்கின்றன என்பதை அவர்களே உணரட்டும். புத்தகங்களை அவர்கள் கையிலே கொடுங்கள். அவர்களே விடை கண்டு கொள்ளட்டும்— ஆமாம்!"

ரீபினும் பாவெலும் தனியாக மட்டும் இருக்க நேர்ந்தால், அவர்கள் மூச்சு விடாமல், முடிவில்லாமல் விவாதம் பண்ணிக்கொண்டேயிருப்பார்கள். எனினும் விவாதம் செய்யும்போது அவர்கள் தங்கள் நிதானத்தை இழந்து உணர்ச்சிவசப்படுவதில்லை. தாய் விவாதத்தை ஆர்வத்தோடு கேட்பாள்; அவர்கள் என்னதான் சொல்கிறார்கள் என்பதை அறிய அரும்பாடுபட்டுக் கொண்டு, ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்பாள். சமயங்களில் அகன்ற தோளும் கரிய தாடியும் கொண்ட ரீபினும், நெடிது வளர்ந்த பலசாலியான தன் மகனும் கண்மூடித்தனமாக, குருடாகப் போவதாக அவளுக்குப் படும். அவர்கள் முதலில் ஒரு திசையில் செல்வார்கள். பிறகு மறுதிசைக்குச் செல்வார்கள். போக்கிடம் தெரியாது, பிரச்னைக்கு மார்க்கம் காணாது அவர்கள் கையால் நிலந்தடவிச் செல்வதாக, ஓரிடத்திலிருந்து வேறிடத்துக்கு மாறுவதாக, தாம் செல்லும்போது தமது கைப்பொருளைத் தவறவிட்டு, அவற்றைக் காலால் மிதித்துக்கொண்டு நடப்பதாகத் தோன்றும். அவர்கள் எங்கெங்கோ மோதிக் கொண்டார்கள், எதை எதையோ தொட்டு உணர்ந்துகொண்டார்கள்; தங்களது கொள்கையையும் நம்பிக்கையையும் இழந்து விடாமல் எதை எதையோ தூக்கி விட்டெறிந்தார்கள்....

அவர்கள் எத்தனை எத்தனையோ பயங்கரமான, துணிச்சலான வார்த்தைகளைக் கேட்டுப் பழகுவதற்கு அவளுக்குக் கற்றுக்கொடுத்தார்கள். என்றாலும், அந்த வார்த்தைகள் ஆரம்பத்தில் அவளைத் தாக்கி உலுக்கியதுபோல், பின்னர் உலுப்பவில்லை. அந்த வார்த்தைகளை உதறித்தள்ள அவள் கற்றுக்கொண்டுவிட்டாள். சமயங்களில் கடவுளை மறுத்துச் சொல்லும் வார்த்தைகளில்கூட, கடவுள் நம்பிக்கை தொனிப்பதை அவள் கண்டாள். அப்படிக் காணும்போது அவள் அமைதியாக, எல்லாவற்றையும் மறந்து, மன்னித்துத் தனக்குத்தானே சிரித்துக்கொள்வாள்; அவளுக்கு ரீபினைப் பிடிக்காவிட்டாலும், இப்போது அவள் உள்ளத்தில் அவன் பகைமை உணர்ச்சியைக் கிளப்பவில்லை.

ஒவ்வொரு வாரமும் அவள் வெளுத்த துணிமணிகளையும், புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு, ஹஹோலிடம் கொடுப்பதற்காகச் சிறைக்குச் செல்லுவாள். என்றாலும் ஒரே ஒரு தடவைதான் ஹஹோலைக் கண்டுபேச அவளை அனுமதித்தார்கள்.

திரும்பி வந்தபோது அவனைப்பற்றி அன்போடு அவள் பேசினாள்; "அவன் கொஞ்சங்கூட மாறிவிடவில்லை. எல்லோரிடமும் நல்லபடியாகவே பழகுகிறான்; அனைவரும் அவனிடம் தமாஷாகப் பேசுகிறார்கள். அவனுக்குக் கஷ்டமாய் மிகவும் கஷ்டமாய்த் தானிருக்கிறது. இருந்தாலும் அவன் அதை வெளியில் காட்டிக்கொள்வதே இல்லை."

"அதுதான் சரி" என்று பேச ஆரம்பித்தான் ரீபின் "நம்மையெல்லாம் சோகம்தான் மூடிப் போர்த்தியிருக்கிறது; நாம் சோகத்துக்குள்தான் இருக்கிறோம். இருந்தாலும், சோகத்தைத் தாங்கித் திரிவதற்கு நாம் பழகிப்போய்விட்டோம். இதில் பெருமைப் பட்டுக்கொள்வதற்கு ஒன்றுமில்லை. எல்லோரும் தங்கள் கண்களை இருட்டடிப்புச் செய்துகொள்வதில்லை. சிலர் தாங்களாகவே கண்களை மூடிக்கொள்கிறார்கள். அதுதான் சங்கதி! நாம் முட்டாள்தனமாயிருந்தால், நாம்தான் அதன் பலாபலனை அனுபவித்துத் தீர வேண்டும்!"

□□□

விலாசவ் குடும்பத்தின் சின்னஞ் சிறிய வீட்டின்மீது மக்களின் கவனம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. இந்தக் கவனத்தால் அவர்களது மனத்திலே சிறுசிறு சந்தேகங்களும், காரண காரியம் தெரியாத பகைமை உணர்வும் ஏற்பட்டாலும் கூட, ஏதோ ஓர் இனந்தெரியாத நம்பிக்கை நிறைந்த ஆர்வக் குறுகுறுப்பும் ஏற்படத்தான் செய்தது. சில சமயங்களில் யாராவது ஒருவன் பாவெலைச் சந்தித்து அவனைச் சிரத்தையோடு பார்த்துக்கொண்டு, கேட்பான்:

"தம்பி நீ புத்தகங்களையெல்லாம் படிக்கிறாய். உனக்குச் சட்டங்களெல்லாம் தெரியும். அப்படியென்றால் எனக்கு இதை விளக்கிச் சொல்லேன்..."

அவன் சொல்லுகின்ற விஷயம் பொலீஸின் அநியாயத்தைப் பற்றியோ, அல்லது தொழிற்சாலை நிர்வாகத்தின் அநீதியைப் பற்றியோதான் இருக்கும். மிகவும் சிக்கலான விஷயமானால் தனக்குப் பழக்கமான நகரத்து வக்கீல் ஒருவருக்கு ஒரு சீட்டு எழுதிக்கொடுத்து அனுப்புவான் பாவெல். ஆனால், அவனது சக்திக்கு உட்பட்ட சமாச்சாரமாயிருந்தால், அவனே அதற்குரிய சட்ட விஷயங்களை விளக்கிச் சொல்லுவான்.

வரவர ஜனங்கள் சிரத்தையுள்ள இளைஞனை மதிக்கத் தொடங்கினார்கள். எளிமையாகவும் துணிவாகவும் பேசிய இந்தப் பலசாலியான இளைஞனை, எதையும் கூர்ந்து கவனித்து, காதுகொடுத்துக் கேட்கும், பிரச்சனையின் ஆழத்துக்குச் சென்று ஆராயும் இந்த இளைஞனை, எல்லாப் பிரச்சனைகளிலும் ஊடுருவிச் செல்லும் ஏதோ ஒரு நூலிழை அனைத்து மக்களையும் இணைக்கிறது என்று காணும் பாவெலை அவர்கள் மதிக்கத் தொடங்கினார்கள்.

இதன் பின்னர் பாவெலின் மதிப்பு மேலும் உயர்வதற்குக் காரணமாயிருந்தது ஒரு நிகழ்ச்சி, அதுதான் "சதுப்புக் காசு" சம்பவம்.

தொழிற்சாலையைச் சுற்றி அழுகல் வட்டமாய் ஒரு பெரிய சதுப்பு நிலம் பரவியிருந்தது. அங்கே பிர் மரங்களும், பிர்ச் மரங்களும் மண்டி வளர்ந்திருந்தன. வேனிற்காலத்தில் அந்தச் சதுப்பு நிலத்திலிருந்து மஞ்சள் நிறமான நுரை கொப்புளித்துப் பெருகும்; இந்தச் சாக்கடை நுரையிலிருந்து படைபடையாகக் கொசுக் கூட்டம் உற்பத்தியாகிக் கிளம்பும். அந்தக் கொசுக்களின் உபத்திரவத்தால், தொழிலாளர் குடியிருப்பில் காய்ச்சலும் ஜுரமும் உண்டாகும். அந்தச் சதுப்பு நிலம் தொழிற்சாலைக்குச் சொந்தமானது. தொழிற்சாலையின் புதிய மனேஜர் அந்தச் சதுப்பு நிலத்தைத் தூர்ப்பதன் மூலம் எரு எடுத்து அதன் மூலம் லாபம் அடையத் திட்டமிட்டார். அந்தச் சதுப்பு நிலம் தூர்க்கப் பட்டால் தொழிலாளர்களின் ஆரோக்கியமும், குடியிருப்பின் சுகாதாரமும்தான் மேம்பாடு அடையும் என்று காரணம் கூறி, அந்தச் சதுப்பு நிலத்தைச் சீர்படுத்துவதற்காக தொழிலாளர்களின் சம்பளத்தில் ரூபிளுக்கு ஒரு கோபெக் ரூபிள்- (ருஷியாவின் நாணயம் -நமது ரூபாயைப் போன்றது) கோபெக்- (ருஷியாவின் செப்புக் காசு) பிடித்தம் செய்ய உத்தரவிட்டார்.

இந்த உத்தரவைக் கண்டு தொழிலாளர்கள் கொதிப்படைந்தார்கள். அவர்கள் இந்த உத்தரவை எதிர்த்ததற்குரிய முக்கிய காரணம், தொழிற்சாலைக் காரியாலயத்தின் குமாஸ்தாக்களுக்கு மட்டும் அந்தச் சம்பள வெட்டிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

மனேஜர் இந்தக் கூலிக்குறைப்பு உத்தரவைத் தொழிற்சாலை விளம்பரப் பலகையில் ஒரு சனிக்கிழமையன்று வெளியிடச் செய்தார். அன்று பாவெலுக்கு உடல் நலமில்லாததால் அவன் வேலைக்குச் செல்லவில்லை; வீட்டில் இருந்தான். எனவே, அவனுக்கு அந்த உத்தரவைப்பற்றி எதுவும் தெரியாது. ஆனால், மறுநாள் மாலையும், கண்ணியமும் நிறைந்த பாத்திரத் தொழிலாளி சிஸோவும், நெட்டையான பூட்டுத் தொழிலாளி மாகோதினும் பாவெலைப் பார்க்க வந்தபோது மனேஜரின் தீர்மானத்தைப்பற்றிச் சொன்னார்கள்.

"நாங்கள், வயதானவர்கள்; இந்த விஷயத்தைப் பற்றிக் கலந்து பேசினோம்" என்று மனங்கலங்கும் முறையில் பேசத் தொடங்கினான் சிஸோவ். "நீ விஷயம் தெரிந்தவன் என்பதால், உன்னிடம் இது பற்றிப் பேசுவதற்காக எங்களை அனுப்பியுள்ளார்கள் தோழர்கள். கொசுக்களுடன் போராட, நம்மிடம் பணம் பறிக்க மனேஜருக்கு அதிகாரம் வழங்கும் சட்டம் ஏதாவது இருக்கிறதா?"

"யோசித்துப்பார்" என்று தனது குறுகிய கண்களில் பிரகாசம் தெறிக்கப் பேசினான் மகோதின். "நாலு வருஷத்துக்கு முன்னால், இந்த முடிச்சமாறிப் பயல்கள் என்னமோ குளியல் அறை கட்டப் போவதாகச் சொல்லி, நம்மிடம் காசு பிடுங்கினார்கள். மூவாயிரத்து எண்ணூறு ரூபிள்களைப் பிடுங்கிச் சேர்த்தார்கள். அந்தப் பணம் எல்லாம் எங்கே? அந்தக் குளிக்கிற இடம்தான் எங்கே? இதையும் காணோம்; அதையும் காணோம்!"

அந்தக் கூலிக் குறைப்பு அநீதியானதுதான் என்பதை பாவெல் விளக்கினான்; மேலும் அதன் மூலம் தொழிற்சாலைக்குக் கிடைக்கக்கூடிய லாபத் தொகையையும் குறிப்பிட்டான். அந்த இரு மனிதர்களும் முகத்தைச் சுழித்துக்கொண்டே திரும்பிப் போனார்கள். அவர்கள் போனவுடன் லேசாகச் சிரித்துவிட்டு, பாவெலின் தாய் சொன்னாள்:

"பாவெல், கிழவர்கள்கூட உன்னிடம் யோசனை கேட்கக் கிளம்பி விட்டார்கள்!"

அவளுக்குப் பதில் சொல்லாமல் பாவெல் கீழே உட்கார்ந்து ஏதோ எழுத ஆரம்பித்தான். சில நிமிஷம் கழித்து, அவன் தன் தாயைப் பார்த்துச் சொன்னான்:

"அம்மா, நீ எனக்காக ஒரு காரியம் செய்யவேண்டும். இந்தச் சீட்டை எடுத்துக்கொண்டு நகர் வரையிலும் போய் வரவேண்டும்."

"அதென்ன, ஆபத்தான இடமா?" என்று கேட்டாள் அவள்.

"ஆமாம், நமக்காக அங்கொரு பத்திரிகை நடக்கிறது. அங்குதான் உன்னை அனுப்பப் போகிறேன். அடுத்த இதழில் இந்தக் கூலிக் குறைப்பைப் பற்றிய செய்தி வெளிவந்தாக வேண்டும்."

"சரி, இதோ போகிறேன்" என்றாள் அவள்.

இதுதான் மகன் அவளது பொறுப்பில் விட்ட முதல்பணி. அவன் நிலைமையைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லிவிட்டது அவளுக்கு மகிழ்ச்சி அளித்தது.

"பாஷா! எனக்கும் புரிகிறது" என்று உடை உடுத்திக்கொண்டே பேசினாள் அவள். "அவர்கள் மக்களைக் கொள்ளையடிக்கிறார்கள்— ஆமாம்! சரி- அந்த மனிதனின் பெயர் என்ன சொன்னாய்? இகோர் இவானவிச், இல்லையா?"

(தொடர்ந்து வரும்)


**என்றும் முதலிடம்**

**உலகில் மிகச் சிறந்த நாவல் எது? ஒரே பதில்-**

**தாய்! தாய்!! தாய்!!!**

உண்மைகள் எப்போதும் வசீகரமானவை-

அதுதான் 'தாய்' நாவல் எப்போதும் முதலிடத்தில் இருக்கிறது!

தவறவிடாமல் தொடர்ந்து வாசியுங்கள்!

ரகுநாதனின் மொழி பெயர்ப்புநடை பிரமாதப்படுத்துகிறது.

-ஆ. ர.


## மக்சீம் கார்க்கி



# சின்ன சின்ன கோபங்கள்

*ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி*



இத்தோடு வாழ்க்கை தீர்ந்துவிடக் கூடாதா? வேகக் காற்றில் 'பட்'டென அணையும் தீபத்தைப் போல், வார்த்தைகளின் இறுதியாய் வரும் முற்றுப் புள்ளிபோல் வாழ்க்கை முடிந்து போகக் கூடாதா?

எரிச்சலும் கோபமும் மனதை நிரப்பிக் கொள்ள வேகவேகமாக சுவாசித்தாள். அழுகை சொல்லாமல் வந்தது. கட்டிலில் சாய்ந்து கொண்டாள். மீண்டும் அந்த சம்பவ நினைவலைகள் மனதோரம் வந்து முட்டின. உடம்பெல்லாம் எரிவாய் உணர்ந்தாள்.

"சீ.. ஒரு சின்ன விஷயத்துக்காய் அப்பா எப்படி ஏசி விட்டார்......" நினைவே கசந்தது. அதுவும் வீட்டுக்கு வந்திருந்த சொந்தக்காரர்களின் முன்னிலையில்........ சின்னஞ் சிறுமியாக என்னை நினைத்து விட்டாரோ என நினைக்கும் படியாக...... தேனீர் நிறைந்த ஐந்து கோப்பைகள் கை நழுவி விழுந்தது என் குற்றமா? வேண்டுமென்றே தான் விழ வைத்தேனா? ஏதோ கால் கொஞ்சம் தடுமாறி தேனீர்த்தட்டு கைநழுவ, 'சிலிங்' என ஐந்து கோப்பைகளும் நழுவி சிதறிவிட தேனீர் தரையெங்கும் பரவி நிற்க, வந்தவர்கள் 'ஐயோ' சொல்லி பரிதாபப்பட.....

வழமையாக கோபமே வராத சாது அப்பாவுக்கு அன்று என்னதான் நடந்ததோ? வார்த்தைகளை தாராளமாய் செலவளித்து ஏசி விட்டாரே! வெட்கம், அவமானம், சுயபரிதாபம், கையாலாகாத கோபம் எல்லாம் ஒன்று சேர்ந்து கண்ணீராய் வழிந்தது.

அவளுக்கு அன்று இரவு சாப்பாடு ஏறவில்லை. பிடிவாதமாக பட்டினி கிடந்தாள். மௌன விரதமும் கூடவே.

அம்மா ஏதோ சொல்லிப் பார்த்தாள். "ஏங்க!, வந்திருந்தவங்க முன்னாடி இப்படி பேசிட்டீங்க. அவ என்ன சின்னப் பிள்ளையா? வளர்ந்துட்டா. மனசுக்கு வருத்தமா இருக்கும். தவறுதலா நடந்திருச்சு. அதுக்குப் போய் ஏசிட்டீங்களே?"

அப்பாவிடம் அம்மா வாதாடிக் கொண்டிருந்தாள்.

"வளர்ந்த பிள்ளைன்னா அதுக்கேத்த மாதிரி கவனமா வேலை செய்யத் தெரியணும்." வார்தைகளை 'நறுக்' கென வெட்டி விட்டு அப்பா போய்விட்டார். கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு இன்னும் ஆத்திரம் வந்தது. எத்தனை அலட்சியம்! மனசு வெந்தது. "நாளைக்கு கல்யாணமாகி போற இடத்திலேயும் இந்த லட்சணமாக இருந்தா எங்களத் தான் குறை சொல்வாங்க...." போகும் போதும் தொடர்ந்துகொண்டே போனார் அப்பா.

இரவு நீண்டது. நிறைய பசித்தது. பேசாமல் படுத்திருந்தாள். தூக்கம் வரவே மாட்டேன் என்றது. வீட்டார் அவளைப் பற்றி சிறிதும் கவலைப்(!)படாமல் ரஜனியின் "வேலைக்காரன்" படத்தில் திளைத்து அவ்வப்போது சிரிசிரியென சிரித்துக் கொண்டிருந்ததுவேறு மனதை எரித்தது. காதுகளின் மேல்,கீழ் தலையணை வைத்து புதைந்து கொண்டாள். அப்போதும் சிரிப்பலைகள் தொடர்ந்தன. எப்படியோ எப்போதோ தூக்கம் வந்து தூங்கியும் போனாள்.

விடிந்தது. மனசு லேசானது போல் உணர்ந்தாள். இருந்தும் நேற்றைய சம்பவ பாதிப்பில் இருந்து மீளவில்லை. மௌனமாகவே வேலைக்குப் போனாள்.

"ஹேய், என்னடி, உம்முன்னு இருக்கே?" தோழி விசாரித்தாள். அவள் சொன்னாள். "ஐயோ, இதென்ன சின்னப் பாப்பா மாதிரி அழுது வடிந்து கொண்டு.... விட்டுடுடி. வீடுன்னா ஆயிரம் இருக்கும். நாம எவ்வளவோ வளர்ந்தாலும் நம்ம அம்மா அப்பாக்கு சின்னப் பிள்ளைகளாத் தான் தெரிவோம். ஏதோ உன் அப்பா இரண்டு வார்த்தை பேசிட்டாருன்னு வாழ்கையே முடிஞ்சு போனமாதிரி அழுது வடியுற. நாளைக்கு கட்டினவன் ஏதும் கொஞ்சம் சூடா பேசினாலும் இப்படித் தானா? ஐயய்யோ... இது சரியில்லம்மா."

தோழியின் உபேதசம் ஆரம்பத்தில் எரிச்சலை மூட்டினாலும் பின் மனதை இதப்படுத்தியது. "என்ன,நானும் சின்னப் பாப்பா மாதிரி நடந்துட்டேனா? மனதுக்குள் சிரிப்பு கொஞ்சமாய் வந்தது. நேரம் போகப் போக மனது லேசாகியது. பஸ்ஸுக்கு நிற்கும் போது "டேக் இட் ஈஸி ஊர்வசி" பாடல் ஹொட்டலொன்றில் ஒலிபரப்பாக தோழி அர்த்தமாய்ப் பார்த்தாள். சிரித்துக் கொண்டாள் இவள்.

"நேரத்துக்கு பஸ் கிடைச்சுதாம்மா?". அப்பா தான். நேற்றைய சம்பவ ரேகையே பேச்சில், முகத்தில் தெரியவில்லை. மறந்து விட்டார். அப்பா அப்படித்தான்! என்றாலும் இவளுக்குள் கோபம் விட்டுப் போகவில்லை. தோழியின் உபதேசமெல்லாம் மறந்ததாய் மனது மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது. "ம்" என்ற ஒற்றை வரியோடு உள்ளே போக அம்மா வந்தாள். "என்ன? இன்னும் நேற்றைய கோபம் விட்டுப்போகல்லையா?" அம்மா தான் கேட்டாள்.

"கொட்டின பாலை மட்டுமல்ல சொன்ன வார்த்தைகளையும் திரும்பப் பெற முடியாது. அப்படி ஒரு பழமொழி இருக்கு." எதிர்ப் பட்ட தங்கையிடம் சொன்னாள்.

"சரி... சரி இங்க வா.. இதுல என்ன இருக்குன்னுபார்." அம்மா வைத்த பார்சலை முறைத்தவாறே பிரித்தாள்.

ஆச்சரியம் "ஆ" அங்கே ஒரு புதிய ஸாரி. அழகிய மென் ரோஜா நிறத்தில்! வாயைப் பிளந்தவாறே எடுத்தாள். "எனக்குத் தானா?"

"உனக்குத் தான். அப்பாட ஒபிஸ்ல இந்தியா பிஸினஸ் பண்ற ஒருத்தர் இருக்காராம். பெருநாள் கிட்ட வருதில்ல. இம்முறை கொண்டு வந்த உடைகள் எல்லாம் காட்டியிருக்கார். பார்த்த உடனேயே உன் நினைவு அப்பாவுக்கு. கைல இருந்த காசெல்லாம் போட்டு இந்த ஸாரிய மத்தவங்க வாங்க முந்திதான் வாங்கிக்கொண்டு வந்துட்டார். பொருத்தமா கறுப்பு பிளவுஸ் பீஸ் வேற இருக்கு" அம்மா தொடர்ந்தாள். இவள் மௌனமானாள். சந்தோசம் கொப்பளித்தது. இதுவே சினிமாவாக இருந்தால் "ஒ. தாங்யூ டெடி" என மேலும் கீழும் பாய்ந்து கத்தியிருக்கலாம். ஓடி ஆடி குதித்திருக்கலாம். இது நிஜமாயிற்றே. என்ன செய்வதென்றே தோன்றாது பிரமையில் நின்றாள் அவள்! கோபங்கள் காற்றோடு போனதோ?

# சிறுகதை

**"இது என்னுடைய தொழிலில்லை. என்னிடம் இலட்சக் கணக்கில் பணம் கொட்டிக்கிடக்கு. நான் ஏன் இங்கே வந்தேன் என்றால்......"**



# மனைவி போதும்

## மாவனல்லை ரிஸ்கி ஷெரிப்

சிகரட் புகைப்பது, வெற்றிலை போடுவது, தண்ணியடிப்பது போன்ற சின்னச் சின்னத் தப்புக்களையே பாவம்னு நினைக்கிறவன் நான். பெயர் இந்திரன். சுமாரான அழகன். பெயரைப் போலவே அழகான குணநலன்கள் எனக்கு. அப்படியிருக்க... இப்போது கொஞ்ச நாட்களாக என் மனதுக்குள் ஒரு குறை. சஞ்சலம். ஏனென்று கேட்டால்..

உங்களிடம் சொல்ல முடியாத சில அந்தரங்கமான சங்கதிகளை, என் பால்ய அந்தரங்க நண்பன் அசோக்கிடம் சொல்கிறேன்.

ஆபீஸ் கன்ரீனில் வைத்து அசோக்கை சந்தித்தேன்.

அசோக் 'என்னடா'வென்று நிமிர்ந் தான். அவன் கையில் இருந்த தேநீர்க் கோப்பையை வைத்துவிட்டு மென்மையாய்க் கேட்டான்.

"ஏன்டா..முகம் வாடிப் போயிருக்கு?"

நான் மென்மையாக-விரக்தியாகப் புன்னகைத்தேன்.

"ஏன்?" அவனாகவே மீண்டும் கேட்க, மௌனமாயிருந்தேன்.

"ஏன்... வீட்டுல பொண்டாட்டியோடு ஏதாவது சண்டையா?"

"சீச்சீ... அப்படியொன்னுமில்ல... ஆனால்"

"ஆனால்....வாட் யூ மீன்?"

"கல்யாணம் ஆனதில் இருந்து மனசு சரியில்லடா. இப்போ ஆறு மாதமாக நானே மனசுக்குள்ள எரிஞ்சிட்டிருக்கேன்."

அசோக் புரியாமல் மௌனமாகப் பார்த்தான்.

நானும் அவனையே பார்த்து பின் சொன்னேன்.

"என் பெண்டாட்டி மகாலட்சுமி மாதிரியழகு. குணத்திலேயும் சொக்கத் தங்கமடா அவள். ஆனால்... தாம்பத்தியத்துல ஈடுபாடில்லையோன்னு தோணுது."

அசோக் சிறிது நேரம் மௌனமாக யோசித்தான்.

"சரி.. ஒரு வித்தியாசத்துக்காக... வீட்டுல சாப்பாடு ருசிக்கலேன்னா ஹோட்டலிலே சாப்பிடறமாதிரி... நீயும் ஒருநாளைக்கு வெளியில சாப்பிட்டுப் பாரேன்."

நான் நெற்றியில் வியர்த்து...கேட்டேன்.

"வாட்?"

"யூ மீன் ப்ரெஸ்டிடியூசன்..."

இதமான மாலை நேரம்.

நானும் அசோக்கும் ஊருக்கு ஒதுக்குப் புறமாகயிருந்த அந்த விடுதிக்குள் நுழைந் ததும், அங்கிருந்த 'குண்டு' மாமி அசோக்கை வாயெல்லாம் பல்லாக வரவேற்றாள். அசோக்குக்கு ஏற்கனவே நிறைய அனுப வங்கள் இருப்பதை உணர்ந்தேன். சம்பிர தாயங்கள் முடிவடைந்து பெண்ணின் புகைப்படம் பார்த்து, பணத்தையும் கொடுத்து விட்டு.... அசோக் வரவேற்பறையில் காத்திருக்க, குண்டு மாமி காட்டிய அறைக்குள் நான் நுழைந்தேன்.

உடம்பு படபடக்க... காத்திருக்க ஆரம்பித்தேன்.

புதிய அனுபவம்...அதுவும் தப்பான-தவறான அனுபவம்.

மனம் பூராவும் குறுகுறுப்பு ஏற்பட்டது.

யோசிக்க ஆரம்பித்தேன். தனிமையில்...

விபச்சாரிகள் உருவாவதில்லை. சூழ் நிலைகளின் கைதிகளாய் உருவாக்கப்படு கிறார்கள் என்பதே என் எண்ணம். காதல் தோல்வி, காதலன் ஏமாற்றி கைக்குழந்தை யோடு விட்டுச் செல்லல், நோயாளி அம்மாவும் வயதுபோன அப்பாவும், அக்கா வின் கல்யாணப் பிரச்சினை,சீதனப் பிரச்சினை, குடிகாரக் கணவன், வறுமை இப்படியாக விபச்சாரிகள் தமக்கொரு கதை சொல்லியிருப்பதை கதைகளில் படித்துள்ள தோடு மட்டு மல்லாமல் சினிமாக்களிலும் பார்த்துள்ளேன்.

என்றாலும்;

எங்கேயோ பிறந்து, வளர்ந்து, யாரென்றே அறியாததொரு பெண்ணுடன் நான் இன்று உறவு வைத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்க...முகவரியே தெரியாத- அறிமுகமேயில்லாத இப் பெண்ணின் கதை- வாழ்க்கை எப்படி யிருக்கும்?

கேட்டுப்பார்க்க வேண்டும்.

மனதுக்குள் எண்ணிக் கொண்டேன்.

புதிய இடம் மனதில் பயத்தை ஏற்படுத்த,

அந்தக்கணம்....,

சாத்தியிருந்த அறைக்கதவைத் திறந்து கொண்டு வந்தாள் அவள். நான் இதுவரை எதிர்பார்த்திருந்தவள். புகைப்படத்தில் பார்த்த அதே முகம். வயது இருபத்தைந்துக்குள் இருக்கும். உடம்பு முழுவதும் இளமையும், செழுமையும் இருப்பதை உணர்ந்தேன். இவளுக்கு சினிமாவில் மட்டும் வாய்ப்புக் கிடைத்திருந்தால்...நிச்சயமாக சினிமாவில் இன்னொரு குஷ்புவாக, மர்லின் மன்றோவாக சினிமா உலகையே ஒரு கலக்குக் கலக்கியிருப் பாளோ என்னமோ?

விபச்சாரியாக வேண்டுமென்பது இவள் விதி(?)

வந்தவள் அப்படியே கதவைத் தாழிட்டு, நேராக நடந்து வந்து என் உடலை உராய்ந்து கட்டிலில் அமர்ந்துகொள்ள...

என் நரம்பு நாளங்கள் சூடேறின.

இப்பொழுதுதான் குளித்துவிட்டு வந்திருக்கிறாள் போலும்; ஷாம்பு, சோப், பெர்பியூம் எனக் கலவையாய் அவளிடமிருந்து ஒரு சுகந்தமான வாசனை பரவியது.

அவளது அண்மை- நெருக்கம் என் முகத்தில் வியர்வை மழையை உருவாக்க, அவளாகவே என் சேர்ட் பட்டன்களைக் கழற்ற எத்தனிக்க... தடுத்தேன். "ஏன் அவசரம்...கொஞ்சம் நேரத்துக்குப் பேசிட்டு இருக்கலாமே..."

அவள் விசமமாகப் புன்னகைத்தாள்.

"உன் பேர் ன்ன?" என்றேன்.

"அஞ்சு!" என்றாள் பிஞ்சுக் குரலில்.

"முதல் அனுபவமா?" என்றாள்.

"ஆம்!" என்றேன்.

அவள் மீண்டும் புன்னகைத்தாள்.

"ரொம்பவும் அழகாயிருக்கே. தவிர படிச்சவளாகவும் தெரியுறே. அப்போ ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தே?" என்றேன்.

அவள் என் கழுத்தில் தன் கரங்களை மாலையாகப் போட்டுக் கொண்டே சொன்னாள். "இது என்னுடைய தொழிலில்ல. ஏன்னா லட்சக்கணக்கில என்னிடம் பணம் கொட்டிக்கிடக்கு. நான் வறுமைக்கா கவோ, பஞ்சத்துக்காகவோ இங்கே வரல்ல. ஆனால்...."

நான் புரியாமல் பார்த்தேன்.

"நிறையப் பணம், அந்தஸ்து, செல்வாக்கு இருந்தும்... எனக்கு" அவள் சொல்லிக் கொண்டே போக,

நான் திக்கென்று அதிர்ந்தேன்.

என் மூளைக்குள் ஏதோ பொறி தட்டியது.

என் விழிகளுக்குள் என் மனைவி யின் நிழல்ரூபம் தெரிந்தது.

"என்ன சொல்றே நீ ...உன் புருஷன்...."

நான் தடுமாறினேன்.

அவள் விழிகளில் தாபம் தென்பட, ஏக்கமாய், எதிர்பார்ப்பாய் சொன்னாள்.

"என் புருஷனுக்கும் உங்க வயது தான் இருக்கும். முப்பது வயதுக்குள் ளார... நல்ல பணக்கார மனுசன். ஆனால்... அவரோட தாம்பத்யத்துல எனக்கு திருப்தியோ சந்தோஷமோ இல்ல. அதனால"

அவள் சொல்லி முடிப்பதற்குள்...

நான் அவளது கரங்களைத் தட்டி விட்டு சடாரென்று எழுந்து, வாசலை நோக்கிப் போய்... அவள் என் புன்னாலேயே அதிர்ச்சியாய் ஓடிவர... கதவைத் திறந்துகொண்டு வெளி யேறினேன்.

வரவேற்பறையில் இருந்த நண்பன் அதிர்ச்சியாய் பார்த்து...என்னருகே ஓடிவந்து பதறியவனாய்க் கேட்டான்.

"என்னடா பேய் பிடித்தவன் மாதிரி ஓடிவர்றே?"

நான் அவனையும் இழுத்துக் கொண்டு பாதையில் இறங்கி நடக்கத் துவங்க, தெளிந்திருந்தேன். நிரம்பவும் தெளிந்திருந்தேன்.

நண்பனைப் பார்த்துச் சொன்னேன்.

"மனைவியோட சுகம் திருப்தி தரலேன்னு வித்தியாசமான புதுச் சுகத்துக்காக நான் இங்கே வந்தி ருக்கேன். ஆனால்.... என்னுடைய சுகம் திருப்தி தரலேன்னு என் மனைவி நினைத்தால்.

என் மனைவி எனக்கு மட்டும் தான்னு நான் நெனைக்கிறது மாதிரி, நான் என் மனைவிக்கு மட்டும்தான் சொந்தம்னு என் மனைவி நெனைக்க லாமில்லையா? என் மனைவி தப்பாகிப் போய் அசுத்தப்பட்டால் எனக்கு ஜிவுஜிவுன்னு கோபம் வரும்.ஆத்திரம் வரும்.

அப்படியிருக்க நான் மட்டும் அசுத்த மாகிப்போய்.... என் மனைவி முகத்தை எப்படிப் பார்ப்பேன் அசோக்.... சொல்லு.. எனக்கு என் மனைவி வேணும் அசோக் ...எனக்கு என் மனைவி...."

வார்த்தை வராமல் நான் தழுதழுக்க-

அசோக் என்னைப் பெருமிதத் தோடு பார்த்தான்.

பார்த்துக்கொண்டேயிருந்தான்.

---

## சிறுக(வி)தை

**சிலர் இப்படித்தான். என்ன செய்வது...?**

### எம்.சுரேஷ்

# வேட்டியைக் கழற்றித் தோரணம் கட்டி......

அவன்
தானாய் சிரித்தான்.
தாடி வளர்த்தான்.
காற்றில் இருந்து
கவிதை வரிகளைப்பிரித்தெடுத்தான்.
பேனாவால்
முதுகுசொறிந்தான்.
வெள்ளைக் காகிதங்களை
அடையாள அட்டையாக்கினான்.
நிமிர்ந்து நடந்தான்.
"நிமிர்ந்திருந்தால்"
அழகென்று நம்பினான்.
"குனிந்திருந்தாலும்"
மலர்களை வர்ணித்தான்.
தனிமையை விரும்பினான்.
யாரும் விரும்பாத
தெருநாயோடு
பேசிக்கொண்டான்.
அவன் ஒரு
பெரும் கவிஞன்
(நேற்று முன்தினம்
ஒரு கவிதை
பத்திரிகையில் வந்ததால்!)
அவனுக்குக்
கோடிக்கணக்கான
ரசிகர்கள்
(முன்வீட்டு
வாண்டுப் பையன்
கவிதை பற்றி
விசாரித்ததால்!)
அவனை
நிறையப் பெண்கள்
விரும்புகிறார்கள்
(அவனுக்குள்!)
கவிஞனின் கற்பனை
"வாரமலர்களையும்"
துரத்தியது.
போறமலர்களையும்
விரட்டியது!
அவன் எதையுமே
புதுமையாக நோக்கினான்.
உலகம் அவனுக்குக்
கவிதையாகியது.
அழுக்காய் ஓடும்
சாக்கடை,
உடை கிழிந்த
பைத்தியக்காரன்,
மீன் விற்கும் கிழவி,
வெற்றிலை போட்டும்
சிவக்காத வாய்கள்,
வெற்றிலை போடாமலே .
சிவந்த இதழ்கள்...
இன்னும்
பலவற்றை
பலவாறு யோசித்தான்.
தான் ஒரு கவிஞன்
என்பதை
அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டான்.
அவனுக்கு வேலை கிடைக்காதது
கலையுலகம் செய்த
பாக்கியம்!
மாலையானதும்
மங்கிய வெளிச்சத்தில்
அடிக்கடி மயங்கினான்.
சைக்கிளை எடுத்துக் கொண்டு
வீதிவீதியாய்க்



கவிதை தேடினான்...

வழமைபோலவே
குலை தள்ளிய மரங்கள்
இலவசமாய்க்
கனவுகளை விநியோகித்தபடி
வீதியால் நடந்தன.
முனியம்மா சிரித்தாள்
தோழியோ நெளிந்தால்!
நிமிராமல் நிமிர்ந்திருந்த அவள் தோற்றம்
அவனைக் கவியரசனாக்கியது.
அவள் பாதங்களின்
சுவடுகளை எண்ணிக்கொண்டே
பாதித்தூரம் நடந்தான்.

தேவதை நின்றது.
பாதத்தால் படம் கீறி
மீண்டும் நடந்தது-

படம் கண்ட
இடம் கண்டு
பூரித்த அவ்விளைஞன்
அணிந்திருந்த வேட்டியதை
அவசரமாய் அவிழ்த்தெடுத்து
(அவ்விடத்திற்குத்)
தோரணங் கட்டி
கீழே அமர்ந்தான்.
(உள்ளே
காற்சட்டை அணிந்திருந்தான் என்பது
வேறுவிடயம்!)
அமர்ந்தவன்
அவசரமாய் எதையோ
எழுத ஆரம்பித்தான்...

திரும்பிப் பார்த்த தோழி
முனியம்மாவின் இடை சீண்டிக்
காட்டினாள்....
முனியம்மா
அழகாகச் சிரித்தாள்
என்னைப் பற்றிக்
கதையன்றேல் கவிதையேதும்
எழுதுகிறான் போலும்....
நன்றாக எழுதட்டும்.
நீ வா தோழி
என் காதலன் காத்திருப்பார்!!



# உயிர் இனிப் போகலாம்

## இலக்கிய நயம்



### தருவது - ரசிகன்

வண்டுகள் ஒலி எழுப்ப அந்த ஓசை கேட்டுத்தான் மலர்கள் நடனமாடுகின்றனவோ?

என்ன பிரமை இது. தென்றல் தீண்டியதால் அல்லவோ இந்த தேன் மலர்கள் இதழ்களை அசைக்கின்றன.

தென்றல் வந்து தேன் மலர்களை தொடுவதைக் கண்டு பொறுக்காமல்தான் வண்டினம் வசைபாடுகின்றனவோ?

நந்திவர்மனுக்கு அந்த மலர்வனம் கற்பனைச் சிறகுகளை உற்பத்தி செய்து கொடுத்துக் கொண்டிருந்தது.

இயற்கைதான் எத்தனை இனிமை! பூமியின் மேனியில் எத்தனை செழுமை?!

நந்திவர்மனின் சிந்தனை கலைந்தது. கலைந்ததின் காரணம், காதருகில் கேட்ட காலடி ஓசை.

"யாரது?"

மன்னவனுக்கேயுரிய கம்பீரமான குரலில் கேள்வி.

"நான்தான் மன்னவா!"

அமைச்சருக்குரிய பணிவான தோரணை. வயதான குரல்!

"என்ன அமைச்சரே?!

"சாளுக்கிய நாட்டில் இருந்து ஒற்றன் வந்திருக்கிறான்."

"ஓ....என்ன சேதி"

"மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று அதனை அனுமதிக்காது போல இருக்கிறது மன்னவா!"

நந்திவர்மன் நிதானமாகத் திரும்பி அமைச்சரை நோக்கினான் கூரிய விழிகளால்.

நெருப்புத் துண்டங்கள் போல சிவந்து தடித்த உதடுகள். அந்த உதடுகளின் மீது அடர்ந்த காடாக செழித்த மீசை. இரும்புத் தூண்களாய் தெரிந்த கால்கள். அந்த கால்களை ஊன்றி நிற்கும் தோரணையில் துணிச்சல் துல்லியம்.

"போர்....போர்....போர்..

அது தவிர வேறு பேச்சே கிடையாது என்கிறான் சாளுக்கியன்; அப்படித்தானே!"

"முற்றிலும் உண்மை!"

அமைச்சர் ஆமோதித்தார்.

"அவனுக்கு ஏன் இந்த வெறி?"

"அடங்காத ஆசை அதிகாரம்மீது!"

"ஆடி அடங்கும் வாழ்க்கையிது! அதிக ஆசை அவசியம்தானா?"

"அது புரியவில்லையே அவனுக்கு!"

அமைச்சரின் பதிலில் கவலை தொனித்தது.

"எடுத்துச் சொல்ல அங்கே எவருமில்லையா?"

"இருக்கிறார்கள். ஆனால் சொல்ல மாட்டார்கள்!"

"ஏன்?"

"பயம்! புத்திசொன்னால் தம் சிரசுக்கும் கத்தி வருமோ என்று பயம்!"

"பேடிகள்! பேடிகள்!"

"அல்ல மன்னவா, அவர்கள் பிழைக்கத் தெரிந்தவர்கள்."

நந்திவர்மன் அமைச்சர் சொன்னது கேட்டு நகைத்தான். இடியென முழங்கும் குரலில்.

"அப்படியானால் நாம்தான் புத்தி சொல்ல வேண்டும்! புறப்படட்டும் நம் புயல் படைகள்! புறமுதுகிட்டு ஓடட்டும் அறம் மறந்த பகைவர்கள்! முழங்கட்டும் முரசு! குலுங்கட்டும் வீரர் காலடி பட்டு இந்த பூமி!"

□□

போரிலே வெற்றி நந்திவர்மன் படைகளுக்கு!

எங்கும் இரத்தம். போர்க்களம் மீது பேய்களின் ஆட்டம்!

தளபதி சேரலாதன் வந்து மன்னவன் முன்னால் தலைவணங்கி நிமிர்ந்து;

"ஒரு முக்கிய செய்தி!"

சொல்லுக தளபதி!"

சிறைபட்டவர்களில் ஒரு பெண்ணும் அடக்கம்"

நந்திவர்மன் இருக்கை விட்டு துள்ளி எழுந்தான். உதடுகள் துடிக்க, விழிகளில் கோபம் விசுவரூபமாகியது.

"பெண்களையும் பிஞ்சு மன குழந்தைகளையும் பிடித்துவரக்கூடாது என்பது கண்டிப்பான விதி! மறந்துவிட்டதோ உமது மதி?"

"மன்னிக்க வேண்டும்."

"தவறுகளுக்கு தண்டனை மட்டுமே பரிகாரம். மன்னிப்பு என்பது மறுபடியும் தவறு செய்ய வசதியான வழி."

"இல்லை மன்னவா, நான் மன்னிப்பு கேட்டது குற்றம் என்பதற்காகவல்ல; தங்கள் பேச்சில் குறுக்கிடுவதற்காக! கைது செய்யப்பட்டவள் பெண் அல்ல, பேய்!"

"பெண் என்றால் பேயும் இரங்கும் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். பெண்ணே பேயாகவும் இருக்கலாம் என்று நீர் சொல்லித்தான் கேள்விப்பட்டிருக்கிறேன்."

நந்திவர்மன் பேச்சில் கேலி குலுங்கியது. ஆனாலும் பணிவு என்ற வேலி தாண்டாமல் தளபதி சொன்னான்;

"மன்னவா, நம் வீரர்களில் அறுபதுபேர் அவள் வாளுக்குத் தீனியாகிவிட்டார்கள்."

"கட்டுக்கதையல்லவே!"

"இல்லை! வெட்டுண்டு வீழ்ந்த நம்மவரின் சோகக் கதை."

"சாட்சி?"

"தங்கள் தளபதியான என் இரு விழிகளும்!"

நந்திவர்மன் விழிகளில் கோபம் வெளியேறி ஆச்சரியம் வரவு கண்டது.

"அழைத்துவா அவளை!"

அழைத்து வரப்பட்டாள். நந்திவர்மன் செதுக்கிய சிலையாய் அசைவற்றுப் போய் நின்றான்.

காதுவரை விரிந்த கண்கள். வில் வேண்டாம், விழிப்புருவமே போதும்! வாள் வேண்டாம், விழிகள் இருக்க அது எதற்கு? பஞ்சணை தேவையில்லை தலைசாய, பட்டுப்போல மூங்கில் தோள் இருக்கிறதல்லவா அது போதும்! வெண்சங்கு தேடவேண்டாம்; பெண் இவளின் கழுத்திருக்க! பாயும் முயல் தேடி கானகம் ஏன் செல்லவேண்டும், காரிகை இவள் நெஞ்சத்தில் அவை குடியிருக்கும் போது! ஒரு வித்தியாசம், வேடனைக் கண்டால் கானக முயல்கள் ஓடிவிடும்; காரிகை இவள் முயல்கள் வீரனைக் கண்டாலும் முறைப்பது போலவே இருக்கும்! போருக்கு ஏற்ப வரிந்து கட்டப்பட்ட சேலை கால்களின் தசை திரட்சியை விளக்கிக் கொண்டிருக்கிறது விழிகளுக்கு!

நந்திவர்மன் சிந்தனை அவள் மீது மொய்த்துக் கிடந்தபோது தளபதியின் செருமல் மீட்டெடுத்தது.

சுய நினைவை தொலைத்து மீண்டும் அதைத் தேடி எடுத்துக்கொண்டு;

"யார் நீ?"

வலிந்து முயன்று அதிகாரத் தோரணையில் கேட்டான். அவள் அசரவில்லை. தேன் இதழ்களில் தெவிட்டாத புன்னகை.

"இதுவரையும் உச்சிமுதல் பாதம் வரை விழிகளால் மேய்ந்தும் பெண் என்று புரியவில்லையோ?"

கின்கிணிக் குரல்.

கண்மணி என்று அழைக்கலாம் போல் இருந்தது.

"இளம் கன்று நீ. அதுதான் பயம் தெரியவில்லை! உன் பெயர் என்ன?"



"தாங்கள் ஒன்றும் முதியவரல்லவே! என் பெயர் கண்மணி!"

"ஆ..."

"ஏன் அப்படி பெயர் வைக்கக் கூடாதா?"

"கூடும். கூடும். பஞ்சணைப் பாவை நீ வெஞ்சமர் களம் வந்தது ஏனோ?"

"பெண் அதுவும் இளம் பெண் என்றால் அந்தப்புரத்தில் வைத்து கொஞ்சுவதற்குரியவள் என்பதுதான் தங்கள் எண்ணமோ? அநீதி கொடும் நஞ்சென நினைத்து நெஞ்சில் நெருப்பு வளர்த்து வெஞ்சமர் களத்தில் புயலாய் மாறவும் முடியும் பெண்ணால்!"

"முன்நோக்கிய சிந்தனை."

"காலம் மாறும் போது கதைக்குதவாக் கருத்துக்களும் உருத்தெரியாமல் போய்விடும் மன்னவா."

"நல்லது, உனக்கு என்ன தேவை?"

அவள் உரத்துச் சிரித்தாள்.

"கேட்டால் தருவீர்களா?"

"நிச்சயமாக!"

"கோரிக்கை விட்டபின் மறுத்தால்?"

"வாக்குத் தவறுவது என் வாழ்க்கையில் கிடையாது கேள்!"

"எனக்கு வேண்டியது தாங்கள்!"

"எ.....என்ன.?"

நந்திவர்மன் கூவியே விட்டான். தளபதி இடையில் உள்ள வாளில் கரம் வைத்தான்.

"பெண்ணே உன் கோரிக்கை விசித்திரமாக இருக்கிறது."

"அன்பு ஆச்சரியத்துக்குரியதல்ல. விருப்பம் விசித்திரத்துக்குரியதல்ல."

"நான் உன் எதிரி!"

இல்லை காலம் காலமாய் நம் இரு நாடுகளுக்கும் இடையே தொடரும் பகை இந்த திருமணத்தோடு தகரட்டும்."

"அப்படியானால் நீ?"

"சாளுக்கிய இளவரசி!"

நந்திவர்மன் திகைத்தான். எனினும் அவளைக் கண்டபோதே காதலிக்கத் தொடங்கியிருந்தான்.

□□

மணமுடித்த பின்னர் மஞ்சத்துமீதில் அவளை தன் மார்பில் மாலையாகச் சூடிக்கொண்டே சொன்னான் மன்னன் நந்திவர்மன்;

"கண்மணி இனி என் உயிர் என்னிடம் தங்காது."

தேனக மேனியாள் பதறிப்போனாள்.

"என்ன வார்த்தை இது. விருப்பின்றித்தான் என் விரல் பற்றினீர்களோ?"

"ஆரவாரிக்கும் கடல் கரை தாண்டி வருவதைப் போல, அளவற்ற மோகம் மனதுக்குள் திரையிட்டு மறைக்க முடியாதவாறு வெளிப்பட்டு வதைக்கிறது. வளையணிந்த புன்னகையாளே! உன் அருள் கேட்டு இரக்கின்றேன் அந்த வதை தீர்க்க! அருள்தர நீ ஆயத்தம் என்று அறியும்போது அகமெங்கும் பெருங்கடலாய் உவகையடி! இனி என் உயிர் உன்னோடு! வெறும் உடல் மட்டும் என்னோடு! அதைத்தான் சொன்னேன், ஏன்தான் நீ திகைத்தாயோ?"

அடுத்த நொடியில் நந்திவர்மன் உதடுகள் ஆக்கிரமிக்கப்பட்டன. ஆக்கிரமிப்பிலும் உண்டு ஆனந்தம், ஏனெனில் ஆரம்பமானது வெஞ்சமர் அல்ல பஞ்சணைப் போர்!

'புறப்பொருள் வெண்பாமாலை' என்ற இலக்கிய நூலில் புலவர் ஐயனாரிதனார் என்னும் புலவர் இனிய காதலியின் அருள் பெற்றபின் 'உயிர்விடுவேன்' என்று நினைக்கும் காதலனை காட்டுகிறார்.

**"உரவொலி முந்நீர் உலாய்நிமிர்ந் தன்ன**
**கரவரு காமம் கனற்ற-இரவெதிர**
**முள்ளெயி றிலங்கு முகிழ் நகை**
**வெள்வளை நல்காள் விடுமென் உயிரே"**

*பாடல்-293.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல-92

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | | 2 | ■ | 3 | |
| 4 | | | | | | ■ |
| ■ | 5 | | | | ■ | 6 |
| 7 | | ■ | | ■ | 8 | |
| | ■ | 9 | ■ | 10 | | |
| 11 | | | | | | ■ |
| | ■ | | ■ | 12 | | |

**இடமிருந்து வலம்**

01. இதைத் தங்கத்தாலும் ஆக்கலாம்.
03. ஏழு சேர்ந்தால் ஒரு வாரம்.
04. மாமிசமலைகள் மோதும் நேரம்.
05. ஆரோக்கியம் கெட்டால் இது உடலுக்கு ஏற்படும்.
10. தவறான கற்பனை.
11. அந்தரங்கத்திற்கு எதிர்ச்சொல்.
12. உடலுக்கு இங்கே நிரந்தர ஓய்வு.

**மேலிருந்து கீழ்**

01. வாகனங்கள் இல்லையென்றால் இது தான் கதி.
02. இவரும் ஒரு அரசராக இருந்தவர்.
06. இவ்வாறு இருப்பது கொடுமை.
07. சுறுசுறுப்பின் எதிரி.
08. இந்துமதக் கடவுள்.
09. மனைவிக்கு இப்படியும் ஒரு பெயர்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 18.03.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-92**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

*சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.*

### குறுக்கெழுத்துப் போட்டி இல-90ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 வ | ல் | ■ | 3 ப | க | டி |
| டு | ரி | ■ | 4 து | க | ள் | ■ |
| ப் | ■ | 5 பா | லா | டை | ■ | 6 தூ |
| 7 பு | 8 ரு | வ | ம் | ■ | 9 கா | ய் |
| ■ | க் | ல | ■ | 10 கொ | டு | மை |
| 11 ச | ம | ர் | ■ | க் | ■ | ■ |
| கா | ணி | ■ | 12 வெ | கு | ம | தி |

குறுக்கெழுத்துப் போட்டி இல.89இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. பி.ஜெயசீலன் மொரட்டுவ.
2. எம்.சஜீத் மதவாச்சி
3. திருமதி.திலகம் இராமச்சந்திரன் டிக்கோயா.
4. செல்வி.எவ்.நஸீரா பானு வெள்ளவத்தை.
5. கே.துணைவன் வவுனியா.
6. எம்.அப்துல்வபா முறுத்தலாவ.
7. எஸ்.பூபதி மஸ்கெலியா.
8. ஏ.எல்.ஹஸன் மாத்தளை.
9. என்.சூரியகுமார் பொகவந்தலாவை.
10. கே.ஹாஞ்சனா பெரியபோரதீவு.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## ஸ்போர்ட்ஸ்

# கால்பந்தாட்ட வீரருக்கு மவுசு



ரொமாரியோ

கடந்த வருடம் அமெரிக்காவில் நடந்து முடிந்த உலகக் கோப்பைக் கால்பந்து இறுதிப் போட்டியில் இத்தாலியைத் தோற்கடித்து நான்காவது முறையாக உலகக் கோப்பையை பிரேசில் வெல்வதற்கு காரணமாக இருந்தவர் ரொமாரியோ.

இவரது மின்னல் வேக ஆட்டமும், வேகமான ஓட்டமும் கால்பந்து இரசிகர்களைக் கவர்ந்தது. பிரான்ஸிலிருந்து வெளிவரும் 'எல் எக்கியூப்பே' என்ற பத்திரிகை இவரைக் கடந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரராகத் தேர்வு செய்துள்ளது.

இப்போது இவர் ஓர் ஒப்பந்தத்தின் பேரில் ஸ்பெயின் நாட்டில் உள்ள பிரபலமான பார்சிலோனா கிளப்பிற்காக விளையாடி வருகிறார். 1996ஆம் ஆண்டு ஜூலை மாதம்வரை பார்சிலோனா கிளப்பிற்காக விளையாட ஒப்பந்தமாகியிருக்கிறார்.

இந்த ஒப்பந்த காலம் முடிந்ததும் இத்தாலியில் உள்ள அணியொன்று தனது அணிக்காக விளையாடும்படி கேட்டிருக்கிறது. ஆனாலும் மீண்டும் பார்சிலோனா கிளப்பிலேயே விளையாட வைக்க முயற்சி செய்யவேண்டுமென பார்சிலோனாவில் உள்ள கால்பந்து இரசிகர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஆனால் பார்சிலோனா கிளப்பிலிருந்து வெளியேறியதும் தனது சொந்த நாடான பிரேசிலில் உள்ள பிளேமிங்கோ அணிக்காக விளையாடப் போகிறார் ரொமாரியோ.

இது இவ்வாறிருக்க, பார்சிலோனா அணிக்கு 20 கோடி ரூபாயும், ரொமாரியோவுக்கு சம்பளமாக 7 1/2 கோடி ரூபாயும் கொடுத்து ரொமாரியோவை தனக்காக விளையாட பிரேசிலில் உள்ள கால்பந்து அணியொன்று, பிளேமிங்கோ அணியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

# மகாபாரதம்

அங்கம் 71

இவ்வாரம் (12.02.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:

பெற்றெடுத்த தாய்மீது பேரன்பு புனுகல் போல்
பிறந்த நம் தாய் நாடும் போற்றுதற்கு ஏற்றதுவே!
தாய் நாட்டின்மீது தான் பெற்ற பிள்ளைகளும்
தூய்மை அன்பு செலுத்திடவே தான்புகட்ட வேண்டும்!
மகாபாரதம் என்னும் மாபெரிய காவியத்தை
மாண்புடனே நான் கூற முற்பட்ட காரணமே
தாய் நாட்டுப் பற்றென்னும் தர்மத்தை உணர்த்திடவே!
பாரிலுள்ள நாடுகளில் பாரதத்திரு நாடே
பண்புக்கு இலக்கணமாய் பாதை வகுத்ததென்பார்;
அறம் வளர்த்த நாட்டினிலே அதர்மம் தலையெடுத்தால்
மறவழிதான் ஒரு மார்க்கம் என்பதனைக் காட்டுதற்கு
குருச்சேத்திரப் போர்முனையே குறியாயமைகிறது!

-காட்சி தொடக்கம்-

குருச்சேத்திரத்தில் பாண்டவர்கள் மற்றும் கவுரவர்களின் படைகள் முகாமிட்டுள்ளன. மன்னர்களின் கொடிகள் அவரவர்களுக்குரிய கூடாரங்களின் முகட்டில் பறந்த வண்ண முள்ளன.

அர்ச்சுனன் தன்னுடைய பாசறையில் சிந்தனையில் ஆழ்ந்தவனாய் படுத்திருக்கிறான்.

*திரௌபதி துகிலுரியப்படல், அரக்கு மாளிகை அசம்பாவிதம் போன்ற கவுரவர்கள் இழைத்த தீங்குகள், நாடு பிரிக்கப்படுதல் போன்ற சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நிழலாடுகின்றன.*

இதே வேளை கிருஷ்ணன் அங்கு வருகிறார். இதனைக்கூட அர்ச்சுனனால் உணரமுடியவில்லை. கிருஷ்ணன் சிரித்த வண்ணம்–

**கிருஷ்:** பார்த்தா...!

துணுக்குற்று எழுந்த அர்ச்சுனன்–

**அர்ச்:** வாருங்கள் கேசவரே! அமருங்கள்...

**கிருஷ்:** உன் சிந்தனை எதனைச் சுற்றிச் சுழல்கிறதோ?

**அர்ச்:** என் பழைய எண்ணங்கள் என்னும் விறகினை சினம் எனும் தீயிலிட்டு எரிக்கின்றேன் கண்ணா! மாதவா! போரைப் பார்க்கிலும் போருக்காகக் காத்திருத்தல் பெருங் குழப்பத்தைத் தருகிறது. இதோ போர்க்களம்! கோபத் தீயினை மேலும் எரியத் தூண்டுகிறேன்.

**கிருஷ்:** பார்த்தா! உனது பழைய நினைவுகளால் கோபத்தீயைத் தூண்டுவதில் மட்டும் பயனில்லை!

**அர்ச்:** வேறு எவ்வாறு நான் இத்தீயினை மூட்ட முடியும்?

**கிருஷ்:** தீ எரிய விறகுடன் நெய்யும் வேண்டுமல்லவா? பவித்ரமான வேள்வித் தீ எரிவதற்கு துர்காதேவியின் நல்லாசியையும் வேண்டிப் பெற்றுக்கொள்!

துர்கையின் ஆசியும் ஒரு ஆயுதமாகும்! அவளாசியின்றி ஏனைய ஆயுதங்களாலும் போதிய பலன் கிடைக்காது. வானவெளியின் கீழ் குளிர்ந்த சூழலில் நின்று அவளைப் பிரார்த்தித்து அவள் அனுக்கிரகத்தினைப் பெறுவாயாக!

**அர்ச்:** அவள் வருவாளா? வாழ்த்தினைத் தருவாளா?

**கிருஷ்:** உன் வாயினால் மட்டும் கூவி அழைத்தால் அவள் வரப்போவதில்லை! ஆத்மார்த்தமாக அவளை அழைத்தால் அவள் வருவாள். உன்னுடன் நான் இருப்பதால் அவள் அருள் உனக்கு நிச்சயம் கிட்டும் பார்த்தா!

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரம்–முழுமதி நிலவில் எங்கும் அமைதி சூழ்ந்திருக்கிறது. தொலைவில் ஒரு போர் வீரன் பாடும் பாட்டொலி மட்டும் மென்மையாகக் கேட்கிறது.

பாடல்:

என்னிதயம் கவர்ந்த எழில் ராணியே!
தான் பாடும் பாட்டொலி கேட்கிறதா?

என் னிதயத்தை மூடிய வெண் துகில்பட்டு
விண் தவழ் மதிமுகம் மூடிடும் முகிலோ?

நாளை நடைபெறும் போரினிலித் துகில்
மாலை மறுகுமுன் செந்நிறம் பூசிடும்
வேளை நான் வீசிடும் வாளின் கூர்மையால்
காளையின் குருதியும் தோய்ந்திடலாகுமோ....?

எதிரணி வீரனும் எய்திடும் பாணமும்
என திள மார்பினைத் துளைத்திடத் துணியலாம்!
விதி வழி யெதுவோ அது நிறை வேறியே
துகில் சிவப்பேறி நின் அருகினை யடைந்திடும்!

அர்ச்சுனன் துர்கையை நோக்கி தபசிருக்கிறான். அப்போது துர்காதேவி தோன்றுகிறாள்.

**துர்கா:** குந்தியின் மைந்தனே... அர்ச்சுனா! என்னை ஏன் அழைத்தாய்?

அர்ச்சுனன் கண் விழித்து துர்கையின் பாதங்களில் வீழ்கிறான்.

**அர்ச்:** தாயே! குருச்சேத்திரப் போர் முனைக்கு வந்துவிட்டோம். தர்மம் நிலைக்க ஒரு கடமையாக இப்போரினை மேற்கொண்டுள்ளோம்! எங்கள் முடிவு சரியானதெனத் தங்களுக்குப் பட்டால் எங்களுக்கு வெற்றி கிட்ட வாழ்த்தக் கோருகிறேன்!

**துர்கா:** அர்ச்சுனா! என்னிடமிருந்து அத்தகைய வாழ்த்துக்கு அவசியமே இல்லையே! தர்மம் உள்ள பக்கம் கிருஷ்ணனும் இருப்பான். அவன் உங்கள் பக்கம் தானே இருக்கிறான். அப்போ உங்களுக்குத்தானே வெற்றி கிட்டும்!

துர்கை தன் வலது கரத்தினை உயர்த்தி வாழ்த்தி மறைகிறாள்.

**கிருஷ்:** பார்த்தா! துர்கையின் வாழ்த்தின் பொருளினை உணர்ந்திருப்பாய்! போர்க்களம் உனக்கொரு பரிசோதனைக் களமாகும். உன் மனதை அலைய விடாமல் பார்த்துக்கொள்!

-காட்சி மாற்றம்-

காந்தாரியின் அந்தப்புரத்திலுள்ள ஆலயம். காந்தாரி சிவனை வணங்குகிறாள்.

**காந்தா:** ஏ சதாசிவா! தன்னுடைய மக்களுக்கு வெற்றி கிட்டவேண்டும் என்று வாழ்த்த முடியாத இக்கட்டான நிலையில் நானுள்ளேன்! எத்தகைய அருள் எனக்கு வேண்டும் என்று கேட்டுப்பெற முடியாத நிலையிலுள்ளேன். இரு தலைக் கொள்ளி எறும்பு போன்ற நிலையிலுள்ள எனக்கு நீதான் உரிய வழியினைக்காட்ட வேண்டும். குந்தியிடம் துக்கம் விசாரிக்க நான் போகவோ அல்லது ,என்னிடம் குந்தி துக்கம் விசாரிக்க வரவோ கூடிய நிலை உருவாகாமல் நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும். என் மகன் துரியோதனனுக்கு வெற்றியினை அருள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கவோ, பாண்டவருக்கு வெற்றி கிடைக்கவேண்டும் என்று கோரவோ முடியாத துர்ப்பாக்கியவதியாகிய எனக்கு இறைவா! நீயே உரிய வழியினைக் காட்டவேண்டும்!

-காட்சி மாற்றம்-

விதுரரின் இல்லம். குந்தியைக் காண தன் மனைவியுடன் விதுரர் வருகிறார்.

**விதுர:** அண்ணி! வெறுமனே இவ்வாறு ஏன் உட்கார்ந்து விட்டீர்கள்? தங்கள் புதல்வர்களின் வெற்றிக்காக பிரார்த்திக்க வேண்டாமா?

**குந்தி:** எனது மக்களின் வெற்றி என்றால் அதன் அர்த்தம் என்ன? காந்தாரியின் புதல்வர்கள் இறக்கவேண்டும் என்பது தானே?

**விதுர:** தர்மத்தை நிலைநாட்ட நடைபெறும் யுத்தத்தில் யாருடைய மக்கள் என்று பார்ப்பதில்லை. மனித சமுதாயமே பிரம்மனின் படைப்பே; இருந்தும் அவர்களே அவர்களுக்குள் மோதிக் கொள்கிறார்கள்- இரத்தம் சிந்துகிறார்கள், போரில் வெற்றியும் தோல்வியும் சகஜம். பாண்டவர் தர்ம நோக்கமுடையவர் என்பதனால் அவர்களுடைய வெற்றிக்காக வேண்டிக்கொள்ளுங்கள்- அவர்கள் உங்கள் புதல்வர்கள் என்பதற்காக பிரார்த்திக்கவேண்டாம்.



தர்மத்துக்கும் இருளுக்குமிடையில் நடைபெறும் இந்தப் போரில் யாவரும் ஏதாவதொரு அணியில் சேர்ந்தேயாக வேண்டும். உயிரற்று விழும் உடல் எல்லாமே வெறும் பிரேதங்கள்தான். ஆனால் அந்த உடலுக்குரியவரின் வாழ்நாளில் அவர் கடைப்பிடித்த தர்ம நெறிக் கேற்ப அந்த உயிரற்ற சடலமும் மதிப்புப் பெறுகிறது.

**குந்தி:** விதுரரே! தாங்கள் கூறுவதைப் புரிந்துகொள்கிறேன். இருப்பினும் துரியோதனன் தோல்வியைத் தழுவ வேண்டும் என்று என்னால் சாபமிட முடியாதே!

**விதுர:** அவ்வாறானால் அஸ்தினாபுரியின் வெற்றிக்காகவாவது வாழ்த்துங்கள்.

-காட்சி மாற்றம்-

குருச்சேத்திரத்திலுள்ள பெரிய கூடாரம். கிருஷ்ணர், யுதிஷ்டிரர், பீஷ்மர், அர்ச்சுனன், துருபதன், திஷ்டத்துய்மன், சிகண்டி மற்றும் சத்தியகி முதலானோர் உட்செல்கின்றனர். அங்கு பீஷ்மரின் தலைமையில் துரியோதனன், துச்சாதனன், துரோணாச்சாரியார் மற்றும் கவுரவ படைத் தளபதிகள் வீற்றிருக்கின்றனர். கிருஷ்ணரையும் ஏனையோரையும் கண்டதும் பீஷ்மரும் ஏனையோரும் மரியாதை செலுத்துமுகமாக எழுகின்றனர்.

**கிருஷ்:** பிதாமகரே! பாரத வம்சத்தின் முதல்வரான தாங்களேன் எழுந்திருக்க வேண்டும்?

**பீஷ்ம:** போர்க்களத்தில் எவரும் பெரியவருமல்ல சிறியவருமல்ல தேவகி நந்தனா...!

**துரி:** வெறுமனே தங்கள் வீரத்தையிட்டு தம்பட்டமடிப்பவர்கள் பெரியவர்களாக முடியாது. தங்கள் ஆயுத பலத்துடன் தோள் வலிமை பெற்றவர்களே உண்மையான பெரியவர்களாவர்.

**கிருஷ்:** தோள்வலி, ஆயுத பலம் பற்றி என்னிடம் பேசிப்பலனில்லை காந்தாரி மைந்தனே! நான் அர்ச்சுனனின் தேர் சாரதி மட்டுமே!

**பீஷ்ம:** அப்போ தாங்களும் ஆயுதம் ஏந்த வேண்டும் என்று நிர்ப்பந்திக்கட்டுமா?

கிருஷ்ணர் சிரிக்கிறார்– யுதிஷ்டிரர், பீமன், அர்ச்சுனன் ஆகியோர் பீஷ்மரின் பாதங்களைத் தொட்டு வணங்குகின்றனர். அவர்களை பீஷ்மர் அணைக்கிறார்– திஷ்டத்துய்மனையும் பார்க்கிறார்.

**பீஷ்ம:** ஓ...பாண்டவர் படைகளின் தளபதியே, கவுரவ சேனைத் தளபதியின் பாசறைக்கு தங்களை அழைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். எல்லோரும் அமருங்கள்.

**சிகண்டி:** கங்கா புத்திரர் அவர்களே! நானும் அமரலாமா?

**பீஷ்ம:** உம்மை அவமதிக்க விரும்பவில்லை! இருப்பினும் இது ஆண்டுகளுக்கான கூட்டமாயிற்றே இளவரசர் சிகண்டி!

**சிகண்:** நான் அதை அறிவேன்! தங்களைப் போன்ற ஒரு பெரியவரைத் தரிசிக்கவே நான் இங்கு வந்தேன்!

யாவரும் அமர்ந்ததும் துருபத மன்னரும் துரோணாச்சாரியாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளுகின்றனர்.

**துரோ:** நண்பரே நலமா?

**துருப:** நான் நலமே! தாங்கள்...?

**துரோ:** அந்த மகாதேவனின் அருளால் நலமாகவுள்ளேன்.

**திஷ்ட:** என் தந்தைக்கு அந்த மகாதேவனின் அருளில்லை என்கிறீர்களா ஆச்சாரியார் அவர்களே!

**பீஷ்ம:** தனிப்பட்ட பிரச்சனைகளைப்பற்றி பொழுதை வீணாக்காமல் எம்மனை வருக்கும் பொதுவான போர்முனை பற்றி-போரின் சட்ட விதிகளையிட்டு முடிவெடுப்பது நல்லதெனப்படுகிறது.

**கிருஷ்:** கவுரவ முதல்வரே! கவுரவர்கள் எவ்வாறு தங்கள் குழந்தைகளோ அதே போன்றே பாண்டவர்களும் தங்கள் குழந்தைகள்தான். தாங்கள் எத்தகைய விதி முறைகளை வகுக்கிறீர்களோ அவற்றுக்கமைய பாண்டவர் படையினரும் நடந்து கொள்வார்கள்.

**பீஷ்ம:** அத்தகைய தர்ம சங்கடமான நிலமை எனக்கு வேண்டாம் வாசுதேவா! எனது பாசறையிலேயே என்னை-பாண்டவர்களின் சகாயன் என்று கூறும் சிலர் உள்ளனர். ஆனால் என்னை ஒத்த முதியவர்களும் தாங்களும் நான் அஸ்தினாபுரத்துக்குக் கட்டுப்பட்டவன் என்பதை நன்கு உணர்வார்கள்.

**கிருஷ்:** குருவம்சப் பெரியவர் தாங்கள்! சுத்த வீரர்! கவுரவப் படையின் தளபதி- எந்த வகையிலும் மதிப்பும் சிறப்பும் வாய்ந்த தங்கள் கருத்துக்களை ஏற்க நாங்கள் சித்தமாயுள்ளோம்! ஆகவே போருக்கான விதி முறைகளை அமைக்கும் பொறுப்பினைத் தாங்களே ஏற்க வேண்டும்!

**பீஷ்ம:** வாசுதேவா! போரில் மிக முக்கியமான விதி முறை ஒன்றுண்டு. அதுதான் தர்ம நியாயப்படி போர்புரிய வேண்டும்.

**சிகண்:** கங்கையின் மைந்தரே! அந்த தர்ம நியாயம்என்பது எதுவென அறியலாமோ?

**பீஷ்ம:** சிகண்டி! போர்முறையிலுள்ள பல விதிமுறைகளில் பல உண்டு. அதில் ஒன்று- பூரணமான மனிதனல்லாத ஒருவன்மீது ஆயுதம் பிரயோகிக்கலாகாது. நிராயுதபாணியையும் தாக்குதலாகாது. புற முதுகிட்டு ஓடும் வீரனையும் காயம் பட்டு பின் வாங்குபவனையும் தாக்கக்கூடாது. போர் வீரருடன் வரும்- போர் வீரனல்லாதவன், காயப்பட்டவனுக்கு உதவுபவன். போன்றாருக்கும் எதிராக ஆயுதம் பிரயோகிக்கலாகாது. கால் நடையாக வருபவன் அவனைப் போல் கால் நடையில் வருபவனுடன் தான் போரிடவேண்டும். தேரிலோ குதிரை அல்லது யானை மீதிலோ அமர்ந்து வரும் வீரன் தரையில் நிற்பவனுடன் போரிடலாகாது.. பலவீரர்கள் சேர்ந்து ஒரு வீரனைத் தாக்குதல் தடுக்கப்பட்டுள்ளது. காலை சூரியோதயத்துடன் தொடங்கும் போர் மாலை கதிரவன் மறையும்போது நிறுத்தப்பட வேண்டும். இரவு வேளைகளில் எதிரெதிர்ப் படைகள் ஒருவருடன் மற்றவர் நட்புறவு கொள்ளத் தடை இருக்கலாகாது. சரணாகதி அடையும் எதிரணிப் படை வீரரை உரிய மரியாதையுடன் கவனிக்கவேண்டும். இவைதான் பிரதானமான விதிகள். பாண்டவர் படைத் தளபதி இவ் விதிகளைக் கூட்டவோ மாற்றவோ உரிமை உண்டு.

**திஷ்ட:** கங்கையின் மைந்தரே! நான் வெறும் போர் வீரன் மட்டுமே! மற்றொரு போர் வீரனின் தலையினைச் சீவவே எனக்குத் தெரியும்! முதிர்ந்த அனுபவசாலியான தங்களைப்போன்ற வீரரின் வார்த்தைகளுக்கு மறு வார்த்தைகளைக் கூறும் ஆற்றல் எனக்கில்லை. தங்களை தாழ்மையுடன் வணங்கி தங்கள் விதிகளை ஏற்றுக்கொள்கிறேன். சகல வீரர்களும் இவற்றுக்கு மதிப்பளிப்பார்களென நம்புகிறேன்.

**பீஷ்ம:** உங்கள் அணி வீரர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**திஷ்ட:** அவர்கள் முதலில் விதிகளை மீற மாட்டார்கள். ஆனால் தங்கள் அணியினர் எவரும் மீறினால் எமது வீரர்களைக் கட்டுப்படுத்துவது பற்றி என்னால் கூற முடியாது!

-காட்சி மாற்றம்-

யுதிஷ்டிரரின் பாசறை–

**யுதிஷ்:** அர்ச்சுனா! பிதாமகர் வகுக்கவிருக்கும் போர் வியூகம் பற்றித்தான் பலமாக யோசிக்க வேண்டி இருக்கிறது. அவரால் வகுக்கப்படும் அணியினைச் சீர்குலைக்க எவரால் முடியும்?

**அர்ச்:** எமது படைகள் தர்ம வியூகமாகவே அமையும். தர்ம வியூகத்தை சுலபமாக எவராலும் உடைத்துவிட முடியாது. அண்ணா! நான் நினைத்தால் என்னிடமுள்ள தெய்வீக சக்தி வாய்ந்த ஆயுதங்களை ஏவி அவர்களுடைய படைகளை சில நொடிகளில் நிர்மூலமாக்கிவிட முடியும். ஆனால் நான் அவ்வாறு தெய்வீக அஸ்திரங்களைப் பயன்படுத்த மாட்டேன். 'அர்ச்சுனன் தெய்வீக அஸ்திரங்களைப் பயன்படுத்தியே போரில் வென்றான்' என்று நாளைய வரலாறு கூறி கறை படுத்த இடம் தரமாட்டேன். தங்கள் ஈட்டி, பீமண்ணனின் கதாயுதம், நகுல, சகாதேவனின் வாள் பலத்துடன் எனது வில் அம்பின் துணையுடனே வெற்றிபெற வேண்டும் நாம். வாசுதேவனின் தேர் வழி நடத்தலும் எமக்கு வெற்றியைத் தேடித்தந்தன என்று மக்கள் நினைவுகூர வேண்டும்.

**யுதிஷ்:** ஆமாம்...ஆமாம்...அது சரி! வாசுதேவ கிருஷ்ணன் எங்கே? காணவில்லையே! பிதாமகருடைய பாசறையிலிருந்து திரும்பியபின் அவரைக் காணவில்லை!

**அர்ச்:** அவர் எங்கிருந்தபோதும் எம் நலத்தை எண்ணியவாறே இருப்பார் அண்ணா!

-காட்சி மாற்றம்-

கர்ணனின் விடுதி!

**கிருஷ்:** போருக்கான விதிமுறைகளை வகுக்கும் பொருட்டு பிதாமகரின் பாசறைக்கு வந்தோம். நட்புடன் பழகுவதற்கான கடைசி இரவு இது! ஆகவே, எனக்கு விருப்பமானவர்களைக் கண்டு கலந்துறவாடும் நோக்குடன் வந்தேன்!

**கர்ண:** அந்த வரிசையில் நானும்ஒருவனோ?

**கிருஷ்:** சந்தேகமில்லாமல்! அவ்வாறில்லையானால் நான் ஏன் இங்கு வரவேண்டும்?

**கர்ண:** தயவு செய்து அமருங்கள்!

**கிருஷ்:** குந்தியின் மூத்த மகன் என்னை இருக்கும்படி கூறவில்லையே என்று கவலைப்பட்டேன்!

**கர்ண:** நான் என்ன செய்யவேண்டும் கண்ணா?

**கிருஷ்:** கங்கையின் மைந்தருடைய போர்முறைகளை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை! அவரையும் ஆச்சாரியார் இருவரையும் தவிர்த்து அடுத்த நிலையிலுள்ள ஆற்றல் மிக்க வீரனை ஒதுக்கி வைத்துவிட்டாரே! அவர், தான் விரும்பிய வேளையில் மட்டும் சாவினை ஏற்கலாம்! அவ்வாறானால் இந்த சூரியனின் மைந்தன் இந்தப் போரிலிருந்து முற்றாக விலகியிருக்க வேண்டுமா?

**கர்ண:** தம்பி அர்ச்சுனனின் விதி அவனைக் காக்கிறது போலும்! நான் போரிட நேர்ந்தால் என் தம்பியின் உயிர் என் கைகளினாலன்றோ பறிக்கப்படவேண்டி ஏற்படும்!

**கிருஷ்:** உன் தம்பி அர்ச்சுனனைக் கொல்வது உனக்கு மகிழ்ச்சி தருமா கர்ணா?

**கர்ண:** மகிழ்ச்சியோ அல்லது வேறு உணர்ச்சியோ எழுவதற்கு இங்கு இடமில்லை வாசுதேவா! நான் என் கடனைத் தீர்க்கக் கடமைப்பட்டவன்!

**கிருஷ்:** போரில் ஈடுபட முடியாத நிலையில் உன் கடனை எவ்வாறு அடைக்கப் போகிறாய்?

**கர்ண:** அதனைத்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். துரியோதனனுக்கு நான் செலுத்தவேண்டிய கடனை அடுத்த பிறவிக்கு ஒத்தி வைக்க நான் விரும்பவில்லை. தளபதி எனக்கு போரிட அனுமதி அளிக்காதமையினால், நான் இங்கிருந்து போர்க் காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருப்பதைத் தவிர வேறு வழியில்லை!

**கிருஷ்:** அவ்வாறானால் உன் தம்பிமாரின் கூடாரத்திலிருந்து பார்க்கலாமே!

**கர்ண:** அவ்வாறு நான் செய்வது சரியல்ல என்பதை தாங்கள் அறிவீர்கள்!

**கிருஷ்:** ஏன் அவ்வாறு கருதவேண்டும்?

**கர்ண:** போர் முனையில் உயிர்விடப் பயந்தவன் எதிரியின் பாசறையில் போய்ப் பதுங்கிவிட்டான் என்று கூறுவார்களே! ராதேயின் மைந்தன் நன்றி மறந்துவிட்டான் என்பார்கள். எனக்கு ஆதரவாக எவருமே இல்லாத நிலையில் துரியோதனன் எனக்கு மதிப்பளித்து கௌரவித்தான். அவனுக்கு நட்புரிமை கொண்டாட நானிருக்க வேண்டிய நிலையில் அவனைவிட்டு எதிரணியில் நான் போயிருப்பது நல்லதா கண்ணா? அர்ச்சுனனின் கணைகளை நான் என் மார்பில் ஏற்கச் சித்தமாயுள்ளேன்! ஆனால் என்னை எவரும் இழிவுபடுத்துவதை நான் தாங்கமாட்டேன். ஆகவே எக்காரணங் கொண்டும் நான் அங்கு வரமுடியாது. என்னை அங்கு அழைக்காதீர்கள்!

**கிருஷ்:** ஏன் அழைக்கலாகாது..?

**கர்ண:** வாசுதேவா! அங்கு திரௌபதி இருக்கிறாள்! நான் அந்த ஆண்டவனையே எதிர்கொள்ள ஆயத்தமாக இருக்கிறேன்! ஆனால் அந்தக் கற்பின் கொழுந்தை என்னால் இன்று எதிர்கொள்ள முடியாது. அவளை அடாத தூஷணை வார்த்தைகளால் இந்தப் பாவி தூஷித்துவிட்டேன்! அன்று எனக்கு என்னதான் நடந்தது என்று என்னால் கூற முடியாதிருக்கிறது வாசுதேவா! அவளைத் தூஷித்தமைக்காக நான் இன்று என்னையே சபித்துக்கொண்டிருக்கிறேன் கண்ணா! எனக்கு இதற்கு மன்னிப்பே கிடையாது கண்ணா...!

**கிருஷ்:** தான் செய்த தவறை எவனொருவன் உணர்ந்து அதற்காக வருந்துகிறானோ அவனுக்கு சொர்க்க வாசல் திறந்திருக்கும் கர்ணா! குந்தியின் மூத்த மைந்தனே! நான் போய் வரட்டுமா? என்னை காணாமல் அவர்கள் கவலையுடன் இருப்பார்கள்.

கிருஷ்ணர் முன் நடந்து பின் திரும்பி–

**கிருஷ்:** கர்ணா! அர்ச்சுனனுடன் போரிட வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தால்...?

**கர்ண:** ஆண்டவனே அவனைக் காப்பாற்ற வேண்டும் வாசுதேவனே!

-காட்சி மாற்றம்-

அர்ச்சுனன் பாசறை.

**அர்ச்:** கேசவா! இதுவரை எங்கே போயிருந்தீர்கள்?

**கிருஷ்:** நாளை போர் தொடங்குகிறது. பலரையும் காணச் சென்றேன். ஆச்சாரியார்மாரைக் கண்டேன். பீஷ்மரையும் கண்டேன். தனது தனிப்பட்ட அன்பை உன்னிடம் கூறச் சொன்னார். எல்லோரும் உன்மீது அன்பு பூண்டுள்ளனர். அங்கிருந்து கர்ணனின் விடுதி சென்றேன்.

**அர்ச்:** அந்தச் சூத்திர புத்திரனிடம் என்னதான் வேலையோ?

**கிருஷ்:** அவனுடைய தந்தை பற்றி எனக்குக் கவலையே இல்லை! அவனைப் பற்றியதே எனது சிந்தனை! கங்கையின் மைந்தர் தொடர்ந்து தளபதியாக இருக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை. அப்போதுதான் கர்ணன் போர்க்களம் வரமாட்டான். அவனிடம் உள்ள ஓர் அஸ்திரம் உனக்குப் பேரபாயத்தை விளைவிக்கக்கூடியது. அதனால்தான் கர்ணன் போர்க்களம் வராதிருப்பதை நான் விரும்புகிறேன்.

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

Regd. as a News Paper at the G.P.O.(PRO/7/95)

அருள் ஜுவலர்ஸ்
436331
வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11



Kala
JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11
433686

## உழைப்பதே வாழ்க்கை

பெண்களுக்கான சம உரிமை என்ற முழக்கங்கள் உலகெங்கும் எதிரொலித்தாலும் ஆபிரிக்க பெண்கள் நிலை மோசம்தான்.

வறுமைக்கு எதிராக தினமும் போராடவேண்டியிருக்கிறது குழந்தைகளோடு விளையாட நேரம் இல்லை. முதுகில் உள்ள குழந்தை தானாக தூங்கியபின்னர்தான் வேலை முடிகிறது வாழ்க்கை விடிகிறபோதுதான் குழந்தைகளோடு சந்தோசத்தை பகிரக்கூடியதாக இருக்கும்.

வறுமையோடு போராடும் உழைக்கும் பெண்கள் தம் நாட்டிலும் இருக்கிறார்கள். விடிவு எப்போது?

## இந்த அளவு போதுமா?



தருவது லியோட

## 'குடிமக்களுக்கு' ஒரு அழைப்பு

'குடி குடியைக் கெடுக்கும்' என்ற அறிவித்தல் வெறும் சம்பிரதாயமாக இருக்கிறது. [illegible]

[illegible]







## பாருக்குள் இது பெரிது-கொடிது

'பாம்பென்றால் படை நடுங்கும்'

[illegible]

## அடி - விசா கையத் தட்டு

பொப்பிசைப் புயல் மைக்கேல் ஜாக்சன் மீது ஒரினச் சேர்க்கை பிரியர் என்று புகார்கள் கிளம்பின. அது பொய் என்று மறுக்கிறார் மைக்கல் ஜாக்சனின் மனைவி லிசா. "அவரும் நானும் படு சந்தோசமாய் பொழுதைக் கழிக்கிறோம். எல்லா அதிகபட்ச ஈடுபாட்டோடு மைக்கல் இருக்கிறார். புகார்கள் உண்மையானால் அவ்வாறான ஒருவரால் நிச்சயம் ஒரு பெண்ணை நேசிக்கவோ சந்தோசமாக வைத்திருக்கவோ முடியாது என்று" தனது வாதத்திற்கு ஆதாரம் சொல்கிறார் லிசா.





காதலியோடு சில்வெஸ்டர்

## என்னவர் நல்லவரே!

[illegible]

## பரிவோடு குறும்பு

வெளிநாடுகளில், நாய்கள், பூனைகள் வளர்ப்பு சமூக அந்தஸ்தின் ஒரு அடையாளமாகிவிட்டது.

நாய்க்கு ஒரு வசதியான அறை இல்லாவிட்டால் வீட்டுக்கு மதிப்பில்லை என்றாகிவிட்டது.

பிரிய நாய் அல்லது பூனை, அவை செய்யும் குறும்புகள், சாகசங்கள் பற்றி பேசுவது பொழுதுபோக்கு.

இந்த தொலைக்காட்சி நடிகை குறும்பு செய்யும் தனது நாயைப் பற்றி [illegible] ஒரு புகைப்படம் எடுத்து வெளியிட்டிருக்கிறார். திருப்தியான காரியம்.





[illegible]